தமிழரசு

Tamilarasu

(Monthly)

நவம்பர் 2024 (November 2024)
விலை ரூ.30/– (Price Rs.30/-)

தமிழ்நாடு அரசு
செய்தி – மக்கள் தொடர்புத்துறையின் வெளியீடு

மலர் (Vol.) : 55
இதழ் (Issue) : 5

பசும்பொன் தெய்வத்திருமகனார் உ.முத்துராமலிங்கத்தேவர் அவர்களின் 117வது பிறந்தநாள் மற்றும் 62வது குருபூஜை

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் மாலை அணிவித்து மலர்தூவி மரியாதை...

(30.10.2024)

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.**மு.க.ஸ்டாலின்** அவர்கள்
நாமக்கல் மாவட்டத்தில் ரூ.146.56 கோடி மதிப்பீட்டில் 16,031 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். (22.10.2024)

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.**மு.க.ஸ்டாலின்** அவர்கள்
இராமநாதபுரம் மாவட்டம் பசும்பொன்னில் ரூ.1.55 கோடி செலவில்
தெய்வீகத் திருமகனார் முத்துராமலிங்கத் தேவர் அவர்களின் நினைவிடத்தில் புதியதாக அமைக்கப்பட்டுள்ள அரங்கத்தினை திறந்து வைத்தார்.(28.10.2024)

தமிழரசு

தமிழ்நாடு அரசு
செய்தித்துறையின் வெளியீடு

திருவள்ளுவர் ஆண்டு 2055
குரோதி வருடம் - ஐப்பசி - கார்த்திகை
நவம்பர் 2024

மலர் : 55 விலை ரூ.30 இதழ் : 05

ஆசிரியர் - வெளியிடுபவர்
மரு. **இரா.வைத்திநாதன்,** இ.ஆ.ப.,
இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்பு மற்றும்
அலுவலால் அரசு துணைச் செயலாளர்

நிருவாக ஆசிரியர்
இரா. அண்ணா
இணை இயக்குநர் (வெளியீடுகள்)

முதன்மைப் பொறுப்பாசிரியர் /
உதவி இயக்குநர்
க.அ. முகம்மது ரசூல்
உதவி இயக்குநர்

பொறுப்பாசிரியர்கள் /
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்கள்
எஸ். உதயா கதிரவன்
ப. கருணாகரன்
ச. மஞ்சுளா

பிழைதிருத்தம் மேற்கொள்பவர்
த. ஷேக்முகமது
த. பிரியா

உதவி ஆசிரியர்கள்
மு. மணிமேகலை
இரா. பாலாஜி
கு. சுபாஷ்

நிருபர்கள்
எஸ்.ஆர்.எஸ்.ஸ்ரீந்தர்
ஜெ.ஜெயசிம்ஹன்

முதுநிலை ஓவியர்
ரா. சாமுண்டீஸ்வரி

ஓவியர்
இரா. உமாமகேஸ்வரி

இதழ் உதவியாளர்
நி. ஷீலா

கணினிவழி வடிவமைப்பாளர்கள்
தி. ஜெய்சங்கர்
க.இரா. உமாமகேஸ்வரி

தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம்,
எண்.5, இராஜீவ் காந்தி சாலை,
கானகம், தரமணி, சென்னை-600 113.
தொலைபேசி : 22542221/22542224
மின்னஞ்சல் : ddpub.tamilarasu@tn.gov.in
இணையதளம் : www.tndipr.gov.in

தமிழரசு இதழுக்கு
www.tamilarasu.org என்ற இணையதளத்தில்
சந்தா தொகையினை நேரடியாகச் செலுத்தலாம்.

கருமஞ் சிதையாமற் கண்ணோட வல்லார்க்
குரிமை உடைத்திவ் வுலகு. (குறள்- 578)

கடமை தவறாமையிலும், கருணை பொழிவதிலும் முதன்மையாக இருப்போருக்கு இந்த உலகமே உரிமையுடையதாகும்.
– திருக்குறள் **கலைஞர்** உரையிலிருந்து...

இந்த இதழில்...

★ ரூ.46 கோடிச் செலவில் உலகத்தரத்துடன் அமைக்கப்பட்டுள்ள "கலைஞர் நூற்றாண்டு பூங்கா" 4

★ நாமக்கல் மாவட்டத்தில் ரூ.146.56 கோடி மதிப்பீட்டில் 16,031 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் 7

★ "முதலமைச்சர் கோப்பை-2024" விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்ற அணிகளுக்கு முதலமைச்சர் கோப்பை 20

★ வடகிழக்குப் பருவமழை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் "களப்பணிகள்" 30

★ ரூ.3.60 கோடியில் வெண்ணி காலாடி, குயிலி, எத்தலப்பர் நாயக்கர் ஆகியோர்களுக்குத் திருவுருவச்சிலைகள் 44

★ வடகிழக்குப் பருவமழை மீட்பு நடவடிக்கைகள் மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் நேரில் ஆய்வு 49

★ "தமிழ் நாடு மலையேற்றத் திட்டம்" 51

★ பெண்களின் பாதுகாப்பிற்கான "இளஞ்சிவப்பு ஆட்டோக்கள் திட்டம்" 56

★ தாட்கோ நலத்திட்டங்கள் 57

★ தமிழ்நாடு அரசின் போட்டித் தேர்வுகள் பயிற்சி மையங்கள் 74

★ தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் பயிற்சி வினா விடைத்தாள் 76

முதலாம் பக்க அட்டை

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்,
30.10.2024 அன்று, பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களின் 117ஆவது பிறந்த நாள் மற்றும் குரு பூஜையை முன்னிட்டு, இராமநாதபுரம் மாவட்டம், பசும்பொன்னில் அமைந்துள்ள அன்னாரது நினைவிடத்தில் மலர் மாலை அணிவித்து, மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள : tndiprnews DIPR TN tndipr TN DIPR www.dipr.tn.gov.in

ரூ.46 கோடி செலவில் உலகத்தரத்துடன் அமைக்கப்பட்டுள்ள

"கலைஞர் நூற்றாண்டு பூங்கா"

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 07.10.2024 அன்று சென்னை, கதீட்ரல் சாலையில் தோட்டக்கலைத் துறையின் 6.09 ஏக்கர் நிலத்தில், ரூ.46 கோடி செலவில் தோட்டக்கலை அருங்காட்சியகம் உள்ளிட்ட பல்வேறு பொழுதுபோக்கு அம்சங்களுடன் நவீன முறையில் அமைக்கப்பட்டுள்ள உலகத்தரத்திலான கலைஞர் நூற்றாண்டு பூங்காவைப் பொதுமக்கள் பயன்பாட்டிற்காகத் திறந்து வைத்தார்.

தமிழ்நாட்டின் இயற்கைச் சூழலை பாதுகாத்திடவும், வனப்பரப்பை அதிகப்படுத்தும் நோக்கிலும், 2 கோடியே 80 இலட்சம் மரக்கன்றுகளை நட்டுப் பசுமை தமிழ்நாடு இயக்கத்தைத் தொடங்கி வைத்து, பள்ளிக்கரணையில் 2.5 ஹெக்டேர் நிலப்பரப்பில் ரூ.20 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்ட சதுப்புநில சூழலியல் பூங்கா, சென்னை செனாய் நகரில் மெட்ரோ இரயில் கட்டுமானத்திற்குப் பின்னர் ரூ.18கோடிச் செலவில் மறுசீரமைக்கப்பட்ட திரு.வி.க. பூங்கா, சென்னை கிண்டியில் ரூ.30 கோடி செலவில் புனரமைக்கப்பட்ட கிண்டி சிறுவர் இயற்கைப் பூங்கா, திருவண்ணாமலை, ஆதி அண்ணாமலை மலையின் அடிவாரத்தில் கலைஞர் நூற்றாண்டு தோட்டக்கலைப் பூங்கா ஆகிய பூங்காக்கள் திறந்து வைக்கப்பட்டுள்ளதுடன், கோயம்புத்தூர், காந்திபுரம் மத்திய சிறைச்சாலை வளாகத்தில் 165 ஏக்கர் பரப்பளவிலான செம்மொழிப் பூங்கா, சென்னை – புழல், ரெட்டேரி, கொளத்தூர் ஏரிக்கரைகளில் புதிய பூங்காக்கள் அமைத்து ஏரிக்கரைகளை மேம்படுத்தும் பணிகள், ஏற்காடு, மாதவரம் பூங்காக்களை தலா ரூ.5 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தும் பணிகளுக்கு அடிக்கல் நாட்டப்பட்டு, அங்கு பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன. இவைமட்டுமின்றி பெருநகரச் சென்னை மாநகராட்சி, நகராட்சி நிருவாகத் துறை, சுற்றுச்சூழல் துறை, தோட்டக்கலைத் துறைகளின் வாயிலாகவும் புதிய பூங்காக்களை உருவாக்குதல், பழைய பூங்காக்களை புனரமைத்தல் போன்ற பல்வேறு முனைப்பான நடவடிக்கைகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களின்

தலைமையிலான அரசு மேற்கொண்டு வருகிறது.

கலைஞர் நூற்றாண்டு பூங்கா

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 15.08.2023 அன்று சுதந்திர தின விழாவில், தலைமைச் செயலகக் கோட்டை கொத்தளத்தில் தேசியக்கொடியை ஏற்றி வைத்து உரையாற்றிய போது "சென்னை கதீட்ரல் சாலையில் உள்ள செங்காந்தள் பூங்காவிற்கு அருகில் உள்ள 6.09 ஏக்கர் நிலத்தில் கலைஞர் நூற்றாண்டு பூங்கா ஒன்று அமைக்கப்படும்" என்ற அறிவிப்பை வெளியிட்டார்.

ஐந்து முறை தமிழ்நாட்டின் முதலமைச்சராக இருந்தவரும், 13 முறை சட்டமன்றத் தேர்தலில் போட்டியிட்டு 13 முறையும் வெற்றி பெற்றவரும், தமிழ்நாடு சட்டமன்ற மேலவை உறுப்பினராகவும், தமிழ்நாட்டின் அரசியல் தலைவராக மட்டுமல்லாமல் இந்திய அரசியலின் திசையை தீர்மானிப்பவராகவும் திகழ்ந்த நூற்றாண்டு நாயகர் முத்தமிழறிஞர் கலைஞரின் பன்முக ஆற்றலையும், அவர் படைத்தளித்த மக்கள் நலத்திட்டங்களையும், சமுதாயத்தில் அதன் தாக்கத்தையும் வருங்காலங்களில் தமிழ்நாட்டு மக்கள் என்றென்றும் நினைவில் கொள்ளும் வகையில் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா மாநிலம் முழுவதும் தமிழ்நாடு அரசால் சிறப்பாக கொண்டாடப்பட்டது.

அதன் தொடர்ச்சியாக, தமிழ் வளர்ச்சிக்கும், இலக்கியம், கலை, கலாச்சார வளர்ச்சிக்கும், அடித்தட்டு மக்களின் எழுச்சிக்கும் ஒரு நூற்றாண்டு வாழ்ந்து தமிழர்தம் வாழ்வில் நீங்கா இடம் பிடித்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவைப்போற்றும் விதமாகச் சென்னை, கோபாலபுரம், கதீட்ரல் சாலையில் செம்மொழிப் பூங்காவிற்கு எதிரில் கலைஞர் நூற்றாண்டு பூங்கா அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இதனைத்தொடர்ந்து, நெடு நீண்ட சட்ட போராட்டத்திற்குப் பிறகு அரசால் மீட்கப்பட்டுத் தோட்டக்கலை துறைக்கு மாற்றப்பட்ட சென்னை, கதீட்ரல் சாலையில் உள்ள நிலத்தில் உலகத்தரம் வாய்ந்த பூங்காவினை அமைத்திட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 27.02.2024 அன்று அடிக்கல் நாட்டப்பட்டது.

அதன்படி, பரந்து விரிந்த பசுமைச்சூழலில் பொழுதுப்போக்கு அம்சங்களுடன் பல்வேறு வகையான அழகிய, அரியவகை தாவரங்கள், மரங்களைக் கொண்டதாக உலகத்தரத்துடன் அமைக்கப்பட்டுள்ள கலைஞர் நூற்றாண்டு பூங்காவை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்றைய தினம் பொதுமக்கள் பயன்பாட்டிற்காகத் திறந்து வைத்து, பார்வையிட்டார். பின்னர், கலைஞர் நூற்றாண்டு பூங்காவில் உயர்தர தோட்டக்கலை அருங்காட்சியகம், ஆர்க்கிட் குடில், கண்ணாடி மாளிகை, அலங்கார வளைவு பசுமைக் குகை, பறவையகம், இசை நீரூற்று போன்றவற்றை வடிவமைத்தவர்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சான்றிதழ்களை வழங்கிச் சிறப்பித்தார்.

கலைஞர் நூற்றாண்டு பூங்காவின் சிறப்பம்சங்கள்

இயற்கை எழில்மிகு சூழலுடன் கூடிய இப்பூங்காவின் நுழைவாயில் அருகில் உயர்தர தோட்டக்கலை அருங்காட்சியகம், 500 மீட்டர் நீளமுடைய ஜிப்லைன், பார்வையாளர்களை படம்பிடிக்கும் கலைஞர்களின் கலைக்கூடம், தொடர் கொடி வளைவுப்பாதை, 120 அடி நீளமுடைய பனிமூட்டப் பாதை, 2600 சதுர அடியில் அமைக்கப்பட்டுள்ள ஆர்க்கிட் குடில், அரிய வகை, கண்கவர் பூச்செடிகளால் காட்சிப்படுத்த 16 மீட்டர் உயரமுடைய 10,000 சதுர அடிப் பரப்பில் அமைக்கப்பட்டுள்ள கண்ணாடி மாளிகை, அயல்நாட்டு

பறவைகளைக் கொண்ட பறவையகம், 23 அலங்கார வளைவு பசுமை குகை, சிற்றுண்டியகம், சூரியகாந்தி கூழாங்கல் பாதை, மர வீடு, அருவி, இசை நீரூற்று, குழந்தைகள் விளையாடும் இடம், பசுமை நிழற்கூடாரம் பாரம்பரிய காய்கறித்தோட்டம் ஆகிய சிறப்பு அம்சங்களுடன் அமைக்கப்பட்டுள்ளது.

இவற்றுடன் இப்பூங்காவில் உள்ள சுவர்களில் தீட்டப்பட்டுள்ள சுவரோவியங்கள் பூங்காவை மேலும் அழகுபடுத்துகின்றன.

இப்பூங்காவினைப் பார்வையிட நுழைவுக்கட்டணம் பெரியவர்களுக்கு ரூ.100/-, சிறியவர்களுக்கு ரூ.50/- என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதர சிறப்பு அம்சங்களைப் பார்வையிட தனியே கட்டணம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஜிப்லைனில் ஏறி சாகச பயணம் மேற்கொள்ள பெரியவர்களுக்கு ரூ.250/- சிறியவர்களுக்கு ரூ.200/-, குழந்தைகள் மடியில் அமர்ந்து செல்ல ரூ.150/- என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

பறவையகத்தில் பல்வேறு வெளிநாட்டு பறவைகளைப் பார்வையிட, உணவளித்து மகிழ்ந்திட பெரியவர்களுக்கு ரூ.150/- சிறியவர்களுக்கு ரூ.75/-, மாலை நேரத்தில் இசை நீருற்றின் கண்கவர் நடனத்தை காண பெரியவர்களுக்கு ரூ.50/- சிறியவர்களுக்கு ரூ.50/-, கண்ணாடி மாளிகையில் அரிய வகை செடிகளைப் பார்வையிட பெரியவர்களுக்கு ரூ.50/- சிறியவர்களுக்கு ரூ.40/- எனக் கட்டணம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

குழந்தைகள் பங்குபெறும் ஒரு சவாரி விளையாட்டுக்கு ரூ.50/- எனவும், புகைப்படக் கருவிகளுக்கு (Camera) ரூ.100/- எனவும், ஒளிப்பதிவு கருவிகளுக்கு (Video Camera) ரூ.5,000/- எனவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்நுழைவுக் கட்டணங்கள் மூன்று மணி நேரத்திற்கு மட்டுமே செல்லத்தக்கது.

இப்பூங்காவிற்கான நுழைவுச் சீட்டினையும், நுழைவுக்கட்டணம் குறித்தான தகவல்களையும் https://tnhorticulture.in/kcpetickets என்ற இணையதளத்தின் வாயிலாக பெறலாம். மேலும், விரைவுத்தகவல் குறியீடு மூலமும் நுழைவுச் சீட்டினைப் பெற வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

நாமக்கல் மாவட்டத்தில் ரூ.146.56 கோடி மதிப்பீட்டில் 16,031 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் வழங்கினார்.

நாமக்கல் மாவட்டத்தில் ரூ.298.02 கோடி செலவிலான முடிவுற்ற பணிகளைத் திறந்து வைத்து, ரூ.365.69 கோடி மதிப்பீட்டிலான புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, ரூ.146.56 கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை 16,031 பயனாளிகளுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 22.10.2024 அன்று நாமக்கல் மாவட்டம், பொம்மை குட்டைமேட்டில் நடைபெற்ற அரசு விழாவில், 298 கோடியே 2 இலட்சம் ரூபாய் செலவில் 134 முடிவுற்ற பணிகளைத் திறந்து வைத்து, 365 கோடியே 69 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான 140 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, 16,031 பயனாளிகளுக்கு 146 கோடியே 56 இலட்சம் ரூபாய் செலவிலான அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

நாமக்கல் மாவட்டத்தைச் சேர்ந்த முடிவுற்ற பணிகளைத் திறந்து வைத்தல்

சட்டத்துறை சார்பில் நாமக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலகப் பெருந்திட்ட வளாகத்தில் 101 கோடியே 19 இலட்சம் ரூபாய் செலவில் அரசு சட்டக் கல்லூரிக்கான புதிய கட்டடம் மற்றும் மாணவ, மாணவியர்களுக்கான விடுதிக் கட்டடங்கள்;

நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பில் நாமக்கல்லில் 19 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் டாக்டர் கலைஞர் நூற்றாண்டுப் பேருந்து நிலையம், வேலூர் பேரூராட்சி, கந்த நகரில் 1 கோடியே 47 இலட்சம் ரூபாய் செலவிலும்,

எருமைப்பட்டி பேரூராட்சியில் 1 கோடியே 20 இலட்சம் ரூபாய் செலவிலும், திருச்செங்கோடு நகராட்சி, சந்தைப்பேட்டையில் 4 கோடியே 31 இலட்சம் ரூபாய் செலவிலும் புதிய வாரச் சந்தைகள்; திருச்செங்கோடு நகராட்சி, சந்தைப்பேட்டை பகுதியில் உள்ள வாரச் சந்தை முன்புறத்தில் 3 கோடியே 6 இலட்சம் ரூபாய் செலவில் கடைகள், என 29 கோடியே 54 இலட்சம் ரூபாய் செலவில் 5 முடிவுற்ற பணிகள்;

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பில் தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்தின் (தாட்கோ) மூலம் முள்ளுக்குறிச்சி ஊராட்சியில் 4 கோடியே 60 இலட்சம் ரூபாய் செலவில் 300 பழங்குடியினர் மாணவர் தங்கும் விடுதிக் கட்டடம்;

கிராம ஊராட்சி செயலகங்கள்

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சார்பில் கிளாப்பாளையம், முகாசி கிளாப்பாளையம், கீழக்கடை, நவலடிப்பட்டி, பாலநாயக்கன்பாளையம், வெங்கமேடு, முத்துக்காளிப்பட்டி, சிங்களாந்தபுரம் ஆகிய ஊராட்சி ஒன்றியத் தொடக்க, நடுநிலைப்பள்ளி 2 கோடியே 12 இலட்சத்து 12 ஆயிரம் ரூபாய் செலவில் பள்ளிக் கட்டடங்கள், கூடுதல் வகுப்பறைக் கட்டடங்கள்;

வேலகவுண்டம்பட்டி, எர்ணாபுரம், தளிகை, வீசாணம், கோதூர், ஏளூர் ஆகிய ஊராட்சிகளில் 55 இலட்சத்து 14 ஆயிரம் ரூபாய் செலவில் நியாய விலைக் கடைகள்;

பழையபாளையம், வடவத்தூர், வரகூர், வள்ளிபுரம் ஆகிய ஊராட்சிகளில் 1 கோடியே 62 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் செலவில் கிராம ஊராட்சிப் செயலகங்கள்;

பழையபாளையம், மற்றும் பொட்டிரெட்டிப்பட்டி ஊராட்சிகளில் 19 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய் செலவில் தொழிற்கூடங்கள்; எஸ். பழையபாளையம் ஊராட்சியில் 14 இலட்சத்து 59 ஆயிரம் ரூபாய் செலவில் தானியக் கிடங்கு சேமிப்புக் கட்டடம்;

அங்கன்வாடிக் கட்டடங்கள்

செவிந்திபட்டி, மொரங்கம், செண்பகமாதேவி, அணியாபுரம், கொமரபாளையம் ஊராட்சியில் சின்னதம்பி பாளையம் மற்றும் சங்கரம்பாளையம் உள்ளிட்ட 48 இடங்களில் 6 கோடியே 41 இலட்சத்து 74 ஆயிரம் ரூபாய் செலவில் அங்கன்வாடி மையக் கட்டடங்கள்;

நல்லாகவுண்டம்பாளையத்தில் 14 இலட்சத்து 8 ஆயிரம் ரூபாய் செலவில் உணவு தானியக்கிடங்குக் கட்டடம்; கருங்கல்பட்டி முதல் மேட்டுப்பட்டி சாலையில் திருமணிமுத்தாறு ஆற்றின் குறுக்கே 4 கோடியே 34 இலட்சத்து 27 ஆயிரம் ரூபாய் செலவில் பாலம்;

கோட்டபாளையம், திண்டமங்கலம், கொமரபாளையம், தொட்டிபட்டி, ஏளூர் மற்றும் எஸ்.இறையமங்கலம் ஆகிய ஊராட்சிகளில் 1 கோடியே 55 இலட்சத்து 36 ஆயிரம் ரூபாய் செலவில் ஊராட்சி மன்றக் கட்டடங்கள்;

மொரங்கம், வீரணம்பாளையம், செல்லப்பம்பட்டி, ராமதேவம் ஆகிய ஊராட்சிகளில் 51 இலட்சத்து 99 ஆயிரம் ரூபாய் செலவில் பொது விநியோகக் கட்டடங்கள்;

வேளாண்மைச் சேமிப்புக் கிடங்குகள்

பெரமாண்டம்பாளையம், மணப்பள்ளி, செங்கப்பள்ளி, காளிபாளையம், மாடகாசம்பட்டி, கூடச்சேரி, அரசபாளையம் ஆகிய ஊராட்சிகளில் 84 இலட்சத்து 59 ஆயிரம் ரூபாய் செலவில் வேளாண்மை சேமிப்புக் கிடங்குகள்;

திண்டமங்கலம் ஊராட்சி, அப்பநாயக்கன் பாளையத்தில் 6 இலட்சம் ரூபாய் செலவில் சமுதாயக்கூடம்; வேட்டாம்பாடி உயர்நிலைப் பள்ளியில் 5 இலட்சத்து 86 ஆயிரம் ரூபாய் செலவில் பொருள் வைப்பறையுடன் கூடிய சமையல்கூடம்;

பள்ளிபாளையம் அக்ரஹாரம் ஊராட்சி, குமரன் நகர் ஓடையின் குறுக்கே 4 கோடியே 10 இலட்சம் ரூபாய் செலவிலும், களியனூர் ஊராட்சி, மணல் தோப்பு ஓடையில் 1 கோடியே 97 இலட்சத்து 28 ஆயிரம் ரூபாய் செலவிலும் உயர்மட்டப் பாலங்கள்;

நல்லூர் ஊராட்சியில் 50 இலட்சம் ரூபாய் செலவில் ஆரம்ப சுகாதார நிலையம்; பாப்பிநாயக்கன்பட்டி ஊராட்சி, முள்ளம்பட்டி மற்றும் தாத்தையங்கார்பட்டி ஆகிய இடங்களில் 1 கோடியே 35 இலட்சத்து 88 ஆயிரம் ரூபாய் செலவில் மகளிர் சுய உதவிக் குழு கட்டடங்கள்; திருமலைப்பட்டி ஊராட்சியில் 35 இலட்சம் ரூபாய் செலவில் துணை சுகாதார நிலையம்; தத்தாதிரிபுரம் ஊராட்சி, சேவாகவுண்டத்தில் உள்ள பொது விநியோக விற்பனை நிலையக் கூடத்தில் 9 இலட்சத்து 16 ஆயிரம் ரூபாய் செலவில் தானியக் கிடங்கு; காக்காவேரி ஊராட்சியில் 12 இலட்சத்து 70 ஆயிரம் ரூபாய் செலவில் நியாய விலைக் கடை, பூசாரிபாளையத்தில் 10 இலட்சம் ரூபாய் செலவில், பால் உற்பத்தியாளர் கூட்டுறவு கட்டடம், என 27 கோடியே 17 இலட்சம் ரூபாய் செலவில் 99 முடிவுற்றப் பணிகள்;

அறிவியல் ஆய்வகக் கட்டடங்கள்

பள்ளிக்கல்வித் துறை சார்பில் நாமக்கல் மாவட்டம், தம்மநாயக்கன்பட்டி, காரைகுறிச்சிபுதூர், இராமாபுரம், வெப்படை, ஆர்.புதுப்பட்டி, ஆண்டாபுரம், சிங்கிலியன்கோம்மை, போடிநாயக்கன்பட்டி, சந்திரசேகரபுரம், சின்னமுதலைப்பட்டி ஆகிய 10 அரசு உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளில் 12 கோடியே 91 இலட்சத்து 30 ஆயிரம் ரூபாய் செலவில் கூடுதல் வகுப்பறைக் கட்டடங்கள், அறிவியல் ஆய்வகக் கட்டடங்கள்;

பால்வளத் துறை சார்பில் நாமக்கல்லில் மாவட்டக் கூட்டுறவுப் பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்திற்கு 2 கோடியே 95 இலட்சத்து 73 ஆயிரம் ரூபாய் செலவில் புதிய நிருவாக அலுவலகக் கட்டடம், மல்லசமுத்திரம், எலச்சிப்பாளையம் வட்டங்களில் 34 இலட்சத்து 42 ஆயிரம் ரூபாய் செலவில்

பால் குளிரூட்டும் நிலையங்கள், என 3 கோடியே 30 இலட்சம் ரூபாய் செலவிலான 3 முடிவுற்றப் பணிகள்;

கால்நடை பராமரிப்புத் துறை சார்பில் அய்யம்பாளையத்தில் 48 இலட்சத்து 35 ஆயிரம் ரூபாய் செலவிலும், சேந்தமங்கலம், நடுகோம்பையில் 53 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் செலவிலும் புதிய கால்நடை மருந்தகக் கட்டடங்கள், நாமக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலகப் பெருந்திட்ட வளாகத்தில் 2 கோடியே 25 இலட்சம் ரூபாய் செலவில் உட்கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய விவசாயிகளுக்கான கள கண்காணிப்பு மற்றும் தகவல் மையக் கட்டடம், என 3 கோடியே 27 இலட்சம் ரூபாய் செலவில் 3 முடிவுற்ற பணிகள்;

செவிலியர் குடியிருப்புக் கட்டடம்

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில் மோகனூரில் தரம் உயர்த்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையத்தில் 33 இலட்சம் ரூபாய் செலவில் செவிலியர் குடியிருப்பு கட்டடம்;

வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை சார்பில் சேந்தமங்கலம் வட்டம், பேளுக்குறிச்சி ஊராட்சியில் 50 இலட்சம் ரூபாய் செலவில் மிளகு பதப்படுத்தும் மையம்; நாமக்கல் வட்டம், வசந்தபுரம் ஊராட்சியில் 84 இலட்சம் ரூபாய் செலவில் வேளாண் சந்தை நுண்ணறிவு மற்றும் விவசாயிகள் ஆலோசனை மையம்; பரமத்தி வட்டம், வீராணம்பாளையம் ஊராட்சியில், 34 இலட்சம் ரூபாய் செலவில் உலர்களத்துடன் கூடிய தரம் பிரிப்புக் கூடம்; நாமக்கல் மாநகராட்சியில் 1 கோடியே 25 இலட்சம் ரூபாய் செலவில் உயிரியல் கட்டுப்பாட்டு ஆய்வகம், என 2 கோடியே 93 இலட்சம் ரூபாய் செலவில் 4 முடிவுற்ற பணிகள்;

கூட்டுறவுத் துறை சார்பில் திருச்செங்கோடு வட்டத்தில் 13 இலட்சம் ரூபாய் செலவில் உணவு தானிய சேமிப்புக் கிடங்கு; கபிலர்மலை வட்டத்தில் 23 இலட்சத்து 59 ஆயிரம் ரூபாய் செலவில் வேளாண் வணிக மையம் மற்றும் எண்ணெய் பிழியும் அலகு, 12 இலட்சத்து 98 ஆயிரம் ரூபாய் செலவில் உணவு தானியச் சேமிப்பு கிடங்கு, 8 இலட்சத்து 25 ஆயிரம் ரூபாய் செலவில் எண்ணெய் பிழியும் கிடங்கு; நாமக்கல் மாநகராட்சியில் 19 இலட்சத்து 55 ஆயிரம் ரூபாய் செலவில் மிளகு பதனிடும் அலகு, என 77 இலட்சம் ரூபாய் செலவில் 5 முடிவுற்ற பணிகள்;

நெடுஞ்சாலைகள் துறை சார்பில் நபார்டு மற்றும் கிராம சாலை அலகின்கீழ் 87 கோடி ரூபாய் செலவில் நிலம் எடுப்பு மற்றும் நாமக்கல் புதிய பேருந்து நிலையத்தில் 25 கோடி ரூபாய் செலவில் அணுகு சாலை, என 112 கோடி ரூபாய் செலவில் 2 முடிவுற்ற பணிகள்;

என மொத்தம் 298 கோடியே 2 இலட்சம் ரூபாய் செலவில் 134 முடிவுற்ற பணிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

நாமக்கல் மாவட்டத்தில் புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டுதல்

நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை சார்பில் நாமக்கல் மாவட்டத்தில் 154 கோடியே 15 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான 57 புதிய திட்டப் பணிகள்;

பால்வளத் துறை சார்பில் நாமக்கல் மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தில் 89 கோடியே 30 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிய நவீனப் பால்பதன ஆலை நிறுவும் பணி;

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சார்பில் நாமக்கல் மாவட்டத்தில் 62 கோடியே 74 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான 64 புதிய திட்டப் பணிகள்;

நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பில் வேலூர், பொத்தனூர் பேரூராட்சிகளில் 29 கோடியே 64 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் குடிநீர் விநியோகத் திட்டங்களை மேம்படுத்தும் பணி; சேந்தமங்கலம் பேரூராட்சியில் உள்ள பிரதான குடிநீர் இணைப்புக் குழாய்களை 6 கோடியே 5 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மாற்றியமைக்கும் பணி; வேலூர் பேரூராட்சி, கார் தெரு பகுதி, எருமப்பட்டி பேரூராட்சி ஆகிய இடங்களில் 3 கோடியே

21 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தார் சாலை (களை) மேம்பாட்டுப் பணி; அத்தனூர், எருமப்பட்டி, சீராப்பள்ளி, காளப்பநாயக்கன்பட்டி ஆகிய பேரூராட்சிகளில் 5 கோடியே 1 இலட்சத்து 84 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் சிமெண்ட் சாலைகள் மேம்படுத்தும் பணி;

புதிய திட்டப் பணிகள்

சேந்தமங்கலம் பேரூராட்சியில் 1 கோடியே 24 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் வாரச் சந்தை அமைக்கும் பணி; பரமத்தி பேரூராட்சிப் பகுதியில் 1 கோடியே 20 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் சுகாதார நிலையம் கட்டும் பணி; நாமக்கல் மாநகராட்சியில் 4 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய வணிக வளாகம் கட்டும் பணி, என 50 கோடியே 35 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான 12 புதிய திட்டப் பணிகள்;

வணிகவரி மற்றும் பதிவுத் துறை சார்பில் நாமக்கல் மாவட்டம், நாமக்கல் வட்டத்தில் 1 கோடியே 85 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும், நாமகிரிப்பேட்டையில் 1 கோடியே 70 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும், இராசிபுரத்தில் 1 கோடியே 70 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும் சார் பதிவாளர் அலுவலகங்கள் கட்டும் பணி, என 5 கோடியே 25 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான 3 புதிய திட்டப் பணிகள்;

பொது நூலகக் கட்டடங்கள்

மாவட்ட முன்னோடி வங்கியின் மூலம் நாமக்கல் வட்டாரம், கோனூர் கிராமத்தில் 3 கோடியே 46 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஊரக சுய வேலைவாய்ப்புப் பயிற்சி நிறுவனம் கட்டும் பணி;

பள்ளிக் கல்வித் துறை சார்பில் எலச்சிபாளையம் வட்டம், திம்மராவுத்தம்பட்டி, குமரமங்கலம் ஆகிய இடங்களில் 44 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 2 பொது நூலகக் கட்டடங்கள்;

என மொத்தம் 365 கோடியே 69 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான 140 புதிய திட்டப் பணிகளுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

நாமக்கல் மாவட்டத்தில் பயனாளிகளுக்கு வழங்கப்படும் அரசு நலத்திட்ட உதவிகள்

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை சார்பில், இ-பட்டா மற்றும் இலவச வீட்டுமனைப் பட்டா; ஊரக வளர்ச்சித் துறை சார்பில், கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தில் வீடுகள் மற்றும் ஆணைகளை வழங்குதல், தமிழ்நாடு ஊரக வாழ்வாதார இயக்கத்தின் மூலம் 676 குழுக்களுக்கு நேரடி வங்கிக் கடன், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை சார்பில் பயிர்க்கடன், மத்தியக் காலக் கடன், மாற்றுத்திறனாளிகளுக்கான கடன், கால்நடைப் பராமரிப்புக் கடன், கலைஞர் கனவு இல்லத் திட்டத்திற்கான கடன்;

மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில், இணைப்புச் சக்கரங்கள் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர், பேட்டரியால் இயங்கும் சிறப்புச் சக்கர நாற்காலி, காதொலிக்கருவி, தையல் இயந்திரம் மற்றும் திறன் பேசி; வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை சார்பில், உணவு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பு இயக்கம், கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டம், தமிழ்நாடு சிறுதானிய இயக்கம், தமிழ்நாடு நவீனப் பாசனமயமாக்கல் திட்டம், நுண்ணீர்ப்பாசனத் திட்டம், பாரம்பரிய வேளாண் வளர்ச்சித் திட்டம், முதலமைச்சரின் மண்ணுயிர்க் காத்து மன்னுயிர் காப்போம் ஆகிய திட்டங்களின்கீழ் பயனாளிகளுக்கு உதவிகள்;

தோட்டக்கலைத் துறை சார்பில், கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் மேம்பாட்டுத் திட்டம், மாநிலத் தோட்டக்கலை வளர்ச்சித் திட்டம், நுண்ணீர்ப் பாசனத் திட்டம், பாரம்பரிய வேளாண் வளர்ச்சித் திட்டம், மானாவாரி பகுதி மேம்பாடு-ஒருங்கிணைந்த பண்ணையம், வேளாண் இயந்திரமாக்கல் துணைத் திட்டம் ஆகிய திட்டங்களின்கீழ்ப் பயனாளிகளுக்கு உதவிகள்;

வேளாண்மைப் பொறியியல் துறை சார்பில், துணை வேளாண்மை இயந்திரமயமாக்கல் திட்டம், சோலார் பம்ப்செட், பழைய மின்மோட்டார் மாற்றும் திட்டம், சூரிய கூடார உலர்த்தி, பவர் வீடர், கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் மேம்பாட்டுத் திட்டம், சோலார் டிரையர் ஆகிய திட்டங்களின் கீழ்ப் பயனாளிகளுக்கு உதவிகள்;

சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை சார்பில், முதலமைச்சரின் பெண் குழந்தை

பாதுகாப்புத் திட்டத்தில் பயனாளிகளுக்கு உதவிகள், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை சார்பில் மின்னணு குடும்ப அட்டைகள் வழங்குதல்,வருவாய்த் துறை சார்பில், சமூகப் பாதுகாப்புத் திட்டம், முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் கல்வி உதவித் தொகை, இயற்கை மரண உதவித் தொகை, விபத்து மரண உதவித் தொகை, திருமண உதவித் தொகை மற்றும் தற்காலிக இயலாமை ஓய்வூதியம்;

தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை சார்பில், விபத்து மரண உதவித் தொகை, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில் முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தில் காப்பீடு அட்டைகள் வழங்குதல், என பல்வேறு துறைகளின் சார்பில் மொத்தம் 16,031 பயனாளிகளுக்கு 146 கோடியே 56 இலட்சம் ரூபாய் செலவிலான அரசு நலத்திட்ட உதவிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை,

“தமிழன் என்றோர் இனமுண்டு! தனியே அவற்கொரு குணமுண்டு! அன்பே அவனுடை வழியாகும்! அமிழ்தம் அவனுடைய மொழியாகும்!” இந்த சிறப்புமிகு பாடலைத்தந்த எழுச்சிமிகு நாமக்கல் கவிஞர் இராமலிங்கனார் பிறந்த மண்ணில் மழைச் சாரல்கள் வீசும் இரம்மியமான இந்த மாலைப் பொழுதில் உங்களை எல்லாம் சந்திப்பதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்த நிகழ்ச்சிக்கு முன்னால், நாமக்கல் மாநகராட்சி சார்பில் அமைக்கப்பட்டிருக்கின்ற பூங்காவில் தலைவர் கலைஞர் அவர்களின் சிலையைத் திறந்து வைத்திருக்கிறேன். நாமக்கல் மாவட்டத்தில் அவர் சிலை அமைவது மிக மிகப் பொருத்தமான ஒன்று. ஏனென்றால், சேலம் மாவட்டத்தில் இருந்து 1997-ஆம் ஆண்டு புதியதாக நாமக்கல் மாவட்டத்தையே உருவாக்கியவர் தலைவர் கலைஞர் அவர்கள்தான். தலைநகரில் உள்ள செயின்ட் ஜார்ஜ் கோட்டையில் மாபெரும் கட்டடத்தை அமைத்து, அதற்கு ‘நாமக்கல் கவிஞர் மாளிகை’ என்று 50 ஆண்டுகளுக்கு முன்னால், பெயர் சூட்டியதும் நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள்தான். ஆரைக்கல் என்றும், நாமகிரி என்றும் அழைக்கப்பட்டு, இன்று நாமக்கல் எனப் பெயர் பெற்றுள்ள நகர் இது! லாரி கட்டமைப்பு மூலமாக, இந்தியா முழுமைக்கும் சரக்குப் போக்குவரத்திற்கு அடித்தளமாக விளங்குகின்ற மாவட்டம் இந்த நாமக்கல்!

கோழி வளர்ப்பு, முட்டை உற்பத்தி, சவ்வரிசி ஆலைகள் என்று பொருளாதாரத்தை வளர்க்கும் தொழில்களும், நன்செய், புன்செய் நிலங்களும் நிறைந்த செழிப்பான பூமி இது! வியர்வை சிந்தும் உழைப்பாளர்கள்,

மண்ணைப் போற்றும் உழவர்கள், பாட்டாளித் தோழர்கள், தொழில் முனைவோர்கள் என்று எல்லோரும் சமமாய் வாழக்கூடிய மாவட்டம் இந்த மாவட்டம்! சுருக்கமாகச் சொல்லவேண்டும் என்றால், தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு அடித்தளம் இந்த நாமக்கல்! அப்படிப்பட்ட இந்த மாவட்டத்தில் இந்த விழாவை மிகச்சிறப்பாக ஏற்பாடு செய்திருக்கும் நம்முடைய மாவட்டத்தின் அமைச்சர் மதிவேந்தன் அவர்களையும், மாநிலங்களவை உறுப்பினர் என்னுடைய அருமைத் தம்பி ராஜேஸ்குமார் அவர்களையும், மாவட்ட ஆட்சியர் உமா அவர்களையும், மாவட்டத்தின் அதிகாரிகள், அலுவலர்கள் அத்தனை பேரையும் நான் பாராட்டுகிறேன்! மனதார வாழ்த்துகிறேன்!

கள ஆய்வு

ஆதிதிராவிடர் நலத்துறைக்கு அருந்ததியர் சமுதாயத்தைச் சேர்ந்த மதிவேந்தன் அவர்கள் சமீபத்தில் பொறுப்பேற்றிருக்கிறார். புதிய பொறுப்பின் மூலமாக நம்முடைய திராவிட மாடல் அரசின் சிறப்பான முன்னெடுப்புகள் விளிம்பு நிலை மக்களுக்குச் சென்றடைவதை அவர் உறுதி செய்வார் என்று நான் நம்புகிறேன். அருந்ததியர் சமுதாய மக்களுக்கு தலைவர் கலைஞர் அவர்களால் வழங்கப்பட்ட 3 விழுக்காடு இட ஒதுக்கீட்டால் கடந்த 15 ஆண்டு காலமாக அவர்களின் கல்வி, வேலைவாய்ப்பு, பொருளாதார, சமூக மேம்பாட்டில் பெற்று வரும் மேன்மையைப் பார்க்கும்போது, அந்தச் சட்டத்தைச் சட்டமன்றத்தில் கொண்டு வந்தவன் என்ற முறையில் மகிழ்ச்சி அடைகிறேன்; பெருமைப்படுகிறேன்!

இந்த மாவட்டத்தின் வளர்ச்சிப் பணிகளில் அக்கறை கொண்டவர், நம்முடைய மாநிலங்களவை உறுப்பினர் தம்பி ராஜேஸ்குமார் அவர்கள்! நகர்ப்புற உள்ளாட்சிப் பிரதிநிதிகள் மாநாட்டை, இதே நாமக்கல் மாவட்டத்தில் சிறப்பாக நடத்திக் காட்டிய சாதனைக்குச் சொந்தக்காரர் தம்பி ராஜேஸ்குமார்! நாமக்கல் மாவட்டத்திற்காக திட்டப்பணிகளைப் பெறுவதில் முனைப்பாக இருக்கக்கூடியவர்! என்னை சந்திக்க வரும்போதெல்லாம், அவர் கையில் ஒரு கடிதம் நிச்சயமாக இருக்கும். அதில் நாமக்கல் மாவட்டத்திற்குச் சாலை வேண்டும், பஸ் ஸ்டாண்ட் வேண்டும், கூட்டுறவு வங்கி வேண்டும், இப்படி ஏதாவது ஒரு கோரிக்கையுடன்தான் என்னைச் சந்திப்பார். பார்க்க, அமைதியாகவும், செயலில் புயலாகவும் இருக்கும் தம்பி ராஜேஸ்குமார், நான் வளர்த்த இளைஞரணியின் Product! சிறப்பாக செயல்படும் அவருக்கும், அவருக்குத் துணை நிற்கும் நிருவாகிகளுக்கும் அத்தனை பேருக்கும் என்னுடைய வாழ்த்துகள்!

அடுத்து, நம்முடைய மாவட்ட ஆட்சியர் டாக்டர் உமா ஐ.ஏ.எஸ்., அவர்கள். அவர் மிகச் சிறப்பாகப் பணியாற்றி வருவதை, நான் தொடர்ந்து கவனித்துக் கொண்டு வருகிறேன். அலுவலகத்திலேயே உட்கார்ந்து நிருவாகம் செய்யாமல், காலை முதல் மாலை வரை கள ஆய்வில் "ஃபீல்டு விசிட்" மூலமாகக் கண்காணிக்கும் ஆட்சியராக அவர் இருக்கிறார். மற்ற மாவட்டத்தில் இருக்கக்கூடிய ஆட்சியர்களுக்கெல்லாம் ஒரு எடுத்துக்காட்டாக அவர் விளங்கிக் கொண்டிருக்கிறார். அவருக்கும், அவரோடு இணைந்து பணியாற்றும் நாமக்கல் மாவட்ட அதிகாரிகள், அரசு அலுவலர்கள் அத்தனை பேருக்கும் நான் என்னுடைய மனமார்ந்த வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மாவட்டத் திட்டங்கள்

இங்குத் திருச்செங்கோடு சட்டமன்ற உறுப்பினர் நம்முடைய அன்பிற்குரிய கொங்கு ஈஸ்வரன் அமர்ந்திருக்கிறார். அவருடைய கோரிக்கையை ஏற்று, கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் சிலம்பொலி செல்லப்பனார் அவர்களின் திருவுருவச் சிலையை அவரது சொந்த கிராமத்தில் திறந்து வைத்தேன். தன்னுடைய வாழ்நாள் முழுவதும் தமிழ்நாடெங்கும் சுற்றிச் சுழன்று சிலப்பதிகாரத்தின் மாண்பையும், செந்தமிழின் மேன்மையையும் போற்றியவர் சிலம்பொலி செல்லப்பனார் அவர்கள்!

நம்முடைய திராவிட மாடல் ஆட்சி அமைந்த பிறகு, தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களுக்கும் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்திக் கொடுத்து வருகிறோம். அதில் நாமக்கல் மாவட்டமும் சிறப்பான இடத்தை பெற்றிருக்கிறது. அதில் முக்கியமான சிலவற்றை மட்டும் நான் நினைவுப்படுத்த விரும்புகிறேன்.

❖ நாமக்கல் நகராட்சியை மாநகராட்சியாகத் தரம் உயர்த்தப்பட்டிருக்கிறது.

❖ நாமக்கல் மாவட்டத்தில் 'புதுமைப் பெண்' திட்டம் மூலமாகக் கல்லூரி பயிலும் மாணவிகளுக்கு 1,000 ரூபாய் உதவித்தொகை பெறுவதில் மாநிலத்திலேயே முதலிடம் இந்த நாமக்கல் மாவட்டம்.

❖ 'தமிழ்ப் புதல்வன்' திட்டம் மூலமாகக் கல்லூரி பயிலும் மாணவர்களுக்கு 1,000 ரூபாய் உதவித்தொகை பெறுவதில் இரண்டாவது இடம் இந்த நாமக்கல் மாவட்டம்.

❖ இராசிபுரத்தில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்

❖ பள்ளிப்பாளையம், ஆலப்பாளையம், படவீடு கூட்டுக் குடிநீர்த் திட்டம்

❖ மோகனூர் புதிய குடிநீர்த் திட்டம்

❖ இராசிபுரத்தில் புதிய மாவட்ட அரசு மருத்துவமனை

❖ திருச்செங்கோட்டில் புதிய மாவட்ட தலைமை அரசு மருத்துவமனை

❖ சித்த மருத்துவமனைக் கட்டடம்

❖ நாமக்கல் அரசு மருத்துவமனையில் புதிய கட்டடம்

❖ சேந்தமங்கலத்தில் சார்பதிவாளர் அலுவலகக் கட்டடம்

❖ இராசிபுரம் திருவள்ளுவர் கல்லூரியில் புதிய கட்டடம்

❖ குமாரபாளையத்தில் வட்டாட்சியர் அலுவலகம்

❖ நாமக்கல்லில் அறிவுசார் மையம், தினசரி சந்தை, ஒழுங்குமுறை விற்பனைக் கூடம்

❖ புதிய பேருந்து நிலையம்

❖ திருச்செங்கோட்டில் அர்த்தநாரீஸ்வரர் கலைக் கல்லூரி - இப்படி ஏராளமான திட்டங்களை நாமக்கல் மாவட்டத்திற்கு நிறைவேற்றிக் கொடுத்துவிட்டுத்தான் உங்கள் முன்னால் கம்பீரமாக இந்த முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் நின்று கொண்டிருக்கிறேன்.

கலைஞர் நூற்றாண்டு பேருந்து நிலையம்

அதுமட்டுமல்ல, இன்று பல்வேறு துறைகள் சார்பில், நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட இருக்கின்றன. 16 ஆயிரத்து 31 பேருக்கு, 146 கோடியே 56 இலட்சம் ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட இருக்கின்றன. இலவச வீட்டுமனைப் பட்டா, பயிர்க் கடன்கள், கால்நடைப் பராமரிப்புக் கடன், கலைஞர் கனவு இல்லம், தையல் இயந்திரம், வேளாண்மை உதவிகள், புதிய குடும்ப அட்டைகள், கல்வி உதவித்தொகை, திருமண உதவித்தொகை, வாரிசு நியமன ஆணைகள், அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடித் திட்டப் பயனாளிகளின் ஆணைகள், இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு ஆணைகள், கைத்தறி ஆதரவு திட்ட ஆணைகள், நெசவாளர் சேமிப்புப் பாதுகாப்புத் திட்ட ஆணைகள், தானியங்கி பால் பரிசோதனைக் கருவி வழங்கும் ஆணைகள்– இப்படி பல்வேறு உதவிகள் வழங்கப்பட இருக்கிறது. அதாவது, ஒவ்வொரு துறையின் சார்பிலும் எப்படி எல்லாம் மக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்க வேண்டுமோ, அப்படி எல்லா வழிகளிலும் நலத்திட்ட உதவிகள் வழங்கப்படுகின்றன. இதனால், 16 ஆயிரத்து 31 தனிநபர்கள் இல்லை. அவர்கள் மட்டும் இல்லை. 16 ஆயிரத்து 31 குடும்பங்கள்– அதை நீங்கள் நினைத்துப் பார்க்கவேண்டும்; அவர்களைச் சுற்றி இருக்கின்றவர்கள் பயனடைய இருக்கிறார்கள்.

அதுமட்டுமல்ல, இந்த விழா மூலமாகப் பல்வேறு திட்டங்களைத் திறந்து வைத்திருக்கிறேன். அதில் மிக மிக முக்கியமானது மாவட்டத்

தலைநகரில் கலைஞர் நூற்றாண்டு பேருந்து நிலையம். அதோடு, முடிவுற்ற 134 திட்டப்பணிகளைத் திறந்து வைத்திருக்கிறேன். இதன் மொத்த மதிப்பு 298 கோடியே 2 இலட்சம் ரூபாய். புதியதாக மொத்தம் 140 பணிகளுக்கு இன்று இங்கு அடிக்கல் நாட்டியிருக்கிறேன். நகர்ப்புற வளர்ச்சித் துறை, ஊரக வளர்ச்சித் துறை, நெடுஞ்சாலைத் துறை, வணிகவரித்துறை, பேரூராட்சித் துறை, பதிவுத்துறை, பள்ளிக்கல்வித் துறை, பால்வளத்துறை என்று பல்வேறு துறைகள் சார்பில் மொத்தம் 365 கோடியே 69 இலட்சம் ரூபாய் மதிப்பிலான திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டி இருக்கிறேன். இவை உரிய காலத்தில் முடிக்கப்பட்டு, அனைத்தும் திறப்பு விழா காணும்! ஏன் அவ்வளவு உறுதியாக சொல்கின்றேன் என்றால், கடந்த சில நாட்களாக, நாம் பொறுப்பேற்ற இந்த மூன்றாண்டு ஆட்சிக் காலத்தில், நம்மால் அறிவிக்கப்பட்ட திட்டங்களில் எது எது நிறைவேற்றப்பட்டப் பணிகள், நடைபெற்றுக் கொண்டிருக்கக்கூடிய பணிகள் அதையெல்லாம் துறைவாரியாக ஆய்வுக் கூட்டங்களை நான் நடத்திக்கொண்டு வருகிறேன். அதை இந்த மாதத்தில் முடித்துவிட்டு, அடுத்த நவம்பர் மாதம் தொடங்கி, அனைத்து மாவட்டங்களிலும் நடைபெற்று வரும் பணிகளை நேரடியாக நானே சென்று கள ஆய்வு செய்யப் போகிறேன். அதனால் தான் சொல்கிறேன். நம்முடைய திராவிட மாடல் ஆட்சியில் அறிவிக்கப்படும் திட்டங்கள் அனைத்தும் நிச்சயமாக நிறைவேறும்.

வேளாண் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம்

இந்த நாமக்கல் மாவட்டத்திற்கு வர வேண்டும் என்று என்னை அழைக்க பலமுறை வந்த தம்பி ராஜேஸ்குமார் அவர்கள் வந்தார்கள். நான் ஏற்கெனவே சொன்னது போல், எப்போதும் கோரிக்கையுடன்தான் வருவார்; அது இன்னும் மனதில் ஆழமாகப் பதிந்திருக்கிறது. நாமக்கல்லுக்கு வந்துவிட்டு உங்கள் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றும் அறிவிப்புகளை அறிவிக்காமல் என்னால் இருக்க முடியுமா? அறிவிக்காமல் நான் போனால் விட்டுவிடுவீர்களா நீங்கள்? ராஜேஸ்குமாரும் விடமாட்டார், நீங்களும் விடமாட்டீர்கள். அதனால், இப்போது அறிவிப்புகளை நான் உங்களிடத்தில் எடுத்துக் கூற விரும்புகிறேன்.

அறிவிப்பு ஒன்று, மாநகராட்சியாகத் தரம் உயர்த்தப்பட்டிருக்கும் நாமக்கல்லுக்குத் தேவையான கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக 10 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்படும்!

அறிவிப்பு இரண்டு, சேந்தமங்கலம் கொல்லிமலைப் பகுதியில் விளையக்கூடிய பழங்கள்,காய்கறிகளைப் பதப்படுத்தி விற்பனை செய்ய ஏதுவாக, குளிர்பதனக் கிடங்கு வசதியுடன் கூடிய வேளாண் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் அமைக்கப்படும்.

நனவாகிய கல்விக் கனவு

அறிவிப்பு மூன்று, மோகனூரில் இருக்கும் சேலம் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை, மோகனூர் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை என்று பெயரிடப்பட்டு, இன்னும் சிறப்பாகச் செயல்பட, இந்த ஆலையின் எத்தனால் உற்பத்தி அலகு 4 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தப்படும்.

அறிவிப்பு நான்கு, பொதுமக்கள் அதிக எண்ணிக்கையில் சென்று வரக்கூடிய, நைனாமலை வரதராஜ பெருமாள் கோயிலுக்கு நெடுஞ்சாலைத் துறை மூலம் 30 கோடி ரூபாய் செலவில் தார்ச் சாலை அமைக்கப்படும் - இப்போது அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள் விரைவில் நிறைவேற்றப்படும். ஏன் என்றால், எங்களைப் பொறுத்தவரைக்கும், சொன்னதைச் செய்வோம்! செய்வதைத்தான் சொல்வோம்!

கடந்த மூன்றாண்டுகால ஆட்சியில், பட்டியலினத்தவர் – பழங்குடியினர் – அருந்ததியர் – பிற்படுத்தப்பட்டோர் – மிகவும் பிற்படுத்தப்பட்டோர் – விளிம்பு நிலை மக்கள் – ஏழை எளியோர் – கோயில் அர்ச்சகர்கள் – சிறுபான்மையினர் – பெண்கள் – இளைஞர்கள் – திருநங்கைகள் – மாற்றுத்திறனாளிகள் என

அனைத்துச் சமூக மக்களையும் வளர்த்து வருகிறோம்.

எனக்குத் தினமும் வாட்ஸ்அப்-இல் பல பேட்டிகள் வீடியோக்கள் வருகின்றன. மக்களின் அன்பும் பாராட்டுக்களும் நிறைந்த அந்த வீடியோக்களில் சிலவற்றை உங்களிடத்தில் நான் பகிர்ந்துக்கொள்ள விரும்புகிறேன்.

ஒரு மூதாட்டி சொல்கிறார். நீங்கள் கொடுக்கும் ஆயிரம் ரூபாயில்தான் நான் மாத்திரை மருந்து வாங்குகிறேன்.

ஒரு மாணவி சொல்கிறார். புதுமைப்பெண் திட்டத்தில் வரும் ஆயிரம் ரூபாயால் என்னுடைய கல்விக் கனவு நனவாகி இருக்கிறது என்று சொல்கிறார்.

இப்போது நான் மூன்று இலட்சம் ரூபாய் மதிப்புள்ள ஆட்டோவுக்கு ஓனராக இருக்கிறேன் என்று திருநங்கை ஒருவர் பெருமையாகச் சொல்கிறார்.

மாற்றுத்திறனாளிகளை, ஸ்டாலின் கவர்மெண்ட், செல்லப் பிள்ளைகளாக பார்க்கிறது என்று ஒரு மாற்றுத்திறனாளி சகோதரி சொல்கிறார்.

தூய்மைப் பணியாளர்கள்

எல்லாவற்றிற்கும் மேல், சென்னையில் மழை பெய்தபோது, நம்முடைய அரசு சிறப்பாக செயல்பட்டு, நிலைமையைக் கையாண்டது! அப்போது, அரசின் செயல்பாட்டிற்கு பெரும் துணையாக இருந்த தூய்மைப் பணியாளர்களைப் பாராட்டும் விதமாக, அவர்களுக்குத் தேவையான உதவிகளை செய்து, அவர்களோடு மதிய உணவு சாப்பிட்டேன். நீங்கள் எல்லாம் டிவி-யில் பார்த்திருப்பீர்கள்; சோசியல் மீடியா-விலும் பார்த்திருப்பீர்கள்; வாட்ஸ் ஆப், யூ-டியூப்-இல் பார்த்திருப்பீர்கள். பார்த்தீர்களா! அப்போது ஒரு தூய்மைப் பணியாளர் என்னிடம் பேசினார். அப்போது அவர், “எங்கள் குடும்பத்தில் ஒருத்தர்தான் முதலமைச்சர்” என்று சொன்னார். இதைவிட பெரிய பாராட்டு எனக்கு என்ன வேண்டும். ஊரைத் தூய்மைப்படுத்தும் உள்ளங்களோடு சாப்பிட்டதுதான் எனக்குப் பெருமை! இதுதான் “ஏழைகளின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்” என்று பேரறிஞர் அண்ணா சொன்னது! அண்ணா சொன்னதை தான், அவரின் தம்பிமார்களான நாங்கள் செய்து காட்டிக் கொண்டிருக்கிறோம்!

மக்களுக்கானத் திட்டங்களைச் செயல்படுத்துவதுடன் தொழில் வளர்ச்சியிலும் கவனம் செலுத்துகிறோம். பெரிய பெரிய தொழிற்சாலைகள் மட்டுமல்ல, சிறு, குறு, நடுத்தரத் தொழில்களையும் வளர்த்து வருகிறோம். தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சி 10.69 விழுக்காடாக இருக்கும் என்று ஆய்வறிக்கையில் வெளியாகி இருக்கிறது. இது அகில இந்திய வளர்ச்சி அளவைவிட மிக மிக அதிகம். நிறைய தொழிற்சாலைகள் தமிழ்நாட்டை நோக்கி இன்றைக்கு வந்து கொண்டிருக்கின்றன. ஏராளமான இளைஞர்களுக்கு புதிய வேலை வாய்ப்புகள் கிடைக்கின்றன. ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு திரும்பிப் பார்த்தால் அனைத்து மாவட்டங்களும் வளர்ந்திருக்கும்! அனைத்துத் துறைகளும் வளர்ந்திருக்கும்! அனைத்துச் சமூகங்களும் வளர்ந்திருக்கும்! அந்த நிலையைஉருவாக்கிக்காட்டுவதற்காகத்தான் நானும், நம்முடைய அமைச்சர்களும், அரசு அதிகாரிகளும் உழைத்துக் கொண்டிருக்கிறோம்!

உயரும் செல்வாக்கு

இந்த வளர்ச்சி அனைத்தும் நம் கண்ணுக்கு முன்னால் தெரிகிறது. அதன் மூலமாகப் பாராட்டுக்கள் கிடைக்கின்றன. தி.மு.க.வுக்கு வாக்களித்தவர்கள் மட்டுமல்ல, வாக்களிக்க மறந்தவர்களும் பாராட்டுகின்ற அரசாக இந்த அரசு நடந்து கொண்டிருக்கிறது. கடந்த சட்டமன்றத் தேர்தலில் பெற்ற செல்வாக்கை விட, நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் தி.மு.க.வின் செல்வாக்கு உயர்ந்திருக்கிறது. நன்றாகக் கவனியுங்கள்! கடந்த சட்டமன்றத் தேர்தலில் பெற்ற செல்வாக்கை விட, நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் தி.மு.க.வின் செல்வாக்கு உயர்ந்திருக்கிறது. இதை எதற்காகச் சொல்ல வருகிறேன் என்றால், இதைப் பொறுத்துக்கொள்ள முடியாத

மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் என்ன சொல்லிக் கொண்டிருக்கிறார்? "தி.மு.க.வுக்கு மதிப்பு சரிந்துவிட்டது" என்று பேசி இருக்கிறார். எதிர்க்கட்சித் தலைவர் இந்த உலகத்தில் தான் இருக்கிறாரா? இல்லை, கனவுலகத்தில் இருக்கிறாரா என்று தெரியவில்லை!

மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களே, தினமும் பேருந்தில் கட்டணமில்லாமல் பயணம் செய்கின்ற இலட்சக்கணக்கான மகளிரின் முகங்களில் தி.மு.க-வின் மதிப்பைப் பாருங்கள்! அப்போது தெரியும் உங்களுக்கு!

மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களே, மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் உரிமைத்தொகையைப் பெறும் ஒரு கோடிக்கும் அதிகமான என்னுடைய சகோதரிகளிடம் கேளுங்கள், தி.மு.க-வின் மதிப்பு உங்களுக்குத் தெரியும்!

மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களே, 20 இலட்சம் குழந்தைகள் தினமும் காலையில் வயிறு நிறைய சாப்பிடுகிறார்களே... அதில் இருக்கிறது தி.மு.க-வின் மதிப்பு!

தமிழ்ப்புதல்வன் திட்டம்

மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களே, இலட்சக்கணக்கான மாணவ, மாணவிகள் 'புதுமைப்பெண்' திட்டத்திலேயும் 'தமிழ்ப்புதல்வன்' திட்டத்திலேயும் மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் பெறுகிறார்களே, அவர்களுக்குத் தெரியும் தி.மு.க. ஆட்சியின் நன்மதிப்பு!

மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களே, "நான் முதல்வன்" திட்டத்தின் மூலமாக 30 இலட்சத்திற்கும் மேற்பட்ட இளைஞர்கள் திறன்மிக்கவர்களாக உயர்ந்திருக்கிறார்கள். அவர்களுடைய வெற்றியில் தி.மு.க. ஆட்சியின் மதிப்பு இருக்கிறது!

இந்த நிலையில்தான் தி.மு.க.வின் மதிப்பு சரிந்துவிட்டது என்று அவர் சொல்வதை மக்கள் காமெடியாக பார்க்கிறார்கள்! நான் அதை பொருட்படுத்துவதே இல்லை. அதற்கெல்லாம் நேரத்தைச் செலவிட நான் தயாராக இல்லை.

நான் கேட்கிறேன்; கடந்த 5 ஆண்டுகளில் நடந்த, நாடாளுமன்றத் தேர்தல்கள், சட்டமன்றத் தேர்தல், இடைத் தேர்தல்கள், உள்ளாட்சித் தேர்தல் என்று அனைத்திலும் மக்களுடைய பேராதரவுடன் நாங்கள் வென்றிருக்கிறோம்.

மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களே! தி.மு.க-வின் மதிப்பு சரியவில்லை; உங்கள் ஆட்சிக்காலத்தில் தமிழ்நாட்டின் மதிப்பை அடமானம் வைத்தீர்கள்! உங்களுடைய பதவியைக் காப்பாற்றுவதில் மட்டுமே குறியாக இருந்த காரணத்தினால், உங்களுடைய மதிப்பு மட்டுமல்ல; உங்கள் கட்சியின் மதிப்பும் மக்களிடம் சரிந்துவிட்டது! அதை முதலில் நீங்கள் உணருங்கள்!

முதன்மை மாநிலமாகத் தமிழ்நாட்டை உயர்த்துவோம்

மேற்கு மண்டலத்தின் நிலை என்ன இன்றைக்கு? மேற்கு மண்டலத்தை எங்களுடைய செல்வாக்கான பகுதி என்று அடிக்கடி சொல்லிக் கொண்டிருப்பீர்களே..... இப்போது என்ன ஆனது? கடந்த நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகள் அதையும் பொய்யாக்கிவிட்டதா! இல்லையா! நாடாளுமன்றத் தேர்தலின் முடிவையொட்டி 234 சட்டமன்றத் தொகுதி வாரியாகப் பகுத்துப் பார்த்தால், 222 தொகுதிகளில் எங்கள் கூட்டணி அதிக வாக்குகளைப் பெற்றிருக்கிறது. எங்களைப் பொறுத்தவரை மக்களைப் பற்றித் தான், மக்களால் ஒதுக்கப்பட்ட ஓரங்கட்டப்பட்டவர்கள் குறித்து, உங்களைப் பற்றி எங்களுக்கு கவலை இல்லை!

மக்களோடு மக்களாக இருந்து, மக்களுக்காக உழைத்துக் கொண்டிருக்கிறோம். அதனால்தான் தொடர்ந்து வெற்றி பெறுகிறோம். மக்களான உங்கள் மேல் நம்பிக்கை வைத்து நான் சொல்கிறேன்! அடுத்து வரும் சட்டமன்றத் தேர்தலிலும் மாபெரும் வெற்றி பெறுவோம்! இந்தியத் துணைக் கண்டத்திற்கே வழிகாட்டும் நம்முடைய திராவிட மாடல் ஆட்சியால், தொடர்ந்து தமிழ்நாட்டைத் தலைநிமிர வைப்போம்! அனைத்துத் துறைகளிலும் தமிழ்நாட்டை முதல் மாநிலமாக உயர்த்துவோம்! உயர்த்துவோம்! என்று கூறி, விடைபெறுகிறேன்.

நன்றி! வணக்கம்!

திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் வடமாநில ஏ.டி.எம். கொள்ளை கும்பலை மடக்கிப் பிடித்த நாமக்கல் மாவட்டக் காவல் துறையினருக்கு வாழ்த்து

கடந்த மாதம் கேரள மாநிலம் திருச்சூரில் அடுத்தடுத்து 3 ஏ.டி.எம்.களில் வடமாநிலத்தைச் சேர்ந்த கொள்ளைக் கும்பல் கொள்ளையடித்தனர். ஏ.டி.எம்.களில் கொள்ளையடித்துவிட்டு கொள்ளை கும்பல் ராஜஸ்தான் பதிவெண் கொண்ட கண்டெய்னர் லாரியில் தப்பிச்செல்வதாக நாமக்கல் மாவட்ட போலீசாருக்கு தகவல் கிடைத்தது. தகவலின் அடிப்படையில் குமாரபாளையம் அருகே போலீசார், கேரளாவில் இருந்து வந்த கண்டெய்னர் லாரியை போலீசார் நிறுத்தியும் நிற்காமல் சென்றது. இதையடுத்து விரட்டி சென்ற போலீசார் கண்டெய்னர் லாரியை மடக்கி கொள்ளைக் கும்பலை பிடித்தனர்.

இந்த சம்பவத்தைப் பாராட்டிக் கேரள தலைமைக் காவல்துறை இயக்குநர் டாக்டர் ஷேக் தர்வேஷ் சாஹிப், இ.கா.ப., அவர்கள் தமிழ்நாடு காவல்துறைத் தலைமை இயக்குநர் அவர்களுக்குக் கடிதம் எழுதியுள்ளார். அதில், நாமக்கல் மாவட்டக் காவல்துறையினர் துரிதமாகச் செயல்பட்டு, சம்பவம் நடைபெற்று 6 மணி நேரத்திற்குள் கொள்ளையர்களை பிடித்தது பாராட்டத்தக்கது என்று குறிப்பிட்டுள்ளார்.

இந்த சம்பவத்தின்போது, ஒருங்கிணைந்து சிறப்பாகப் பணியாற்றிய நாமக்கல் மாவட்டக் காவல் கண்காணிப்பாளர், காவல் துணை கண்காணிப்பாளர்கள் திரு. இமையவர்மன், திரு. முருகேசன், திரு. ராஜா, காவல் ஆய்வாளர்கள் திரு. தவமணி, திரு. ரங்கசாமி, காவல் துணை ஆய்வாளர்கள் என மொத்தம் 23 காவல் துறையினருக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் வாழ்த்துகளையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொண்டார்.

"முதலமைச்சர் கோப்பை - 2024"
விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்ற அணிகளுக்கு முதலமைச்சர் கோப்பை

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் வழங்கினார்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் 24.10.2024 அன்று சென்னை, ஜவஹர்லால் நேரு உள்விளையாட்டரங்கத்தில் நடைபெற்ற "முதலமைச்சர் கோப்பை–2024" மாநில அளவிலான போட்டிகள் நிறைவு விழாவில், அதிக பதக்கங்களை வென்று பதக்கப் பட்டியலில் முதல் மூன்று இடங்களை பெற்ற சென்னை, செங்கல்பட்டு, கோயம்புத்தூர் மாவட்ட அணிகளுக்கு முதலமைச்சர் கோப்பையை வழங்கி, பாராட்டினார்.

முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகளில் நமது பாரம்பரிய விளையாட்டான கபடி, சிலம்பம் உட்பட 36 வகையான விளையாட்டுகளுக்குப் பள்ளி, கல்லூரி மாணாக்கர்கள், மாற்றுத்திறனாளிகள் பொதுப்பிரிவு, அரசு ஊழியர்களுக்கும் போட்டிகள் நடத்திட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டார். அதன் அடிப்படையில் அனைத்து மாவட்டங்களிலும் மாவட்ட அளவிலான விளையாட்டுப் போட்டிகள், மண்டல அளவிலான போட்டிகள் ஆறு மண்டல தலைமையிடத்திலும், இந்த ஆண்டு செப்டம்பர் 10-ஆம் தேதி முதல் 24-ஆம் தேதி வரை நடைபெற்றது. 15 நாட்கள் நடைபெற்ற மாவட்ட, மண்டல அளவிலான போட்டிகளில் கலந்துகொள்ள 11,56,566 வீரர், வீராங்கனைகள் இணையதளம் மூலம் பதிவு செய்தனர். மேலும், இப்போட்டிகளில் 10,000-க்கும் மேற்பட்ட போட்டி நடுவர்கள், பயிற்சியாளர்கள், இதர ஊழியர்கள் (Supporting Staffs) பணியாற்றினர். இப்போட்டிக்காக 83 கோடியே 36 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மாவட்ட அளவிலான முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகளை 10.09.2024 அன்று சிவகங்கை மாவட்டத்தில் தொடங்கி வைத்தார்கள்.

மண்டல, மாவட்ட அளவிலான போட்டிகள்

மாவட்ட, மண்டல அளவிலான போட்டிகளில் வெற்றி பெற்ற 32,700-க்கும் மேற்பட்ட வீரர், வீராங்கனைகள் மாநில அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்ள தேர்வு செய்யப்பட்டனர். மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் மாநில அளவிலான முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகளை 04.10.2024 அன்று சென்னை ஜவஹர்லால் நேரு உள்விளையாட்டரங்கத்தில் தொடங்கி வைத்தார்கள். தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சார்பில் முதலமைச்சர் கோப்பை மாநில அளவிலான விளையாட்டுப் போட்டிகள் சென்னை, செங்கல்பட்டு, மதுரை, திருச்சி, கோயம்புத்தூர் நகரங்களில் அக்டோபர் 4-ஆம் தேதி முதல் அக்டோபர் 24-ஆம் தேதி வரை 19 இடங்களில் நடத்தப்பட்டன.

இந்தப் போட்டிகளில் பங்கேற்ற 32,700-க்கும் மேற்பட்ட வீரர்கள்-வீராங்கனைகள், 500 விளையாட்டு தன்னார்வலர்கள், 3,000-க்கும் மேற்பட்ட நடுவர்கள், பயிற்சியாளர்கள், இதர ஊழியர்கள் அனைவருக்கும் போட்டி நடைபெறுகின்ற அனைத்து நாட்களிலும் தங்குவதற்கு வசதியாக தங்கும் விடுதிகள், அரசு விருந்தினர் மாளிகை ஆகியவைகளில் அறைகள் ஏற்பாடு செய்யப்பட்டன.

அத்துடன், போட்டி நடைபெறும் அனைத்து நாட்களிலும் மூன்று வேளை உணவு மற்றும் சிற்றுண்டி, வீரர் வீராங்கனைகள் போட்டி நடைபெறும் இடங்கள், தங்கும் விடுதிகளுக்குச் செல்ல பேருந்து வசதிகள், அனைத்து இடங்களிலும் மருத்துவ வசதி ஏற்பாடுகள், போட்டி நடைபெறும் இடங்களில் காவல்துறை மூலம் உரிய பாதுகாப்பு ஆகியவை சிறந்த முறையில் மேற்கொள்ளப்பட்டது.

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகம், செங்கல்பட்டு, மதுரை, திருச்சி, கோயம்புத்தூர் மாவட்ட நிருவாகங்கள், மாநகரப் போக்குவரத்துக் கழகம், பெருநகரச் சென்னை மாநகராட்சி, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை, காவல் துறை, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை ஆகிய துறைகளுடன் இணைந்து அனைத்து நடவடிக்கைகளும் சிறப்பான முறையில் மேற்கொள்ளப்பட்டன.

முதல் மூன்று இடங்கள்

முதலமைச்சர் கோப்பை – 2024 மாநில அளவிலான இறுதிப் போட்டிகளில் 1,071 பதக்கங்களை வெல்வதற்குத் தமிழ்நாட்டிலுள்ள 38 மாவட்டங்களைச் சேர்ந்த வீரர்-வீராங்கனைகள் போட்டியிட்டனர். இதில் சென்னை மாவட்டம், 105 தங்கம், 80 வெள்ளி, 69 வெண்கலப் பதக்கங்கள், என மொத்தம் 254 பதக்கங்கள் வென்று பதக்கப் பட்டியலில் முதல் இடத்தையும், செங்கல்பட்டு மாவட்டம், 31 தங்கம், 26 வெள்ளி மற்றும் 36 வெண்கலப் பதக்கங்கள், என மொத்தம் 93 பதக்கங்கள் வென்று இரண்டாம் இடத்தையும், கோயம்புத்தூர் மாவட்டம் 23 தங்கம், 40 வெள்ளி, 39 வெண்கலப் பதக்கங்கள், என மொத்தம் 102 பதக்கங்கள் வென்று மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளனர்.

“முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகள்–2024”இல் முதல் மூன்று இடங்களைப் பெற்ற சென்னை, செங்கல்பட்டு, கோயம்புத்தூர் ஆகிய மாவட்ட அணிகளுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்றையதினம் முதலமைச்சர் கோப்பைகளை வழங்கி, பாராட்டினார்.

இப்பரிசுக் கோப்பைகளை முதலிடத்தைப் பெற்ற சென்னை மாவட்ட அணியின் சார்பாக மாவட்ட ஆட்சித் தலைவர்

திருமதி ரஷ்மி சித்தார்த் ஜகடே, இ.ஆ.ப., அவர்களும், இரண்டாமிடத்தைப் பெற்ற செங்கல்பட்டு மாவட்ட அணியின் சார்பாக மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. எஸ்.அருண்ராஜ், இ.ஆ.ப., அவர்களும், மூன்றாமிடத்தைப் பெற்ற கோயம்புத்தூர் மாவட்ட அணியின் சார்பாக மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. கிராந்திகுமார் பாடி, இ.ஆ.ப., ஆகியோருடன் விளையாட்டு வீரர்-வீராங்கனைகள், மண்டல முதுநிலை மேலாளர்கள், மாவட்ட விளையாட்டு அலுவலர்களும் பெற்றுக் கொண்டார்கள்.

இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை

உங்கள் அனைவருக்கும் எனது அன்பான வணக்கம்.

முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்று அதில் வெற்றிபெற்ற எல்லா வீரர்களுக்கும் பரிசுகள் வழங்கக்கூடிய இந்தச் சிறப்பான நிகழ்ச்சியை ஏற்பாடு செய்திருப்பது உள்ளபடியே பெரும் மகிழ்ச்சியளிக்கிறது. அதில் குறிப்பாக உங்கள் முகங்களிலெல்லாம் பார்க்கின்ற நேரத்தில் அதிகமான உற்சாகத்தையும், மகிழ்ச்சியையும் நான் பார்க்கிறேன். உங்கள் துறையின் அமைச்சர் ப்ரமோஷன் அடைந்தது உங்களுக்கு எல்லாம் புது எனர்ஜியைக் கொடுத்திருப்பதாகத்தான் நான் பார்க்கிறேன்! இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சராக இருந்த தம்பி மாண்புமிகு உதயநிதி அவர்கள், இப்போது துணை முதலமைச்சர் ஆனதில் உங்களுடைய பங்கும் இருக்கிறது என்பதை நான் தெளிவாக உணர்ந்திருக்கிறேன். விளையாட்டுத் துறையை மிகச் சிறப்பாகக் கவனித்து, இந்தியாவே உற்றுநோக்கும் துறையாகத் தம்பி உதயநிதி மாற்றி காட்டியிருக்கிறார்! அப்படி பார்த்தால், துறையும் வளர்ந்திருக்கிறது. துறையின் அமைச்சரும் வளர்ந்திருக்கிறார்!

நாம் ஆட்சிப்பொறுப்பேற்ற பிறகு, விளையாட்டை பொழுதுபோக்காக நினைக்கும் 'மைண்ட்செட்'-யை மாற்றி, ஸ்போர்ட்சை ஒரு 'கேரியராக' இளைஞர்கள் தேர்ந்தெடுக்கும் அளவிற்கு முக்கியத்துவம் கொடுத்து ப்ரொமோட் செய்து இருக்கிறோம்! அதனால்தான், இந்திய வரலாற்றில் முதன்முறையாக, தமிழ்நாட்டில் 114 கோடியே 39 இலட்சம் ரூபாய் செலவில், 44ஆவது செஸ் ஒலிம்பியாட் போட்டிகளைச் சிறப்பாக நடத்தினோம். 186 நாடுகளிலிருந்து, இரண்டாயிரத்திற்கும் அதிகமான வீரர் – வீராங்கனைகள் அந்தப்போட்டியில் பங்கேற்றார்கள்! வெளிநாடுகளிலிருந்து வந்திருந்த செஸ் வீரர்களுக்கெல்லாம், நாம் அளித்த வரவேற்பு – குறுகிய காலத்தில் போட்டிகளைச் சிறப்பாக ஏற்பாடு செய்த முறை – தமிழ்நாடு அரசும் – தமிழ்நாட்டு மக்களும்

அவர்களுக்குக் கொடுத்த விருந்தோம்பல் என்று எல்லாவற்றையும் மனதாரப் பாராட்டினார்கள்! அந்த செஸ் போட்டியின் துவக்க விழாவும் – நிறைவு விழாவும் – சோஷியல் மீடியாக்களில் வைரலானது.

தமிழ்ப் பண்பாட்டை உலகிற்கு எடுத்துக்காட்டும் வாய்ப்பாக அது அமைந்தது. அதேபோன்று, "சென்னை ஓபன் WTA உலக டென்னிஸ் சாம்பியன்ஷிப் 2022" போட்டி, ஸ்குவாஷ் உலகக்கோப்பை 2023, 'சென்னை செஸ் கிராண்ட்மாஸ்டர் 2023' உள்ளிட்ட ஏராளமான போட்டிகளை எல்லோரும் பாராட்டும்படி நடத்தியிருக்கிறோம்! இதுபோன்று நடத்தப்படும் விளையாட்டுப் போட்டிகள், தமிழ்நாட்டு விளையாட்டு வீரர்களை உற்சாகப்படுத்துகிறது. பலரையும் அந்த விளையாட்டுகளை நோக்கி ஈர்க்கிறது. தொழில் முறை விளையாட்டு வீரர்கள் உருவாக ஊக்கமளிக்கிறது.

விளையாட்டை ஊக்குவிப்பதில் சிறந்த மாநிலம்

நம்முடைய விளையாட்டுத் துறை, எத்தனையோ மகத்தான சாதனைகளை செய்து வருகிறது. விளையாட்டு வீரர்களின் சாதனைகளை அங்கீகரிக்க, 'இந்து ஸ்போர்ட்ஸ்டார் ஏசஸ் விருது' வழங்கும் நிகழ்ச்சியில், 2023-க்கான "விளையாட்டை ஊக்குவிப்பதில் சிறந்த மாநிலம்" என்று தமிழ்நாட்டிற்குப் பாராட்டு கிடைத்தது. விளையாட்டு வீரர்களை ஊக்கப்படுத்த நம்முடைய அரசு சார்பில் ஏராளமான உதவிகளை வழங்கிக்கொண்டு வருகிறோம். விளையாட்டு வீரர்களுக்கு வழங்கப்பட்டு வந்த 25 இலட்சம் ரூபாய் ஊக்கத் தொகையை, 30 இலட்சமாக உயர்த்தியதுடன், இந்தத் திட்டத்தில் பயன்பெறும் பயனாளிகளின் எண்ணிக்கை இரட்டிப்பாக்கப்பட்டுள்ளது.

சர்வதேச அளவில் பதக்கங்கள் வென்ற விளையாட்டு வீரர்களுக்கு, அவர்களின் பண உதவி, 10 இலட்சம் ரூபாயில் இருந்து 12 இலட்சமாக உயர்த்தப்பட்டிருக்கிறது. தேசிய அளவிலான போட்டிகளில் தங்கப் பதக்கம் வென்ற 20 வயதுக்குட்பட்ட வீரர் வீராங்கனைகளுக்கு ஒரு ஆண்டுக்கு வழங்கப்பட்டுவந்த 2 இலட்சம் ரூபாய் நிதி உதவி, இப்போது 4 இலட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டிருக்கிறது. விளையாட்டு வீரர்களுக்குத் தேவையின் அடிப்படையில், விளையாட்டுச் சீருடை மற்றும் விளையாட்டு உபகரணங்கள், பன்னாட்டு அளவிலான போட்டிகளில் பங்கேற்பதற்காக வெளிநாடுகளில் பயிற்சி மேற்கொள்வதற்கும் நிதி உதவி வழங்கப்படுகிறது. மாநில அரசால் 76 புதிய பயிற்றுநர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். இந்த முயற்சியின் வழிவகையில், வெளிநாட்டிலிருந்து 4 உயர் செயல்திறன்

பயிற்றுநர்கள், 5 நிபுணத்துவம் வாய்ந்த பயிற்றுநர்கள், 2 பாரா விளையாட்டுப் பயிற்றுநர்கள் சர்வதேச அளவிலான பயிற்சி அளிப்பதற்காக நியமனம் செய்யப்பட்டிருக்கிறார்கள்.

பல்நோக்கு விளையாட்டு மையம்

அதுமட்டுமல்ல, மதுரை, எம்.ஜி.ஆர். மாவட்ட விளையாட்டு வளாகச் செயற்கை இழை ஓடுதளப்பாதை மறுசீரமைப்புக்கான நிதிஒதுக்கீடு–10 இடங்களில் சிறு விளையாட்டு அரங்கம் அமைப்பதற்கான நிருவாக அனுமதி, அதற்குரிய நிதி ஒதுக்கீடு - தென்காசியில், மாவட்ட விளையாட்டு வளாகம் அமைக்க நிதி ஒதுக்கீடு - தூத்துக்குடி மாவட்டத்தில் ஹாக்கி விளையாட்டு வீரர்களுக்காக முதன்மை நிலை விளையாட்டு மையம் அமைக்க நிதி ஒதுக்கீடு - செங்கல்பட்டு மாவட்டத்தில், மாவட்ட விளையாட்டு வளாகம் அமைக்க நிதி ஒதுக்கீடு - சேலம் மாவட்டத்தில், 'பல்நோக்கு விளையாட்டு வளாகம்' அமைக்க நிதி ஒதுக்கீடு என்று ஏராளமான திட்டங்களை விளையாட்டுத் துறை செய்துவருகிறது! இது மூலமாக இந்தியாவை மட்டுமல்ல. உலகத்தையே ஈர்க்கும் மாநிலமாக, விளையாட்டுத் துறையில் புகழ் பெற்றுள்ளது தமிழ்நாடு!

விளையாட்டை மேம்படுத்த வேண்டும் என்றால், அதற்கான திறமையான விளையாட்டு வீரர்களை உருவாக்க வேண்டும்! அதைத்தான் தம்பி உதயநிதி இன்றைக்குச் செய்துக்கொண்டிருக்கிறார். அதற்கான அடித்தளங்களில் மிகமிக முக்கியமானது, இந்த முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகள்! வீரர்கள், தங்களின் திறமைகளை வளர்க்க, ஒற்றுமையை ஊக்குவிக்க, ஆற்றல்களை வெளிக்கொணர, புதிய சாதனைகளைப் படைக்க, வாய்ப்புகளை பெற, இந்தப்போட்டி வழிவகுக்கிறது! இன்றைய இறுதிநாள் நிகழ்வில் பங்கேற்று சிறப்பிக்கப்பட்ட எல்லா வீரர்களுக்கும்

என்னுடைய மனமார்ந்த பாராட்டுகளை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

தனியாக மின்னும் தமிழ்நாடு

நீங்கள் இந்த வெற்றிகளுக்காக எடுத்த முயற்சி, உழைப்பு, தன்னம்பிக்கை ஆகியவற்றைப் பாராட்டுகிறேன். உங்களின் திறன்களை மேம்படுத்துவதற்கான எல்லா ஆதரவையும் தமிழ்நாடு அரசு வழங்கும் என்ற உறுதியை இந்த மேடையில் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தப்போட்டிகளில் பங்கேற்கும் இளம் திறனாளர்களைக் கண்டறிந்து, அவர்களை முறையாக டிரெயின் (Train) செய்வதுதான் இந்த முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகளை நடத்துவதன் முக்கிய நோக்கம்!

மாவட்ட மற்றும் மண்டல அளவிலான போட்டிகளில் சுமார் 11 இலட்சம் வீரர்கள், வீராங்கனைகள் 36 வகையான தனிப்பட்ட விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்றுள்ளனர். 15 நாட்கள் நடத்தப்பட்ட மாவட்ட மற்றும் மண்டல அளவிலான போட்டிகளில் பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட போட்டி நடுவர்கள், பயிற்சியாளர்கள் மற்றும் இதர ஊழியர்கள் பணியாற்றி இருக்கிறார்கள். தமிழ்நாட்டு இளைஞர்களிடையே, விளையாட்டுகளில் பங்கேற்கும் ஆர்வம் அதிகரித்திருக்கிறது என்பதன் அடையாளம்தான் இது!

வெற்றியை எட்டிப்பிடிப்பதற்கு, திட்டமிட்ட முயற்சியும், கட்டுப்பாடும் அவசியம்! உங்களின் வெற்றிக்கான காரணம் என்ன தெரியுமா? திறமை! தன்னம்பிக்கை! உழைப்பு! கட்டுப்பாடு! அதனால்தான் நம்முடைய திராவிட மாடல் அரசு, உங்களைப் போன்ற திறமைமிக்க வீரர்களுக்கு முழுமையான ஆதரவை வழங்குகிறது! தமிழ்நாட்டின் சிறந்த வீரர்களாக விளங்கிக்கொண்டிருக்கும் நீங்கள், தேசிய மற்றும் உலக அளவிலும் சாதிக்க

வேண்டும்! தொடர்ந்து வெற்றி பெற வேண்டும்! இந்தப் போட்டிகள் உங்களின் திறமைகளை மட்டும் வெளிக்காட்டவில்லை; நம்முடைய விளையாட்டுத் துறையில் பணியாற்றும் 'கோச்'-களின் திறன்களையும் வெளிப்படுத்தி இருக்கிறது! இந்தத் திறமைகளால்தான் விளையாட்டுத் துறையில் தமிழ்நாடு தனியாக மின்னுகிறது!

தம்பி மாரியப்பன் தங்கவேலு அவர்களும் துளசிமதி முருகேசன் – நித்யஸ்ரீ சிவன் – மணிஷா ராமதாஸ் ஆகியோரும் இந்த ஆண்டு பாராலிம்பிக்ஸ்-இல் பதக்கம் வென்று நம்முடைய தமிழ்நாட்டிற்குப் பெருமை சேர்த்திருக்கிறார்கள்! இதில் துளசிமதியின் தந்தை முருகேசன் அவர்கள் அப்போது அளித்த பேட்டியை நான் பார்த்தேன். அந்தப் பேட்டியில் சொல்கிறார், "கால்நடை மருத்துவப்படிப்பு படிக்கும் என்னுடைய மகள், இடையிடையே பயிற்சி செய்து, பாராலிம்பிக்ஸ் வரை சென்று, பேட்மிண்டன் மகளிர் ஒற்றையர் பிரிவில் வெள்ளிப்பதக்கம் வென்று இருப்பது, தமிழ்நாடு அரசின் மாநில விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் மற்றும் துறை அமைச்சரின் முழு முயற்சி"-என்று சொல்லியிருக்கிறார்.

விளையாட்டுத்துறையில் இளைஞர்கள் பங்கேற்பதை ஊக்குவிக்க, எத்தனையோ திட்டங்களை நாங்கள் செயல்படுத்துகிறோம்! கல்வி, விளையாட்டு இரண்டிற்கும் நம்முடைய திராவிட மாடல் அரசு சரிசமமான முக்கியத்துவத்தைக் கொடுக்கிறது! நம்முடைய திட்டங்களையும், உருவாக்கித்தருகின்ற வாய்ப்புகளையும் பயன்படுத்தி, நீங்கள் உலகளவில் பெருமை பெற வேண்டும்! இதற்கான எல்லா ஆதரவையும் வழங்குவதற்குத் தயாராக இருக்கிறோம்!

வெற்றியைவிட துணிவுதான் முக்கியம்

இந்த நிகழ்ச்சியைப் பார்த்துக்கொண்டு இருக்கும் பெற்றோர்களுக்கு நான் சொல்ல விரும்புவது, விளையாட்டு என்பது, வெறும் போட்டி இல்லை; அது உடல் வலிமையையும், மன வலிமையையும் தரக்கூடியது! உங்கள் பிள்ளைகளுக்கு விளையாட்டில் ஆர்வம் இருந்தால் அதை ஊக்கப்படுத்துங்கள்! நம்முடைய ஆதரவு கிடைத்தால்போதும், அதுவே நம்முடைய பிள்ளைகளுக்குப் பாதி வெற்றியைக் கொடுத்துவிடும்! நம்முடைய ஆதரவுடன், இன்னும் எத்தனை குற்றாலீஸ்வரன்களும், இளவழகிகளும் – சரத் கமல்களும் – மாரியப்பன்களும் – பிரக்ஞானந்தா – குகேஷ் போன்றவர்களும் சாதாரண வீடுகளிலிருந்து வந்து, உலக அரங்கில் பதக்கங்களையும், பாராட்டுகளையும் குவிக்கப்போகிறார்கள் என்று பாருங்கள். இதைத் தமிழ்நாட்டு இளைஞர்களான உங்கள் திறமைமேல்நம்பிக்கை வைத்து சொல்கிறேன்.

இந்த முதலமைச்சர் கோப்பை போட்டியில் எவ்வளவு பேர் பரிசு பெற்று இருக்கிறார்கள் என்பதை விட, எத்தனை இலட்சம் பேர் ஆர்வத்துடன் பங்கேற்றார்கள் என்பதுதான் முக்கியம்! வெற்றியை விட போட்டியிடுவதற்கான துணிவுதான் முக்கியம்! அதனால், வரும் ஆண்டுகளில் இன்னும் நிறைய திறமையாளர்கள் இந்தப் போட்டியில் பங்கேற்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்! அதேசமயம், உங்கள் எல்லோருக்கும் 'ஸ்போர்ட்ஸ்மேன்ஷிப்' (Sportsman-ship) மிகவும் அவசியம்! போட்டிகளில் வெற்றி பெறுவதற்காக மட்டுமே விளையாடக் கூடாது! ஏன் என்றால், வெற்றி என்பது டார்கெட் (Target)! விளையாட்டு என்பது உங்களின் பேஷன் (Passion)!

"Search Your Passion, Success will follow you" உங்கள் வெற்றியைக் கொண்டாட தமிழ்நாடே காத்திருக்கிறது!

எனவே நான் மீண்டும், மீண்டும் அனைவரையும் வாழ்த்துகிறேன், பாராட்டுகிறேன். அதுமட்டுமல்ல. இங்கு நமக்கு முன்பு நடத்திய கலைநிகழ்ச்சிகள், ஆடல் பாடலோடு நடைபெற்ற கலைநிகழ்ச்சிகள். இன்றைக்குத் திராவிட மாடல் அரசு செய்துகொண்டிருக்கும் சாதனைகளையும், திட்டங்களையெல்லாம் அந்த ஆடல்கள் மூலமாகவும், பாடல்கள் மூலமாகவும் வெளிப்படுத்தியிருக்கிறார்களே... அவர்கள் சிறப்பாக அந்தப் பணியைச் செய்திருக்கிறார்கள். எனவே, அவர்களுக்கும் என்னுடைய வாழ்த்துகளைத் தெரிவித்து என் உரையை நிறைவு செய்கிறேன்.

நன்றி! வணக்கம்!

சென்னை ஜவஹர்லால் நேரு உள்விளையாட்டு அரங்கத்தில் நடைபெற்ற முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகள் 2024 இன் நிறைவு விழாவில் மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரை,

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், அனைத்து அமைச்சர் பெருமக்களுக்கும் என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகள் 2024-இன், நிறைவு விழா மற்றும் பரிசளிப்பு விழாவில் பங்கேற்பதில், உங்களையெல்லாம் சந்திப்பதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். பெருமையடைகின்றேன். கிட்டத்தட்ட ஒரு மாத காலத்துக்குமேல் நடைபெற்ற முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகள் இன்றோடு நிறைவு பெறுகின்றன.

இறுதிப் போட்டிகள்தான் நிறைவு பெறுகிறதே தவிர, இங்கே வெற்றிகளை குவித்திருக்கக் கூடிய விளையாட்டு வீரர்கள், உங்கள் ஒவ்வொருவருக்கும், விளையாட்டுத்துறையில் அடுத்த கட்டப் பயணம் இங்கே துவங்கி இருக்கின்றது. தமிழ்நாட்டில் விளையாட்டினை ஒரு மாபெரும் மக்கள் இயக்கமாக ஆக்கிடும் வகையில், முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகளை நாம் நடத்திக் காட்டி இருக்கிறோம்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், தலைமையிலான நம்முடைய திராவிட மாடல் அரசு, ஒவ்வொரு துறையிலும், தமிழ்நாட்டை இன்றைக்கு முதன்மை மாநிலமாக மாற்றிக் காட்டி இருக்கின்றது. குறிப்பாக, நம்முடைய முதலமைச்சர் அவர்களுடைய வழிகாட்டுதலில், இந்தியாவின் விளையாட்டுத்துறை தலைநகராக தமிழ்நாடு உருவெடுத்துக் கொண்டு வருகிறது.

அதற்கு ஒரு சிறந்த உதாரணம் தான், முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகள். தமிழ்நாட்டினுடைய ஒலிம்பிக் என்று சொல்லும் அளவுக்கு, முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகளை மிகப் பிரம்மாண்டமாக நடத்திக் காட்டி இருக்கின்றோம். முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகளை உலகத்தரத்தில் நடத்தவேண்டும் என்று உத்தரவிட்டதோடு மட்டுமல்லாமல் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 83 கோடி ரூபாயை அதற்கு ஒதுக்கித் தந்தார்கள். அது மட்டுமல்லாமல் பரிசுத் தொகை மட்டுமே 37 கோடி ரூபாயை வழங்கச் சொன்னார்கள்.

இந்திய ஒன்றியத்திலேயே ஒரு மாநில அரசால் நடத்தப்படும் விளையாட்டுப் போட்டிகளில் அதிக வீரர்கள் கலந்து கொள்வதிலும், அதிக பரிசுத் தொகை வழங்கப்படுவதிலும் நம்பர் ஒன் மாநிலம் நம்முடைய தமிழ்நாடுதான். இதற்காக, நம் விளையாட்டு மேம்பாட்டுத்துறை சார்பிலும், விளையாட்டு வீரர்கள் உங்கள் சார்பிலும், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சர்வதேச, தேசிய அளவிலான போட்டிகள்

நம்முடைய முதலமைச்சர் அவர்களை பொறுத்தவரை, விளையாட்டை எப்போதும் அவர், Extra - Curricular Activities ஆக பார்த்தது இல்லை. இன்னும் சொல்லப்போனால் விளையாட்டினை அவர் Co-Curricular ஆக்டிவிட்டீஸ் என்று கூடப் பார்க்கவில்லை, விளையாட்டினை அவர் Main Curriculum என்ற அளவில்தான் பார்த்து அதற்கான முக்கியத்துவம் அளித்து வருகின்றார். சென்றாண்டு, முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகளில் தமிழ்நாடு முழுவதும் இருந்து சுமார் 6 இலட்சத்து 71 ஆயிரம் பேர் கலந்து கொண்டார்கள். இந்தாண்டு 11 இலட்சத்து 56 ஆயிரம் பேர் விண்ணப்பித்து இந்த முதலமைச்சர் விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொண்டார்கள்.

மாணவர்கள், இளைஞர்கள் என அனைத்துத் தரப்பினரையும் விளையாட்டுத் துறையின் மீது ஆர்வம் கொள்ளச் செய்வதற்காக மாநில அளவிலான போட்டிகளை மட்டுமல்ல, சர்வதேச, தேசிய அளவிலானப் போட்டிகளையும் நாம் தமிழ்நாட்டில் தொடர்ந்து நடத்தி வருகிறோம்.

Grass root level, அதாவது கிராம அளவில் விளையாட்டுத் துறை சாதனையாளர்களைத் தயார்படுத்த வேண்டும் என்று 'டாக்டர் கலைஞர் ஸ்போர்ட்ஸ் கிட்' திட்டத்தை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள்.

கலைஞருடைய நூற்றாண்டினை முன்னிட்டு டாக்டர் கலைஞர் ஸ்போர்ட்ஸ் கிட் திட்டத்தை 86 கோடி ரூபாய் செலவில் தமிழ்நாட்டின் அனைத்து 12,525 ஊராட்சிகளுக்கும் 33 வகையான ஸ்போர்ட்ஸ் கிட் உபகரணங்களைத் நாங்கள் தொகுத்து வழங்கிக் கொண்டிருக்கின்றோம்.

தமிழ்நாடு சாம்பியன்ஸ் பவுண்டேசன்

விளையாட்டில் சாதிக்க துடிக்கிற வீரர்களுக்குப் பொருளாதாரம் தடையாக இருக்ககூடாது என்று நம்முடைய முதலமைச்சர் அவர்கள், சென்ற ஆண்டு தமிழ்நாடு சாம்பியன்ஸ் பவுண்டேசன் 2023 சென்ற ஆண்டு தொடங்கி வைத்து அந்த மேடையிலேயே, அவருடைய சொந்த பணமாக ரூபாய் 5 இலட்சம் ரூபாயை கொடுத்து பெருமை படுத்தினார்கள்.

இந்தத் திட்டம் துவங்கி ஒன்றறை வருடத்தில் இன்றைக்குத் தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை மூலமாக கிட்டத்தட்ட 700 வீரர்களுக்கு, 12 கோடி ரூபாய் அளவுக்கு நிதி உதவிகளை வழங்கி இருக்கின்றோம். நிதி உதவியுடன் செல்லும் நம்முடைய விளையாட்டு வீரர்கள் – வீராங்கனைகள் பதக்கங்களுடன் திரும்பி வந்து பெருமை சேர்த்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதையும் இங்கே நான் கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

கடந்த 3 ஆண்டுகளில், 3 ஆயிரத்து 330 வீரர்களுக்கு 109 கோடி ரூபாயை ஹை காஷ் இன்சென்டிவ்ஸ் உயரிய ஊக்கத் தொகையாக நம்முடைய முதலமைச்சர் அவர்கள் வழங்கிப் பெருமைப்படுத்தி இருக்கிறார்கள்.

விளையாட்டு வீரர்களுக்கான முக்கியமான தகுதிகள் என்று Punctuality, Discipline, Consistency என மூன்றையும் சொல்வார்கள். இந்த மூன்றும் இருந்தால் தான் விளையாட்டில் Sports-இல் சாதிக்க முடியும். இங்கே இத்தனை பேர் வெற்றி பெற்று வந்திருக்கிறீர்கள் என்றால், இந்த மூன்று குணங்கள் மட்டுமல்ல, இதைத்தாண்டி விடாமுயற்சி எனும் முக்கியமான குணத்தையும் நீங்கள் அனைவரும் பெற்று இருக்கிறீர்கள்.

அந்த வகையில் முதல் மூன்று இடங்களைப் பிடித்துள்ள சென்னை, செங்கல்பட்டு, கோவை மாவட்ட வீரர் – வீராங்கனைகளுக்கு எங்களுடைய வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அதே போல, முதல் மூன்று இடங்களுக்குள் இந்தாண்டு வர முடியாமல் போனாலும், சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய அத்தனை வீரர்களுக்கும் எங்களுடைய பாராட்டுகளையும் வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன். வரும் ஆண்டுகளில் நீங்களும் நிச்சயம் வெற்றி பெறுவீர்கள். உறுதியோடும் – பயிற்சியோடும் மீண்டும் வாருங்கள். உங்களுக்கான களம் காத்திருக்கிறது.

எதிர்காலச் சர்வதேச வீரர்– வீராங்கனைகள்

அதேபோல முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகளுக்காக மாவட்ட, மண்டல, மாநில அளவில் ஏற்பாடுகளை மிகச்சிறப்பாகச் செய்த அனைத்து அதிகாரிகள், பணியாளர்கள், தன்னார்வலர்கள், இதில் முக்கியப் பங்கு வகித்த SDAT விடுதி மாணவர்கள், அனைவருக்கும் எங்களுடைய வணக்கத்தையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகள், எதிர்காலச் சர்வதேச வீரர் – வீராங்கனையரை அடையாளம் காட்டியிருக்கிறது. இதில் பங்கேற்ற, வெற்றி பெற்ற அத்தனை வீரர், வீராங்கனையருக்கும் எங்களுடைய வாழ்த்துக்களை நாங்கள் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இந்தச் சிறப்புக்குரிய நிகழ்வுக்கு வருகை தந்து, எங்கள் துறையைப் பெருமைப்படுத்தியுள்ள மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை மீண்டும் வருக, வருகவென வரவேற்று மகிழ்கிறேன்.

அதேபோலமாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், மாண்புமிகு மேயர், துணைமேயர், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளுடைய பிரதிநிதிகளை வரவேற்று மகிழ்கிறேன்.

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறையினுடைய அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. அதுல்ய மிஸ்ரா, ஐ.ஏ.எஸ், அவர்களுக்கும், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் உறுப்பினர் செயலர் திரு. மேகநாத ரெட்டி, ஐ.ஏ.எஸ் அவர்களுக்கும் நான் என்னுடைய வணக்கத்தையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மேடையில் இருக்கக் கூடிய விளையாட்டு வீரர்கள் சகோதரர்கள் மாரியப்பன் தங்கவேலு அவர்களையும், சரத்கமல் ஆகியோரையும் வரவேற்று மகிழ்கிறேன். இந்த நிகழ்ச்சிக்கு வருகை தந்துள்ள பத்திரிகை, ஊடக நண்பர்களையும் வருக, வருக என வரவேற்று மகிழ்கின்றேன்.

எல்லாவற்றிற்கும் மேலாக, இங்கே பெருந்திரளாகக் கூடிநிற்கும் விளையாட்டு வீரர், வீராங்கனைகள், SDAT விடுதி மாணவர்களை வரவேற்று மகிழ்கிறேன்.

நன்றி வணக்கம்!

"தமிழரசு" அச்சகத்தில் அச்சுப்பணிகள் குறித்து மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் அவர்களின் ஆய்வு

படமும் / செய்தியும்

மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் திரு. மு.பெ.சாமிநாதன் அவர்கள், 15.10.2024 அன்று, சென்னை, தரமணியில், செய்தி மக்கள் தொடர்புத் துறையின்கீழ் இயங்கிவரும், 'தமிழரசு' அச்சகம் மற்றும் அலுவலகத்தில், அச்சுப் பணிகளைப் பார்வையிட்டு, நவீன டிஜிட்டல் பிரிண்டர் இயந்திரத்தில் நடைபெற்றுவரும் பணிகளை ஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் திரு. வே.ராஜாராமன், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

வடகிழக்குப் பருவமழை

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களின் "களப் பணிகள்"

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆய்வு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் 14.10.2024 அன்று தலைமைச் செயலகத்தில், 15.10.2024 முதல் 17.10.2024 வரை சென்னை, அதனைச் சுற்றியுள்ள திருவள்ளூர், செங்கல்பட்டு, காஞ்சிபுரம், வட மாவட்டங்களில் கனமழை பெய்யக்கூடும் என்ற வானிலை மைய எச்சரிக்கையைத் தொடர்ந்து எடுக்கப்பட்டுள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

இந்திய வானிலை ஆய்வு மையம் தனது 13.10.2024 நாளிட்ட அறிவிக்கையில், தமிழ்நாட்டின் கடலோர, வட மாவட்டங்களில் 14.10.2024 முதல் 17.10.2024 வரை கனமழை முதல் மிகக் கனமழை பெய்யக்கூடும் என்று தெரிவித்துள்ளது. மேலும், பல்வேறு முன்னெச்சரிக்கை மாதிரிகளின் (forecast models) அடிப்படையில் தமிழ்நாட்டில் கனமழை பெய்யக்கூடும் என்று தெரியவருகிறது. 14.10.2024 முதல் 17.10.2024 வரை மொத்தம் சுமார் 40 செ.மீ. வரையும், ஒரே நாளில் அதிகபட்சமாக 20 செ.மீ. மழை பெய்யக்கூடும் என்று தெரியவருகிறது.

இந்தக் கனமழையை எதிர்கொள்ள எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற ஆய்வின் போது, பெருநகரச் சென்னை மாநகராட்சி ஆணையர் அவர்கள், பெருநகரச் சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் தேங்கக்கூடிய மழைநீரை வெளியேற்ற 990 பம்புகள், 57 பம்ப்செட் பொருத்தப்பட்ட டிராக்டர் ஆகியவை தயார் நிலையில் இருக்கின்றன என்றும், மோட்டார் பொருத்தப்பட்ட 36 படகுகள் பாதிக்கப்படக்கூடிய இடங்களில் வைக்கப்பட்டுள்ளதாகவும், 46 மெட்ரிக் டன் பிளீச்சிங் பவுடர், 25 மெட்ரிக் டன் சுண்ணாம்பு தூள், பினாயில் ஆகியவை தேவையான அளவு, இருப்பு வைக்கப்பட்டுள்ளதோடு, 169 நிவாரண மையங்கள், போதுமான சமையல் கூடங்கள், மீட்புப் பணிகளுக்காக 59 JCB-க்கள், 272 மர அறுப்பான்கள், 176 நீர் இறைப்பான்கள், 130 ஜெனரேட்டர்கள், 115 லாரிகள் உள்ளிட்டவையும் தயார் நிலையில் உள்ளன என்றும் தெரிவித்தார்.

அதனைத் தொடர்ந்து, செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியர் அவர்கள் பேசும்போது, செங்கல்பட்டு மாவட்டத்தில், பாதிப்பிற்குள்ளாகும் பகுதிகள் கண்டறியப்பட்டு 33 பல்துறை மண்டலக் குழுக்கள் உருவாக்கப்பட்டுள்ளது என்றும், 102 JCB-க்கள், 116 படகுகள், 83 ஜெனரேட்டர்கள், 116 நீர் இறைப்பான்கள் உள்ளிட்ட உபகரணங்களும், 290 நிவாரண முகாம்களும் தயார் நிலையில் உள்ளன என்றும் தெரிவித்தார்.

காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அவர்கள், தனது மாவட்டத்தில் பாதிப்பிற்குள்ளாகும் பகுதிகள் கண்டறியப்பட்டு 21 பல்துறை மண்டலக் குழுக்கள் உருவாக்கப்பட்டுள்ளது என்றும், 276 JCB-க்கள், 10 படகுகள், 30 ஜெனரேட்டர்கள், 250 நீர் இறைப்பான்கள், 43 மர அறுப்பான்கள் உள்ளிட்ட உபகரணங்களும், 62 நிவாரண முகாம்களும் தயார் நிலையில் உள்ளன என்றும் தெரிவித்தார்.

பின்னர், திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அவர்கள், பாதிப்பிற்குள்ளாகும் பகுதிகள் கண்டறியப்பட்டு 64 பல்துறை மண்டலக் குழுக்கள், 48 மருத்துவக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன என்றும், 660 நிவாரண முகாம்களும், 121 JCB-க்கள், 317 படகுகள், 81 ஜெனரேட்டர்கள், 206 நீர் இறைப்பான்கள், 154 மர அறுப்பான்கள், 31 தண்ணீர் லாரிகள் உள்ளிட்ட உபகரணங்களும் தயார் நிலையில் உள்ளன என்றும் தெரிவித்தார்.

பெருநகரச் சென்னை மாநகராட்சி மற்றும் மாவட்ட ஆட்சியர்களால் மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்துக் கேட்டறிந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், கனமழையின் தாக்கத்தினை எதிர்கொள்ள பொதுமக்களின் பாதுகாப்புக் கருதி பின்வரும் அறிவுரைகள் வழங்கினார்.

- 15.10.2024 அன்று சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம் மற்றும் செங்கல்பட்டு மாவட்டங்களில் பள்ளி, கல்லூரிகளுக்கு விடுமுறை அளிக்க வேண்டும்.
- 15.10.2024 முதல் 18.10.2024 வரை தனியார் தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள் தங்கள் ஊழியர்களை வீட்டிலிருந்தே பணிபுரிய அறிவுறுத்த வேண்டும்.
- தேசிய பேரிடர் மீட்புப் படை, தமிழ்நாடு பேரிடர் மீட்புப் படையினர் பாதிப்பிற்குள்ளாகக்கூடிய பகுதிகளுக்கு முன்கூட்டியே அனுப்பி வைக்கப்பட வேண்டும்.
- வெள்ளத்தால் பாதிக்கக்கூடிய பகுதிகளில் மீட்புப் படகுகள் இன்றே நிலைநிறுத்தப்பட வேண்டும்.
- மாவட்டக் கண்காணிப்பு அலுவலர்கள் தங்களுடைய பொறுப்பு மாவட்டங்களுக்குச் சென்று, ஆயத்த பணிகளையும், மீட்பு, நிவாரணப் பணிகளையும் மாவட்ட நிருவாகத்துடன் இணைந்து மேற்கொள்ள வேண்டும்.

சென்னை தலைமைச் செயலகம்...

- பொதுமக்களின் வசதிக்காக மெட்ரோ இரயில், பறக்கும் இரயில்களின் சேவைகளின் எண்ணிக்கையை உயர்த்த வேண்டும்.
- உணவுத் துறை மூலம் அத்தியாவசியப் பொருட்களின் விலை உயராமல் அவற்றைக் கட்டுப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.
- தங்குதடையின்றி ஆவின் நிறுவனம் மூலம் பால், பால் பொருட்கள் விநியோகத்தை உறுதி செய்ய வேண்டும்.
- முதியோர் மற்றும் ஆதரவற்றோர் இல்லங்களில் போதுமான உணவுப் பொருட்களை இருப்பு வைக்க அறிவுறுத்த வேண்டும்.
- நிவாரண முகாம்களை தயார் நிலையில் வைப்பதோடு, பாதிப்பிற்குள்ளாகக்கூடிய பகுதிகளில் இருந்து முன்கூட்டியே பொதுமக்களை நிவாரண முகாம்களில் தங்க வைக்க வேண்டும்.
- ரொட்டி, குடிநீர்ப் பாட்டில்கள் நிவாரண மையங்களில் இன்றே இருப்பு வைக்க வேண்டும். மேலும், மருத்துவ வசதிகள் செய்து தரப்பட வேண்டும். மாற்றுத்திறனாளிகளுக்குச் சக்கர நாற்காலிகள் ஏற்பாடு செய்ய வேண்டும்.
- மழை வெள்ளத்தால் போக்குவரத்து பாதிக்கப்படும் போது, பொதுமக்களுக்கு உடனடியாக மாற்று வழித்தடம் ஏற்பாடு செய்ய வேண்டும்.
- அனைத்து மாவட்டங்களிலும் சாலைப்பணிகள் நடைபெறும் இடங்களில் இரவு நேரத்தில் போதுமான ஒளிரும் பட்டைகள், பாதுகாப்புத் தடுப்புகள் அமைக்கப்பட வேண்டும்.
- மின் உற்பத்தி தடைபடாமல் இருக்கவும், மின் விநியோகம் சீராக இருக்கவும், கட்டுப்பாட்டு மையத்தில் கூடுதலான பணியாளர்கள் இருப்பதையும் உறுதி செய்ய வேண்டும்.
- முட்டுக்காடு, பக்கிங்ஹாம் கால்வாய் - கலைஞர் கருணாநிதி பாலம் அருகில், ஒக்கியம் மடுவு ஆகிய இடங்களில் நீர்வடிவதற்கான தடைகளை நீக்குவதற்கு போதுமான இயந்திரங்களை இருப்பில் வைக்க வேண்டும்.
- மழை அளவு, அணைகளின் நீர்வரத்து ஆகியவற்றைத் தொடர்ந்து கண்காணித்து அணைகளில் நீர் மேலாண்மை செய்ய வேண்டும்.
- பாதிப்பிற்குள்ளான பகுதிகளில் வசிக்கும் முதியோர், மாற்றுத்திறனாளிகள், கர்ப்பிணிப் பெண்கள், பாலூட்டும் தாய்மார்களுக்கு சிறப்பு முன்னுரிமை அளித்து பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.
- மீட்புப் பணிகளுக்குத் தேவையான நீர் இறைப்பான்கள், மர அறுப்பான்கள் JCB இயந்திரங்கள் உள்ளிட்ட உபகரணங்களை தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும்.

- தடையற்ற குடிநீர் வழங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய போதுமான ஜெனரேட்டர்களை வைத்திருக்க வேண்டும்.
- பொது சுகாதாரத்தைப் பேணிக் காக்க தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும்.

பொதுமக்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கிய அறிவுரைகள்

- விவசாயிகள், மீனவர்கள், நான்கு சக்கர மற்றும் இருசக்கர வாகன உரிமையாளர்கள், விடுதிகளில் தங்கி இருப்பவர்கள், பயணங்களைத் திட்டமிட்டுள்ளவர்கள், அடுக்குமாடிக் குடியிருப்புகளில் வசிப்பவர்கள் தொழிற்பேட்டைகள், வணிக நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள், நடைபாதை வியாபாரிகள், கட்டுமானப் பணியை மேற்கொள்பவர்கள் கனமழைக்கான திட்டமிடுதலையும், முன்னேற்பாடுகளையும் செய்து கொள்ள வேண்டும்.
- தாழ்வான பகுதிகளில் வசிக்கும் மக்கள் மாநகராட்சி மற்றும் மாவட்ட நிருவாகத்தின் அறிவுரையின்படி முன்கூட்டியே நிவாரண முகாம்களுக்குச் செல்ல வேண்டும்.
- முக்கியப் பொருட்கள், ஆவணங்களை நீர் புகா வண்ணம் பாதுகாப்பாக வைக்கவேண்டும்.
- கனமழை எச்சரிக்கையை முன்னிட்டு பொதுமக்கள் கடற்கரை, சுற்றுலா தலங்கள், வழிபாட்டுத் தலங்கள், நீர்நிலைகள் ஆகிய பகுதிகளில் கூடவேண்டாம்.
- அறுந்து கிடக்கும் மின் கம்பிகளிலிருந்து விலகி இருக்க வேண்டும்.
- கர்ப்பிணிப் பெண்கள், நோயாளிகள், முதியவர்கள் ஆகியோருக்குத் தேவையான முன்னேற்பாடுகளைச் செய்து கொள்ள வேண்டும்.
- பொதுமக்கள் சமூக வலைதளங்களில் பரவும் வதந்திகளை நம்ப வேண்டாம். அரசு அலுவலர்கள் அளிக்கும் முறையான முன்னெச்சரிக்கைகளின்படி நடந்து கொள்ள வேண்டும் என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கேட்டுக் கொண்டார்.

புளியந்தோப்பில் ஆய்வு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 15.10.2024 அன்று மழைவெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை ஆய்வு செய்தார். சென்னை புளியந்தோப்புப் பகுதியில் மழைநீர் அகற்றும் பணியில் மும்முரமாக ஈடுபட்டிருந்த 15க்கும் மேற்பட்ட முன்களப் பணியாளர்களைப் பாராட்டினார். அவர்களை அருகிலிருந்த தேநீர்க் கடைக்கு அழைத்துச்சென்று அவர்களுக்கு டீ-பிஸ்கட் வாங்கித்தந்து ஊக்கப்படுத்தி உற்சாகமளித்தார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இந்தச் செயலை முன்களப் பணியாளர் அனைவரும் வியந்து வெகுவாகப் பாராட்டினார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே, தங்களை அழைத்துச்சென்று தேநீர் வாங்கித்தந்து உதவி உற்சாகப்படுத்தியது அவர்களின் பெருந்தன்மையையும் மனித நேயத்தையும் புலப்படுத்துகின்றன. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அளித்துள்ள ஊக்கம் மேலும் தங்களைப் பணியில் மிகுந்த ஆர்வமுடன் தொடர்ந்து ஈடுபட வழிவகுக்கும் என தெரிவித்தனர்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவுப்படி, வடகிழக்குப் பருவமழை முன்னெச்சரிக்கை பணிகளுக்கெனப் பெருநகரச் சென்னை மாநகராட்சி சார்பில் 21,000 பணியாளர்கள் சுழற்சி முறையில் 15 மண்டலங்களிலும் பணி செய்கின்றனர். அதே போன்று சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் சார்பில்

2,149 பணியாளர்கள், தமிழ்நாடு மின்வாரியம் சார்பாகச் சென்னையில் 5,000க்கும் மேற்பட்ட மின்களப் பணியாளர்கள் பணியில் ஈடுபட்டுள்ளனர். தமிழ்நாடு முழுவதும் இன்று ஒரே நாளில் 1,000 இடங்களில் மழைக்கால சிறப்பு மருத்துவ முகாம்கள் ஏற்பாடு செய்யப்பட்டு பொதுமக்களுக்கு இலவசமாக மருத்துவ உதவிகள் அளிக்கப்படுகின்றன.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 16.10.2024 அன்று சென்னை, அதனைச் சுற்றியுள்ள திருவள்ளூர், செங்கல்பட்டு, காஞ்சிபுரம் ஆகிய மாவட்டங்களில் கனமழை பெய்து வரும் நிலையில், சென்னை, கிண்டி ரேஸ் கிளப் பகுதி, வேளச்சேரி இரயில்வே ஆறுகண் கல்வெட்டு பகுதியில் உள்ள வீராங்கால் ஓடை மற்றும் நாராயணபுரம் ஏரி ஆகிய இடங்களில் நடைபெற்று வரும் பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

கிண்டி ரேஸ் கிளப் பகுதி

சென்னை, கிண்டி ரேஸ் கிளப் நிருவாகத்திற்கு அரசால் குத்தகைக்கு வழங்கப்பட்ட 160.86 ஏக்கர் நிலம் மீளப்பெறப்பட்டு, அந்நிலத்தில் 118 ஏக்கர் பரப்பளவில் தோட்டக்கலைத் துறையின் சார்பில் பொதுமக்கள் பயன்பாட்டிற்காக மிகச் சிறந்த பூங்கா, பசுமைவெளி மற்றும் பொதுமக்களுக்கு தேவையான வசதிகள் உருவாக்கம் செய்திட தமிழ்நாடு அரசு ஆணை வெளியிட்டுள்ளது.

மேலும், கிண்டி ரேஸ் கிளப் நிருவாகத்திடமிருந்து மீளப்பெறப்பட்ட அந்நிலத்தில் ஏற்கனவே உள்ள 3 குளங்கள் பெருநகர சென்னை மாநகராட்சியின் மூலமாக ஆழப்படுத்தி அகலப்படுத்தும் பணிகள் மற்றும்

ஓட்டேரி கால்வாய்...

டெமல்லஸ் சாலை...

புளியந்தோப்பு...

ஸ்டீபன்சன் சாலை...



சென்னை, எழிலகம் கட்டுப்பாட்டு மையம்...

புதிதாக 4.24 மில்லியன் கன அடி கொள்ளளவு கொண்ட 4 குளங்கள் வெட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இந்த குளங்கள் வெட்டப்படுவதன் மூலம் பிள்ளையார் கோயில் தெரு, மடுவாங்கரை, ஐந்து பர்லாங் சாலை, வண்டிகாரன் தெரு, ரேஸ் கிளப் உட்புறச் சாலை, வேளச்சேரி பிரதான சாலை ஆகிய பகுதிகளுக்கு செல்லும் கிண்டி ரேஸ் கிளப் மழைநீர், மேற்காணும் பகுதிகளுக்கு செல்லாமல் இக்குளங்களிலேயே தேக்கி வைக்கப்படும். இதன்மூலம், அப்பகுதிகளில் மழைநீர் தேங்காத நிலை ஏற்படுவதோடு, போக்குவரத்திற்கு பாதிப்பில்லாமல், பொதுமக்களின் இயல்பு வாழ்க்கையும் பாதிக்கப்படாமலும் இருக்கும். அத்துடன் அப்பகுதியின் நிலத்தடி நீர்மட்டமும் உயரும். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்றைய தினம் கிண்டியில் நடைபெற்று வரும் அக்குளங்களை வெட்டும் பணியினை பார்வையிட்டு, ஆய்வு செய்து, பணிகளை விரைந்து முடித்திட அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

வேளச்சேரி இரயில்வே ஆறுகண் கல்வெட்டு பகுதியில் உள்ள வீராங்கல் ஓடை

வேளச்சேரி இரயில்வே ஆறுகண் கல்வெட்டு பகுதியில் உள்ள வீராங்கால் ஓடையின் நீரானது பள்ளிக்கரணை சதுப்பு நிலத்தின் வழியாக பக்கிங்ஹாம் கால்வாய்க்கு சென்று, பின்னர் கடலுக்கு சென்றடையும். வீராங்கல் ஓடை பொதுப்பணித் துறையின் மூலமாக தற்போது தூர்வாரும் பணி நடைபெற்று வருகிறது.

வீராங்கால் ஓடைப் பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் தூர்வாரும் பணியினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்றைய தினம் பார்வையிட்டு ஆய்வு செய்து, பணிகளை விரைந்து முடித்திட அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

நாராயணபுரம் ஏரி

நீர்வளத்துறை மூலம் நாராயணபுரம் ஏரிக்கரையினை பலப்படுத்தும் பணிகளும், நீர் ஒழுங்கியினைச் சீரமைப்பு செய்யும் பணிகளும் நடைபெற்று வருகின்றன.

இன்று அதிகாலை 2 பொக்லைன், 10 லாரிகளைக் கொண்டு கரையினை பலப்படுத்தும் பணி, ஏரியின் நீர் ஒழுங்கியினை பொக்லைன், JCB இயந்திரங்கள் கொண்டு சீரமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும், கீழ்க்கட்டளை ஏரியின் உபரி நீர் கால்வாய்ப் பாலத்தில் மிதக்கும் தாவரங்கள் மற்றும் குப்பைகளை பொக்லைன் இயந்திரம் கொண்டு அகற்றும் பணி, தனியாரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள மணல் மேட்டினை அகற்றும் பணியும் நடைபெற்று வருகிறது.

கிண்டி ரேஸ் கிளப் பகுதி

வீராங்கல் ஓடை, வேளச்சேரி

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்றையதினம் நாராயணபுரம் ஏரியில் நடைபெற்று வரும் தூர்வாரும் பணிகள், ஏரிக்கரையினைப் பலப்படுத்தும் பணிகளைப் பார்வையிட்டு ஆய்வு செய்து, மேற்காணும் பணிகள் அனைத்தையும் இன்று மாலைக்குள் முடிக்கப்பட வேண்டும் என்று அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

பெருநகரச் சென்னை மாநகராட்சியின் சார்பில் வடகிழக்குப் பருவமழையையொட்டி எடுக்கப்பட்டுள்ள மீட்பு நடவடிக்கைகள் பற்றிய விவரங்கள்.

பெருநகரச் சென்னை மாநகராட்சி பகுதிகளில் கடந்த 24 மணி நேரத்தில் சராசரியாக 131 மி.மீ. மழை பெய்துள்ளது. மழையின் காரணமாக பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் சாய்ந்த 67 மரங்கள் உடனடியாக அகற்றப்பட்டுள்ளன.

பெருநகரச் சென்னை மாநகராட்சி சார்பில் 300 இடங்களில் நிவாரண மையங்கள் அமைக்கப்பட்டு, ஒவ்வொரு மையத்திலும் 200 நபர்கள் வரை தங்கும் வசதி செய்யப்பட்டுள்ளது. இதுவரை தாழ்வான பகுதிகளில் இருந்து 1360 நபர்கள் அழைத்து வரப்பட்டு 36 நிவாரண மையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இந்த மையங்களில் உணவு, சுகாதார வசதி, குடிநீர் வசதி செய்து தரப்பட்டுள்ளன.

பெருநகரச் சென்னை மாநகராட்சி பகுதிகளில் நிவாரண மையங்களுக்கு உணவு வழங்க 98 மைய சமையல் கூடங்கள் தயார் நிலையில் உள்ளன. 15.10.2024 அன்று காலை உணவு 1000 நபர்களுக்கும், மதிய உணவு 45,250 நபர்களுக்கும், இரவு உணவு 2,71,685 நபர்களுக்கும் வழங்கப்பட்டதோடு, 16.10.2024 அன்று காலை உணவு 4,16,000 நபர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

நாராயணபுரம் ஏரி, பள்ளிக்கரணை

கொளத்தூரில் ஆய்வு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி பெருநகரச் சென்னை மாநகராட்சியில் உள்ள 388 அம்மா உணவகங்களில் 16.10.2024, 17.10.2024 அன்றும் பொதுமக்களுக்கு இலவசமாக உணவு வழங்கப்படும்.

சென்னையில் உள்ள 22 சுரங்கப் பாதைகளில் போக்குவரத்துச் சீராக உள்ளது. நீர்தேங்கியுள்ள 542 இடங்களில் 412 இடங்களில் மழைநீர் அகற்றப்பட்டுள்ளததோடு, மீதமுள்ள இடங்களிலும் நீர் அகற்றும் பணிகள் நடைபெற்று வருகின்றன. மழைநீரை வெளியேற்றும் வகையில் பல்வேறு திறன்கொண்ட 1,223 மோட்டார் பம்புகள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

கடந்த 24 மணிநேரத்தில் பெருநகரச் சென்னை மாநகராட்சிக் கட்டுப்பாட்டு அறைக்கு 6120 அழைப்புகள் வந்துள்ளன. இதன்மீது உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மாநிலப் பேரிடர் மீட்புக்குழு, தேசிய பேரிடர் மீட்புப் படையைச் சார்ந்த 8 குழுவினர் தயார்நிலையில் உள்ளனர். தேசிய பேரிடர் மீட்புப் படையினர் மணலி, எழும்பூர், செனாய் நகர், பள்ளிக்கரணையிலும், மாநில பேரிடர் மீட்புக் குழுவினர் செனாய் நகர்-2, வில்லிவாக்கம், ராஜரத்தினம் அரங்கத்திலும் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

மாநிலப் பேரிடர் மீட்புக்குழுவைச் சார்ந்த 80 வீரர்கள், தேசிய பேரிடர் மீட்புக்குழுவைச் சார்ந்த 100 வீரர்கள், மீட்புப் படகு, இயந்திர ரம்பம், ஸ்டெக்சர் உள்ளிட்ட மீட்பு கருவிகளுடனும், சென்னையில் 103 படகுகளுடனும் மீட்புப் பணிக்கு தயார் நிலையில் உள்ளனர்.

மழைக்காலத்தினை முன்னிட்டு, பொதுச் சுகாதாரத்துறையின் சார்பில் சென்னையில் மட்டும் நாள்தோறும் 100 இடங்களில் மழைக்கால சிறப்பு மருத்துவ முகாம்கள் நடத்தப்படுகின்றன.

சென்னை குடிநீர் வாரியத்தின் சார்பில் கழிவுநீர் அகற்றும் பணிக்காகச் சென்னை குடிநீர் வாரியத்தின் 73 சூப்பர் சக்கர் இயந்திரங்கள், மற்ற மாநகராட்சி / நகராட்சி / மாவட்டத்திலிருந்து கொண்டு வரப்பட்ட 89 சூப்பர் சக்கர் இயந்திரங்கள், பாதாள சாக்கடைகளில் அடைப்புகளைச் சீர் செய்வதற்கு 524 ஜெட்ராடிங் மற்றும் டீசில்டிங் இயந்திரங்கள் பணியில் ஈடுபட்டுள்ளன.

மேலும், சீரான குடிநீர் வழங்குவதற்கு நாள்தோறும் இயக்கப்படும் 453 லாரிகளுடன், கூடுதலாக 36 லாரிகள் இயக்கப்பட்டு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 17.10.2024 அன்று சென்னை, அதனைச் சுற்றியுள்ள மாவட்டங்களில் கனமழை பெய்ததையொட்டி, கொளத்தூர், வீனஸ் நகரில் அமைக்கப்பட்டுள்ள மழைநீர் வெளியேற்றும் நிலையத்தில் மழைநீர் வெளியேற்றும் பணிகள், ரெட்டேரியை மேம்படுத்தும் பணிகள், தணிகாசலம் உபரிநீர் கால்வாய் அகலப்படுத்தி மேம்படுத்தும் பணிகள் ஆகியவற்றை பார்வையிட்டு ஆய்வு செய்து, பாலாஜி நகரில் நடைபெற்று வரும் மருத்துவ முகாமை பார்வையிட்டு, கார்த்திகேயன் சாலையில் உள்ள திருவள்ளுவர் திருமண மண்டபத்தில் மாற்றுத்திறனாளி குழந்தைகளுக்கு நலத்திட்ட உதவிகளையும், ஜம்புலிங்கம் பிரதான சாலையில் காமராசர் சத்திரத்தில் தூய்மைப் பணியாளர்களுக்கு நலத்திட்ட உதவிகளையும் வழங்கி, மதிய உணவினைப் பரிமாறி, அவர்களுடன் உணவருந்தினார்.

கடந்த சில நாட்களாகத் தமிழ்நாட்டில் பெய்துவரும் கனமழையையொட்டி தமிழ்நாடு அரசு பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொண்டுவருகின்றன. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், தொடர் மழை பெய்து வந்த நிலையில் 15.10.2024 அன்று வட சென்னை பகுதிகளிலும், 16.10.2024 அன்று தென் சென்னை பகுதிகளிலும் ஆய்வு மேற்கொண்டு, நிவாரணப் பணிகளை விரைந்து முடித்திட அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

மேலும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். எழிலகத்திலுள்ள மாநில அவசரகாலச் செயல்பாட்டு மையத்திற்கு நேரில் சென்று சென்னை, காஞ்சிபுரம், செங்கல்பட்டு, திருவள்ளூர், இராணிப்பேட்டை, விழுப்புரம், கடலூர் ஆகிய மாவட்ட ஆட்சித் தலைவர்களுடன் காணொலிக் காட்சி வாயிலாக, அம்மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்து ஆய்வு மேற்கொண்டதோடு, நிவாரண முகாம்களில்தங்கியிருக்கும்பொதுமக்களுக்கு வழங்கப்பட்ட உணவு, தங்கும் வசதிகள் குறித்துக் கேட்டறிந்தார்.

வீனஸ் நகரில் மழைநீர் வெளியேற்றும் நிலையம்

அதனைத் தொடர்ந்து, 17.10.2024 அன்று மழைக் காலங்களில் அதிகளவு தண்ணீர் தேங்கும் தாழ்வான இடங்களான கொளத்தூர்,

வீனஸ் நகர்

வீனஸ் நகர், கணேஷ் நகர், செல்வி நகர் மற்றும் மஹாவீர் நகர் உள்ளிட்டப் பகுதிகளில் தேங்கும் மழைநீரினை அகற்றிட 1 கோடியே 40 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்ட மழைநீர் வெளியேற்றும் நிலையத்தின் மூலம், மழைநீர் வெளியேற்றப்பட்டு வரும் பணிகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார். பின்னர், அங்கிருந்த பொதுமக்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் மழைநீர் தேங்காமல், பாதிப்பு ஏதும் ஏற்படாமல் சிறப்பாக நடவடிக்கை எடுத்ததற்காக நன்றி தெரிவித்துக் கொண்டனர்.

ரெட்டேரி

தணிகாச்சலம் கால்வாய்

ரெட்டேரியை மேம்படுத்தும் பணி

நீர்வளத்துறை சார்பில் ரெட்டேரியை 44 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஆழப்படுத்தி, கரைகளை உயர்த்தி, அதன் கொள்ளளவினையும் உயர்த்தி, 3.5 கி.மீ. சுற்றுச்சுவர் கட்டும் பணி மற்றும் ரெட்டேரி தெற்கு பகுதியில் உள்ள மதகினை சீரமைக்கும் பணிகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்து, பணிகளை விரைந்து முடித்திட அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

பாலாஜி நகர் – மருத்துவ முகாம்

பருவமழைக் காலத்தில் பொது மக்களுக்கு நோய்த்தொற்றுகள் ஏற்படாமல் பாதுகாத்திடும் பொருட்டுப் பல்வேறு இடங்களில் மருத்துவ முகாம்கள் நடைபெற்று வருகிறது. அந்த வகையில் குமரன் நகர் சாலையில் உள்ள பாலாஜி நகரில் மருத்துவ முகாமினை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்து, பொதுமக்களுக்கு வழங்கப்பட்டுவரும் சிகிச்சைகள் குறித்து மருத்துவர்களிடம் கேட்டறிந்தார். இம்முகாமில் 12 மருத்துவர்கள் கொண்ட குழு சிகிச்சை அளித்து வருகிறது. மேலும், பொதுமக்களுக்கு முட்டை, ரொட்டி, பால் போன்ற அத்தியாவசியப் பொருட்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

தணிகாச்சலம் கால்வாய்

தொடர்ந்து, அயனாவரம், மாதவரம் வட்டத்தில் அமைந்துள்ள தணிகாசலம் நகர் உபரிநீர் கால்வாயில், கூடுதலாக உபரிநீர் செல்லும் வகையில் 91 கோடியே 36 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அகலப்படுத்தி மேம்படுத்தும் பணிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

மாற்றுத்திறனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள்

அதனைத் தொடர்ந்து, பெரியார் நகர், கார்த்திகேயன் சாலையில் உள்ள திருவள்ளுவர் திருமண மண்டபத்தில் - சென்னை, பெரம்பூர், செம்பியம், ராகவா தெருவில் அமைந்துள்ள சி.எஸ்.ஐ. புத்துயிர் சிறப்புப் பள்ளியில் பயிலும் 70 மாற்றுத்திறனாளி குழந்தைகளின் நலன், பள்ளியின் மேம்பாட்டிற்காக 2 கணினிகள், 1 பிரிண்டர், 2 இரும்பு பீரோ, அத்தியாவசியப் பொருட்கள், என 2 இலட்சம் ரூபாய் மதிப்பிலான பொருட்களையும், அச்சிறப்புப் பள்ளியின் தாளாளர் டாக்டர் எட்வின் ராஜ்குமார் அவர்களிடம் பள்ளி மேம்பாட்டிற்காக நிதியுதவியும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

தூய்மைப் பணியாளர்களுக்கு நலத்திட்ட உதவிகள்

பின்னர், ஜம்புலிங்கம் பிரதான சாலையில் உள்ள காமராசர் சத்திரத்தில், 600 தூய்மைப் பணியாளர்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அரிசி, ரெயின் கோட், புடவை, பெட்ஷீட் (போர்வை), ரஸ்க், பால் பவுடர்,

துவரம் பருப்பு, மிளகாய்த்தூள், சமையல் எண்ணெய், லுங்கி உள்ளிட்ட 10 அத்தியாவசியப் பொருட்களை வழங்கி, தூய்மைப் பணியாளர்களுக்கு பிரியாணியுடன் கூடிய மதிய உணவினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அன்புடன் பரிமாறி, அவர்களுடன் உணவருந்தினார்.

அம்மா உணவகங்களில் இலவச உணவு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் சென்னை மாநகரை அச்சுறுத்திய சிவப்பு எச்சரிக்கை மழை அறிவிப்பைத் தொடர்ந்து சென்னை மாநகரிலுள்ள அம்மா உணவகங்களில் 16, 17 ஆகிய இரண்டுநாள்களில்கட்டணமின்றி உணவு வழங்கப்படும் என அறிவித்தார்கள்.

மழைகாரணமாகவேலைக்குச் செல்லாத ஏழைகளுக்கு இந்த அறிவிப்பு பெரிதும் உதவியாக அமைந்தது. அதன்படி, அம்மா உணவகங்களில் 16.10.2024 அன்று காலையில் இட்லி பொங்கல் உணவும் பிறபகலில் பல்வேறு கலவை சாத உணவுகளும் வழங்கப்பட்டன.

காலை மாலை இரண்டு வேளையும் 78,557 பேர் கட்டணமில்லா உணவினைப் பெற்றுப் பயனடைந்தனர்.

அதேபோல, மாலையில் 29,316 ஏழைகளுக்குச் சப்பாத்தி உணவு கட்டணமின்றி வழங்கப்பட்டது.

முன்களப் பணியாளர்களுக்கு ஊக்கம்

மழை காரணமாக வேலையும் வருமானமும் இல்லாமல் மக்கள் சிரமப்படுவார்கள் என்பதை எண்ணி அம்மா உணவகங்களில் கட்டணமில்லா உணவு வழங்க உத்தரவு பிறப்பித்து எங்களுக்கு உதவிபுரிந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு மனதார எங்கள் நன்றியைத் தெரிவிக்கிறோம் என்று கட்டணமில்லா உணவு சாப்பிட்ட மக்கள் கூறினர்.

இந்நிலையில் மாண்புமிகு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களும், துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்களும், மற்ற அமைச்சர்கள், அதிகாரிகளுடன் மழையால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு நேரடியாகச் சென்று நிவாரணப் பொருள்களை வழங்கினார்கள். குறிப்பாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் புளியந்தோப்புப் பகுதியில் ஆய்வு மேற்கொண்டு அங்கு பணி மேற்கொண்டிருந்த சென்னை மாநகராட்சி முன்களப் பணியாளர்கள், தூய்மைப் பணியாளர்களுக்கு ஊக்கமளித்தார்.

மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்கள், சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு மாவட்டங்களில் உள்ள பெரும்பாலான பகுதிகளுக்கு நேரடியாகச் சென்று மழைநிவாரணப் பணிகளை துரிதப்படுத்தினார். அங்கு பொதுமக்கள் தெரிவித்த கோரிக்கைகளை

உடனடியாக நிறைவேற்றிட அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

பெய்த பெருமழையால் சென்னை மாநகரம் 542 பகுதிகளில் மழைநீர் தேங்கத் தொடங்கியது.அந்தப் பகுதிகளில் எல்லாம் ஏற்கனவே தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்த மோட்டார் பம்ப்களை பயன்படுத்தி மழைநீர் தேங்க விடாமல் செய்த மாநகராட்சிப் பணியாளர்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பாராட்டினார்கள்.

தாழ்வான பகுதிகளில் குடியிருந்த மக்களைப் பாதுகாத்திட 300 நிவாரண மையங்கள் மாநகரின் பல்வேறு பகுதிகளிலும் அமைக்கப்பட்டு அவர்களுக்குத் தேவையான உணவு, உடை, குடிநீர் ஆகியவற்றை மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்கள். மழையில் பாதிக்கப்பட்டவர்களுக்கு மொத்தம் 2 நாட்களிலும் 14,84,735 பேருக்கு உணவு விநியோகிக்கப்பட்டது.

மழை நிவாரணப் பணிகள்

சென்னை மாநகரம் முழுவதிலும் 304 மழைக்கால மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு, அவற்றில் 17,471 பேருக்கு மருத்துவ உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

சென்னையில் உள்ள 22 சுரங்கப்பாதையிலும் மழைநீர் அகற்றப்பட்டு போக்குவரத்துச் சீர் செய்யப்பட்டது.

திடீரென பெய்த பெருமழை காரணமாக மக்கள் பாதிக்கப்படாமல் இருப்பதற்காக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களும், துணை முதலமைச்சர் அவர்களும், அமைச்சர் பெருமக்களும், நாடாளுமன்றச் சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சிப் பிரதிநிதிகள், அதிகாரிகள் ஆகியோரும் மக்களுடன் சேர்ந்து மழை நிவாரணப் பணிகளை மேற்கொண்டார்கள். ■

இந்திய விமானப் படையின் விமானக் கண்காட்சி 2024

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள், இந்திய விமானப் படை தினத்தை முன்னிட்டு, சென்னை, மெரினா கடற்கரையில் 06.10.2024 அன்று நடைபெற்ற இந்திய விமானப் படையின் பிரம்மாண்ட வான்வெளி சாகச நிகழ்ச்சியைப் பார்வையிட்டார். உடன், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு. **உதயநிதி ஸ்டாலின்** அவர்கள் உள்ளார்.

இந்திய விமானப் படை தினத்தை முன்னிட்டு, சென்னை, மெரினா கடற்கரையில் 06.10.2024 அன்று நடைபெற்ற இந்திய விமானப் படையின் பிரம்மாண்ட வான்வெளி சாகச நிகழ்ச்சியில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்களுக்கு விமானப்படைத் தளபதி மார்ஷல், ஏ.பி.சிங் அவர்கள் நினைவுப் பரிசு வழங்கினார்.

இந்திய விமானப் படையின் வான்வெளி சாகச நிகழ்ச்சிகள்

இந்திய விமானப் படை தினத்தை முன்னிட்டு,
சென்னை, மெரினா கடற்கரையில் 06.10.2024 அன்று நடைபெற்ற
இந்திய விமானப் படையின் பிரம்மாண்ட வான் வெளி சாகச நிகழ்ச்சிகள்...

மாண்புமிகு
தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள்
திறந்து வைத்தார்.

ரூ.3.60 கோடியில்

- **பூலித்தேவன் படைத்தளபதி வெண்ணி காலாடி,**
- **சுதந்திரப் போராட்ட வீராங்கனை குயிலி,**
- **தளி பாளையக்காரர் மலையாண்டி வெங்கிடுபதி எத்தலப்பர் நாயக்கர் ஆகியோர்களுக்குத் திருவுருவச் சிலைகள்.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 09.10.2024 அன்று தலைமைச் செயலகத்தில், செய்தி மக்கள் தொடர்புத் துறை சார்பில் தென்காசி மாவட்டத்தில் பூலித்தேவன் படைத்தளபதி வெண்ணி காலாடி அவர்களுக்கும், சிவகங்கை மாவட்டத்தில் சுதந்திரப் போராட்ட வீராங்கனை குயிலித்தாய் அவர்களுக்கும், தலா ரூ.50 இலட்சம் செலவில் நிறுவப்பட்டுள்ள திருவுருவச் சிலைகள், திருப்பூர் மாவட்டத்தில் தளி பாளையக்காரர் மலையாண்டி வெங்கிடுபதி எத்தலப்பர் நாயக்கர் அவர்களுக்கு ரூ.2.60 கோடிச் செலவில் நிறுவப்பட்டுள்ள திருவுருவச் சிலை, அரங்கம் ஆகியவற்றைக் காணொலிக் காட்சி வாயிலாகத் திறந்து வைத்தார்.

தமிழ்நாட்டின் புகழ்சால் பெருந்தகையாளர்கள், தமிழ்மொழியின் வளர்ச்சிக்கு அரும்பாடுபட்டுத் தமிழ்நாட்டிற்குப் பெருமைத் தேடித்தந்த அறிஞர் பெருமக்கள், சமூகநீதி, விடுதலை உணர்வுகளை ஊட்டிவளர்த்த கவிஞர்கள், இசை மேதைகள், தமிழ்நாட்டின் தியாக வரலாற்றுக்கு உன்னத சாட்சியங்களாக விளங்கும் தியாகிகள், மேதைகள் மற்றும் அறிஞர்களின்நினைவுகளைப்போற்றிப் பெருமைப்படுத்தும் வகையிலும், தமிழ்ச் சமுதாயத்திற்கு அவர்களின் பங்களிப்பை பெருமைப்படுத்தும் வகையிலும், செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் நினைவகங்கள், திருவுருவச் சிலைகள், அரங்கங்கள், நினைவுத் தூண்கள், நினைவுச் சின்னங்கள் ஆகியவை அமைக்கப்பட்டு, சிறந்த முறையில் பராமரிக்கப்பட்டு, பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான அரசு பொறுப்பேற்ற மே 2021 முதல், விடுதலைப் போரில் இன்னுயிர் ஈந்தும், சொத்துச் சுகங்களை இழந்தும், தியாகங்கள் புரிந்த சுதந்திரப் போராட்டத் தியாகிகளைப் போற்றிப் பெருமைப்படுத்திடும் வகையில், காந்தி மண்டபத்தில் வ.உ.சி. அவர்கள் சிறையில் இழுத்த செக்கு வைக்கப்பட்டிருக்கக்கூடிய மண்டபம் பொலிவூட்டப்பட்டு அங்கு அவரது மார்பளவு சிலை, வீரபாண்டிய கட்டபொம்மன் அவர்களுக்குத் திருவுருவச் சிலை, மருது சகோதரர்களுக்குத் திருவுருவச் சிலை, கோயம்புத்தூர் வ.உ.சி. பூங்காவில் வ.உ. சிதம்பரனார் முழு உருவச் சிலை, மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் அவர்களுக்கு திருவுருவச் சிலை, டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி அம்மையார் அவர்களுக்குத் திருவுருவச் சிலை எனப் பல்வேறு தியாக சீலர்களுக்கு சிலைகளை நிறுவி, மணிமண்டபங்கள் அமைத்து அவர்களின் புகழைபோற்றி வருகிறது.

அதன் தொடர்ச்சியாக இன்றையதினம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்ட சுதந்திரப் போராட்டத் தியாகத் திருமக்களான வெண்ணி காலாடி, வீரத்தாய் குயிலி ஆகியோரது திருவுருச்சிலைகள் மற்றும் தளி பாளையக்காரர் மலையாண்டி வெங்கிடுபதி எத்தலப்பர் நாயக்கர் அவர்களின் திருவுருவச் சிலை, அரங்கம் பற்றிய விவரங்கள்:

சுதந்திரப் போராட்ட வீரர் வெண்ணி காலாடி அவர்களின் திருவுருவச் சிலை

"தானம் என்றால் கேள் தருகிறேன். வரியென்றால் ஒருநெல்மணி கூட கட்டமாட்டேன்" என்று முழங்கி நெல்கட்டான் செவல் எனப்பேர் படைத்த பூலித்தேவனின் முக்கிய தளபதியாகத் திகழ்ந்து - வெள்ளையரை வென்றழித்துப் பூலித்தேவன் மடியில் உயிர்நீத்த மாவீரன் வெண்ணி காலாடியின் தியாக வீரத்தைப் போற்றிடும் வகையில், 2023-2024ஆம் ஆண்டிற்கான செய்தி மக்கள் தொடர்புத் துறை மானியக் கோரிக்கையில், சுதந்திரப் போராட்ட வீரர் வெண்ணி காலாடியின் நினைவைப் போற்றும் வகையில் தென்காசி மாவட்டத்தில் திருவுருவச் சிலை அமைக்கப்படும் என்ற அறிவிப்பு வெளியிடப்பட்டது.

அந்த அறிவிப்பிற்கிணங்க, தென்காசி மாவட்டம், நெல்கட்டும் செவல் கிராமம், பச்சேரியில் வெண்ணி காலாடி அவர்களுக்கு ரூ.50 இலட்சம் செலவில் நிறுவப்பட்டுள்ள திருவுருவச் சிலையை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

சுதந்திரப் போராட்ட வீராங்கனை குயிலி அவர்களின் திருவுருவச் சிலை

சிவகங்கை மன்னர் முத்து வடுகநாதரைக் கொன்று வஞ்சகத்தால் சிவகங்கையை கைப்பற்றிய, வெள்ளையரை வென்று சிவகங்கையை மீட்டிடச் சூளுரைத்துத் திண்டுக்கல் விருப்பாட்சி கோபால் நாயக்கரிடம் உதவிகேட்டுத் தஞ்சமடைந்தார் அவருடைய மனைவி வேலுநாச்சியார். அவர் தம்முடைய படைத் தளபதியாக விளங்கிய வீரத்தாய் குயிலி, மருதுபாண்டியர்களுடன், திப்புசுல்தான் உதவியோடு சிவகங்கையை மீட்டிடப் படைதிரட்டி, வழியில் எதிர்ப்பட்ட பகைவர்களை எல்லாம் வென்றழித்து சிவகங்கையில் முகாமிட்டிருந்த வெள்ளையரைத் தாக்கினார். அந்தப்போர் முனையில் ஆங்கிலேயரின் அதிநவீன ஆயுதங்களால் தோல்விகாண நேரும் சூழ்நிலை உருவானபோது வீராங்கனை வேலுநாச்சியாரின் மெய்க்காப்பாளராக விளங்கிய குயிலி மெய் முழுதும் எரியெண்ணெயைத் தடவிக் கொண்டு வெள்ளையரின் ஆயுதக் கிடங்கில் குதித்து அழித்துத் தியாகச் சுடராகி சிவகங்கை வெற்றிக்கு வழிவகுத்தார்.

2023-2024ஆம் ஆண்டிற்கான செய்தி மக்கள் தொடர்புத் துறை மானியக் கோரிக்கையில், சுதந்திரப் போராட்ட வீராங்கனை குயிலி அவர்களுக்குச் சிவகங்கையில் திருவுருவச் சிலைஅமைக்கப்படும்என்றஅறிவிப்பிற்கிணங்க, சிவகங்கை வட்டம், இராகினிப்பட்டியில் அமைந்துள்ள வேலுநாச்சியார் மணிமண்டப வளாகத்தில் குயிலித்தாய்க்கு ரூ.50 இலட்சம் செலவில் நிறுவப்பட்டுள்ள திருவுருவச் சிலையை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

சுதந்திரப் போராட்ட வீரர் தளி பாளையக்காரர் மலையாண்டி வெங்கிடுபதி எத்தலப்பர் நாயக்கர் அவர்களின் திருவுருவச் சிலை, அரங்கம்

அருமை நண்பர் வீரபாண்டியக் கட்டபொம்மனை நயவஞ்சகத்தால் கைது செய்து தூக்கிலிட்ட ஆங்கிலேயருக்குத் தக்க பாடம் புகட்டுவேன் எனச் சூளுரைத்து அதற்குரிய தருணத்தை நோக்கியிருந்தார் தளி பாளையக்காரர் மலையாண்டி வெங்கிடுபதி எத்தலப்பர் நாயக்கர். அவரிடம் வரி கேட்டு வந்த அந்திரை கேதிஷ் என்ற ஆங்கிலேயத் தளபதியைப் பிடித்துத் தூக்கிலிட்டுப் பழிக்குப்பழி வாங்கினார் சுதந்திரப் போராட்ட வீரர் தளி பாளையக்காரர் மலையாண்டி வெங்கிடுபதி எத்தலப்பர் நாயக்கர் அவர்கள்.

அவரது வீரத்தைப் போற்றி 2 கோடியே 60 இலட்சம் ரூபாய் செலவில் திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை நகராட்சி அலுவலக வளாகத்தில் நிறுவப்பட்டுள்ள எத்தலப்பர் நாயக்கர் அவர்களின் திருவுருவச் சிலையையும், தளி பேரூராட்சி, திருமூர்த்தி நகரில் அமைக்கப்பட்டுள்ள எத்தலப்பர் நாயக்கர் நினைவு அரங்கத்தையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

மருது பாண்டியர்கள் நினைவு நாள்

24.10.2024 அன்று தமிழ்நாடு அரசின் சார்பில் சென்னை, கிண்டி, காந்தி மண்டப வளாகத்தில், மருது பாண்டியர்கள் நினைவு நாளை முன்னிட்டு அன்னார்களின் திருவுருவச் சிலைகளுக்கு அருகில் வைக்கப்பட்டுள்ள திருவுருவப் படத்திற்கு மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், அரசு உயர் அலுவலர்கள் ஆகியோர் மலர்தூவி மரியாதை செலுத்தினார்கள்.

வீராக பிறந்தார்... வாழ்ந்தார்... மறைந்தார்...

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 30.10.2024 அன்று இராமநாதபுரம் மாவட்டம், பசும்பொன்னில், தெய்வத் திருமகனார் முத்துராமலிங்கத் தேவர் அவர்களின் 117ஆவது பிறந்த நாள் மற்றும் குருபூஜையை முன்னிட்டு அவரது நினைவிடத்தில், மாலை அணிவித்து மரியாதை செலுத்தி ஆற்றிய உரை.

அனைவருக்கும் வணக்கம்.

இந்திய விடுதலைப் போருக்காக தன்னையே ஒப்படைத்துக்கொண்டு உழைத்த பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் திருமகனார் அவர்களின் நினைவிடத்தில் இன்றையதினம் நான் மரியாதை செலுத்தியிருக்கிறேன்.

இந்த நேரத்திலே பேரறிஞர் அண்ணா அவர்களும், தலைவர் கலைஞர் அவர்களும் தேவர் திருமகனார் அவர்களைப் பற்றி பெருமைப்படுத்தி குறிப்பிட்டுச் சொன்னதை நான் சொல்ல விரும்புகிறேன்.

"அன்றைய அறம் வளர்த்த பாண்டிய மன்னர்களின் ஒருமித்த இளவல் போன்று, கம்பீரமாகக் காட்சி அளித்தார் தேவர் திருமகன்"-என்று பேரறிஞர் அண்ணா அவரைப் பாராட்டியிருக்கிறார்.

"வீரராக பிறந்தார்; வீரராக வாழ்ந்தார்; வீரராக மறைந்தார்; மறைவுக்குப் பிறகும் வீரராக போற்றப்படுகிறார்"-என்று தலைவர் கலைஞர் அவர்கள் அவரைப் பற்றி புகழ்ந்து பேசியிருக்கிறார். அத்தகைய தியாகியை போற்றும் அரசாக, திராவிட முன்னேற்றக் கழக அரசு செயல்பட்டு வருகிறது என்பது அனைவருக்கும் நன்றாகத் தெரியும்.

பசும்பொன்தேவர் அவர்களை போற்றி கழக அரசு செய்திருக்கக்கூடிய பல்வேறு செயல்பாடுகளில் சிலவற்றை நான் உங்களிடத்தில் குறிப்பிட்டு காட்ட விரும்புகிறேன்.

மதுரை மாநகரில் மாபெரும் வெண்கலச் சிலை, பசும்பொன் மண்ணில் நினைவில்லம், மேல்நீலிதநல்லூர் - கமுதி -

உசிலம்பட்டி ஆகிய இடங்களில் மூன்று அரசு கலைக்கல்லூரிகள்,மதுரை ஆண்டாள்புரத்தில், “முத்துராமலிங்கத் தேவர் பாலம்”-என்று பெயரிட்டோம், காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகத்தில் கல்வி அறக்கட்டளை, மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர் மரபினருக்கு கல்வி வேலைவாய்ப்புகளில் 20 விழுக்காடு ஒதுக்கீடு, கடந்த 2007-ஆம் ஆண்டு நூற்றாண்டு விழாவை மிக எழுச்சியோடு நாம் கொண்டாடியிருக்கிறோம், அப்போது, திருமகனார் வாழ்ந்த இல்லம் புதுப்பிக்கப்பட்டிருக்கிறது. விழாவை அடையாளம் காட்டக்கூடிய வகையில் வளைவு அமைக்கப்பட்டிருக்கிறது. அணையா விளக்கும் நாம் அமைத்திருக்கிறோம். நூலகக் கட்டடம் - பால்குடங்கள் வைப்பதற்கு மண்டபம் - முளைப்பாரி மண்டபம் என்று பசும்பொன்தேவர் திருமகனாருக்குப் புகழ் சேர்க்கும் வகையில் பல்வேறு திட்டங்களை நாம் நிறைவேற்றியிருக்கிறோம்.

இப்போது பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களின் 117-ஆவது பிறந்தநாளை முன்னிட்டு குருபூஜை நடத்தியிருக்கிறோம். பசும்பொன்னில் இருக்கும் அவரது நினைவிடத்தில் தமிழ்நாடு அரசு அனைத்து ஏற்பாடுகளையும் சிறப்பான முறையில் செய்திருக்கிறது.

நேற்று முன்தினம் கூட, பசும்பொன் திருமகனாரின் பிறந்தாள் விழாவின்போது ஏற்படுகின்ற கூட்ட நெரிசலைத் தவிர்ப்பதற்காகவும், மழை – வெயிலில் இருந்து பொதுமக்களைப் பாதுகாக்கவும் 1 கோடியே 55 இலட்சம் ரூபாய் செலவில் புதியதாக அமைக்கப்பட்ட தெய்வீகத் திருமகனார் உ.முத்துராமலிங்கத் தேவர் அரங்கத்தை திறந்து வைத்திருக்கிறோம்.

இதுபோன்று பசும்பொன் முத்துராமலிங்கத் தேவரைப் போற்றும் செயல்களையும் – திட்டங்களையும் தொடர்ந்து செய்வோம்!

எனவே அவரது புகழ் வாழ்க! வாழ்க! என்று இந்த நேரத்தில் குறிப்பிட்டு கூறிக்கொள்கிறேன்.

நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்களின் பிறந்த நாள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 01.10.2024 அன்று நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்களின் 97ஆவது பிறந்தநாளை முன்னிட்டு சென்னை, அடையாறு, சிவாஜி கணேசன் மணிமண்டபத்தில் உள்ள சிவாஜி கணேசன் அவர்களின் திருவுருவச் சிலைக்கு அருகில் வைக்கப்பட்டுள்ள திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார்.

சேப்பாக்கம், திருவல்லிக்கேணி

ஐஸ் அவுஸ், டாக்டர் பெசன்ட் சாலை

வடகிழக்குப் பருவமழை மீட்பு நடவடிக்கைகள்

மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேரில் ஆய்வு

திருவள்ளூர் மாவட்டம், திருநின்றவூர், இராமதாசபுரம் ஈஷா ஏரி

பெருநகர சென்னை மாநகராட்சி, கட்டுப்பாட்டு மையம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவின்படி, 15.10.2024 அன்று மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் எழிலகத்தில் அமைக்கப்பட்டுள்ள மாநில அவசரகால செயல்பாட்டு மையத்தில், வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னெச்சரிக்கை நடவடிக்கை பணிகள் குறித்து ஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது கட்டுப்பாட்டு அறையில் அனைத்துத் துறை பணியாளர்கள் கண்காணிப்பு மற்றும் சீரமைப்புப் பணிகள் தொடர்பாக சம்மந்தப்பட்ட மாவட்ட நிர்வாகங்களுடன் தொடர்பு கெண்டு பணியாற்றி வருவதையும், எல்.ஈ.டி திரை மூலம் மழை பெய்யும் பகுதிகள் குறித்து பார்வையிட்டும் ஆய்வு செய்து செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது,

வடகிழக்குப் பருவமழை சென்னை மாநகராட்சி பகுதிகளில் 14.10.2024 காலை 6 மணி முதல் 15.10.2024 காலை 6 மணி வரை முடிவடைந்த 24 மணி நேரத்தில் 4.6 செ.மீ மழை பெய்திருக்கிறது. இதில் அதிகபட்சமாக சோழிங்கநல்லூர் பகுதியில், 6.1 செ.மீட்டரும், தேனாம்பேட்டையில் 6.1 செ.மீட்டர் மழையும் பெய்துள்ளது. குறைந்தபட்சமாக தண்டையார்பேட்டையில் 2.8 செ.மீட்டர் மழையும், புழல் பகுதியில் 3.0 செ.மீட்டரும், மாதவரத்தில் 4.0 செ.மீட்டர் மழையும் பெய்துள்ளது.

மழையின் காரணமாக சென்னை பெருநகர மாநகராட்சி பகுதியில் 8 மரங்கள் விழுந்துள்ளன. ஒரு மரம் உடனடியாக அகற்றப்பட்டுள்ளது. மீதமுள்ள 7 மரங்களை அகற்றும் பணிகள் இன்னும் 1 மணி நேரத்தில் முடிக்கப்படும். சென்னை பெருநகர மாநகராட்சி சார்பில் 300 இடங்களில் நிவாரண மையங்கள் 50 முதல் 1,000 நபர்கள் தங்கும் வகையிலான நிவாரண மையங்கள் தயார் நிலையில்

உள்ளன. இந்த நிவாரண மையங்களில் தண்ணீர், பால்பாக்கெட், பிஸ்கெட், பிரட், உணவு ஆகியவை தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன. 35 பொது சமயலறைகள் தயார் நிலையில் உள்ளன. சென்னையில் உள்ள 22 சுரங்கப்பாதைகளில் 20 சுரங்க பாதைகளில் எந்தவித இடையூறுமின்றி போக்குவரத்து நடைபெற்று வருகின்றது. கணேசபுரம், பெரம்பூர் ஆகிய இரண்டு சுரங்க பாதைகள் மட்டும் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளன.

அந்த சுரங்கப்பாதைகளிலும் மோட்டார் பம்ப் மூலமாக தண்ணீர் அகற்றப்பட்டு வருகின்றது. மழை ஒரு மணிநேரம் விட்டால் அந்த சுரங்கபாதைகளும் சரி செய்யப்பட்டு விடும். நீர்தேங்கியுள்ள 300க்கும் மேற்பட்ட இடங்களில் நீர் அகற்றும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

கடந்த 24 மணிநேரத்தில் எங்கும் மின்தடை ஏற்படவில்லை. கடந்த 12 மணிநேரத்தில் சென்னை மாநகராட்சிக் கட்டுப்பாட்டு அறைக்கு 1,500 அழைப்புகள் வந்துள்ளன. இதில் 600 அழைப்புகளுக்குத் தீர்வு காணப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரை சிவகங்கை மாவட்டத்தில் அதிகபட்சமாக 13.5 செ.மீட்டர் மழை பதிவாகியுள்ளது. விருதுநகரில் 7 செ.மீட்டர் மழையும் பதிவாகியுள்ளது.

சென்னையைச் சுற்றியுள்ள மாவட்டங்களில் மாநில பேரிடர் மீட்புக்குழு, தேசிய பேரிடர் மீட்புக்குழுவினர் 26 இடங்களில் பணிபுரிய தயார் நிலையில் உள்ளனர். இதுவரை 24 குழுக்கள் சென்னை மற்றும் பிற மாவட்டங்களுக்குச் சென்றடைந்துள்ளனர். மீட்புப்பணியில் ஈடுபட சென்னையில் 89 படகுகளும், பிறமாவட்டங்களில் 130 படகுகளும் தயார் நிலையில் உள்ளன.

சென்னையில் 300 நிவாரண மையங்களும், சென்னையைச் சுற்றியுள்ள மாவட்டங்களில் 631 நிவாரண மையங்கள் என மொத்தம் 931 மையங்கள் தயார் நிலையில் உள்ளன.

சென்னையில் 15 ஐ.ஏ.எஸ் அதிகாரிகளும், அனைத்து மாவட்டங்களில் மூத்த ஐ.ஏ.எஸ் அதிகாரிகள் வெள்ளத்தைக் கண்காணிக்க கண்காணிப்பு அலுவலர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

இன்று மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறையின் சார்பில் தமிழகம் முழுவதும் 1,000 இடங்களில் மழைக்கால மருத்துவமுகாம் அமைக்கப்பட்டுள்ளன. சென்னையில் மட்டும் 100 இடங்களில் சிறப்பு மருத்துவ முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன. சென்னையில் 13,000 தன்னார்வலர்கள் பணியில் ஈடுபட பதிவு செய்துள்ளார்கள். தமிழ்நாடு முழுவதும் 65,000 தன்னார்வலர்கள் தயாராக உள்ளனர். தேவைப்பட்டால்பிறமாவட்டதன்னார்வலர்கள் சென்னைக்கு அழைத்துவரப்பட்டுப் பணியில் ஈடுபடுத்தப்படுவார்கள் என்று மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவின்படி, மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 16.10.2024 அன்று சேப்பாக்கம் - திருவல்லிக்கேணி சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில், வடகிழக்குப் பருவமழை மீட்பு பணிகளில் இடைவிடாதுப் பணியாற்றி வரும் 600க்கும் மேற்பட்ட துப்புரவுப் பணியாளர்களுக்கு சிற்றுண்டி, பிரட், போர்வை உள்ளிட்ட உதவி பொருட்களை வழங்கினார்கள்.

தொடர்ந்து மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் சேப்பாக்கம் – திருவல்லிக்கேணி சட்டமன்றத் தொகுதி மண்டலம் 9 க்குட்பட்ட 116 ஆவது வார்டு வெங்கட்ரங்கம் பிள்ளை தெருவில் செயல்பட்டு வரும் மாநகராட்சி சமுதாய நலக் கூடத்தில் பொதுமக்களுக்கு உணவு வழங்குவதற்காக அமைக்கப்பட்டுள்ள சமையல் கூடத்தில் உணவு சமைக்கும் பணியில் பணியாளர்கள் ஈடுபட்டுள்ளதை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

மேலும் சமுதாயக் கூட வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள மழைக்கால சிறப்பு மருத்துவ முகாமில் உள்ள மருந்துகள் குறித்து மருத்துவரிடம் கேட்டறிந்ததுடன், முகாமிற்கு வந்திருந்த பொதுமக்களிடம் மருத்துவத் தேவைகள் குறித்தும் கேட்டறிந்தார். சிறப்பு மருத்துவ முகாமில் 1 மருத்துவர், செவிலியர், மருந்தாளுநர் உள்பட 6 பணியாளர்கள் பணியில் ஈடுபட்டுள்ளதையும் பார்வையிட்டார். ■

“தமிழ்நாடு மலையேற்றத் திட்டம்”

மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு. **உதயநிதி ஸ்டாலின்** அவர்கள் தொடங்கி வைத்தார்.

மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 24.10.2024 அன்று தலைமைச் செயலகத்தில் தமிழ்நாட்டில் உள்ள 40 அழகிய, மலையேற்ற வழித்தடங்களை உள்ளடக்கிய ‘தமிழ்நாடு மலையேற்றத் திட்டத்தினைத் தொடங்கி வைத்தார். மேலும் இத்திட்டத்தின் இலச்சினையினை வெளியிட்டு, இணையவழி முன்பதிவிற்காக www.trektamilnadu.com என்ற பிரத்யேக வலைதளத்தையும் தொடங்கி வைத்தார்.

இத்திட்டம் தமிழ்நாட்டின் வனம் மற்றும் வன உயிரினப் பகுதிகளில் நிலையான முறையில் மலையேற்றம் மேற்கொள்வதை ஒரு நோக்கமாகக் கொண்டு செயல்பட்டு வரும் தமிழ்நாடு வன அனுபவக் கழகம் (TNWEC) மற்றும் தமிழ்நாடு வனத்துறையின் (TNFD) கூட்டு முன்னெடுப்பில் உருவாக்கப்பட்டுள்ளது.

இயற்கைப் பாதுகாப்புக் குறித்த விழிப்புணர்வை பொதுமக்களிடையே ஏற்படுத்தவும் வனப்பகுதியை ஒட்டியுள்ள உள்ளூர் மக்களுக்கு நிலையான வாழ்வாதாரத்தை ஏற்படுத்தவும், வனம், வன உயிரினப் பாதுகாப்பிற்கு வலுசேர்க்கும் விதமாக இந்த ‘தமிழ்நாடு மலையேற்றத் திட்டம்’ வடிவமைக்கப்பட்டுள்ளது.

வனப்பகுதி, அதனைச் சுற்றியுள்ள உள்ளூர் மக்களை இத்திட்டத்தில் அதிக அளவில் ஈடுபடுத்தும் இம்முயற்சி மாநிலத்தில் சூழல் சுற்றுலாவை வலுப்படுத்துவதற்கான ஒரு முன்னெடுப்பாகும். இவ்வாறு வாகனப் பயன்பாடு இல்லாத குறைந்த கார்பன் தடம், நிலைத்தன்மை கொண்ட சுற்றுலாவை ஊக்குவிப்பது, சூழல் சுற்றுலாவை மேம்படுத்துதல், பசுமைச் சூழல் பாதுகாப்பதில் தமிழ்நாடு அரசு கொண்டுள்ள உறுதித்தன்மையைக் காட்டுகிறது.

இயற்கை ஆர்வலர்களை மகிழ்விக்கும் விதமாக, இந்திய நாட்டின்

முதன்மை மாநிலமாகத் தமிழ்நாடு அரசு 40 தேர்ந்தெடுக்கப்பட்ட மலையேற்ற பாதைகளைப் பொது மக்களுக்காக திறந்து வைத்துள்ளது. சுற்றுலாவில் நாட்டின் முன்னோடி மாநிலமாகத் தமிழ்நாடு திகழ்கிறது. இயற்கை ஆர்வலர்களால் பெரிதும் போற்றப்படும் வகையில் தமிழ்நாட்டில் மொத்தம் ஐந்து புலிகள் காப்பகங்கள், ஐந்து தேசியப் பூங்காக்கள், பதினெட்டு வனவிலங்கு சரணாலயங்கள், பதினேழு பறவை சரணாலயங்கள், மூன்று பாதுகாப்பு காப்பகங்களை கொண்டுள்ளது. நீலகிரி, கொடைக்கானல், கன்னியாகுமரி போன்ற பிரபலமான சுற்றுலாத் தலங்களை உள்ளடக்கித் தமிழ்நாட்டில் 14 மாவட்டங்களில் உள்ள மலையேற்றப்பாதைகள், தமிழ்நாடு வனத்துறையால் தமிழ்நாடு வன, உயிரின (மலையேற்ற ஒழுங்குமுறை) விதிகள் 2018-இன் கீழ் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

மலையேற்ற வழிகாட்டிகளாகக் காடுகள் குறித்த பாரம்பரிய அறிவைக் கொண்ட, 50-க்கும் மேற்பட்ட பழங்குடியின, வனங்களை ஒட்டியுள்ள கிராமங்களிலிருந்து 300-க்கும் மேற்பட்ட இளைஞர்கள் அடையாளம் காணப்பட்டு, மலையேற்ற வழிகாட்டிகளாகத் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். இவர்களுக்கு வன ஒழுக்கம், திறன் மேம்பாடு, முதலுதவி, விருந்தோம்பல், சுகாதாரம், பல்லுயிர் பாதுகாப்பு போன்றவற்றில் போதுமான தொழில்முறைப் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. மலையேற்றத்திற்கு வரும் ஆர்வலர்களின் பாதுகாப்பிற்கு முக்கியத்துவம் அளித்து தேர்ந்தெடுக்கப்பட்ட மலையேற்ற வழிகாட்டிகளுக்கு அவசர நிலைகளைக் கையாளுவதற்கான பாதுகாப்பு நெறிமுறைப் பயிற்சிகளும் வழங்கப்பட்டுள்ளன. தேர்ந்தெடுக்கப்பட்ட வழிகாட்டிகளுக்குச் சீருடைகள், மலையேற்றக் காலணிகள், முதுகுப்பை, தொப்பி, அடிப்படை முதலுதவிப் பெட்டி, தண்ணீர்க் குடுவை, வெந்நீர்க் குடுவை, மலையேற்றக் கோல், தகவல் தொடர்பு சாதனங்கள், விசில், திசைக்காட்டி ஆகியவை அடங்கிய மலையேற்ற உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

மேலும், இத்திட்டத்தின்கீழ் மலையேற்றம் மேற்கொள்ளும் அனைத்துப் பங்கேற்பாளர்கள்,

வழிகாட்டிகளுக்கும் காப்பீடு வழங்கப்படுகிறது. பழங்குடியின, வனங்களை ஒட்டியுள்ள மக்கள் நிலையான வருமானம் ஈட்டவும் பொருளாதாரத்தை உயர்த்துவதற்கும் இந்த முன்னெடுப்பு உதவும்.

பொது மக்களுக்கு முன்பதிவு, வெளிப்படைத்தன்மையை உறுதிபடுத்தும் வகையில், தொடங்கப்பட்டுள்ள (www.trektamilnadu.com) பிரத்யேக முன்பதிவு வலைதளத்தின் மூலம் மலையேற்றம் மேற்கொள்பவர்கள் தங்கள் முன்பதிவினை எளிதாகச் செய்ய உதவும் வகையில் புகைப்படம், காணொளிக்காட்சிகள், 3D அனிமேஷன். மலையேற்ற பாதைகள் தொடர்பான அத்தியாவசிய விவரங்கள், விதிமுறைகள் குறிப்பிடப்பட்டுள்ளன. மேலும், இவ்வலைதளத்தின் மூலம் மலையேற்றம் மேற்கொள்பவர்கள் 100% இணையவழி பணப்பரிவர்த்தனை மேற்கொண்டு மலையேற்றத்திற்கான நுழைவுச் சீட்டினை பதிவிறக்கம் செய்து கொள்ள இயலும்.

18 வயதிற்கு மேற்பட்ட அனைவரும் மலையேற்றத்திற்கான முன்பதிவு மேற்கொள்ள அனுமதிக்கப்படுவர். 18 வயதிற்குட்பட்டவர்கள் பெற்றோர் / பாதுகாவலரின் ஒப்புதல் கடிதத்துடன் மலையேற்றம் மேற்கொள்ளலாம். 10 வயதிற்குட்பட்ட குழந்தைகள் (எளிதான மலையேற்றப் பாதைகளுக்கு மட்டுமே அனுமதிக்கப்படுவர்) பெற்றோர் அல்லது பாதுகாவலரின் துணையோடு மட்டுமே அனுமதிக்கப்படுவர்.

40 மலையேற்றப் பாதைகள்

நீலகிரி மாவட்டம்

- கய்ர்ன் ஹில் (எளிது),
- லாங்வுட் ஷோலா (எளிது),
- கரிகையூர் முதல் போரிவரை ராக்பெயிண்டிங் (மிதமானது),
- கரிகையூர் முதல் ரங்கசாமி சிகரம் (கடினம்),
- பார்சன்ஸ் வேலி முதல் முக்குர்த்தி குடில் (கடினம்),
- அவலாஞ்சி – கோலாரிபெட்டா (கடினம்),
- அவலாஞ்சி (காலிஃபிளவர் ஷோலா) - தேவார்பெட்டா (கடினம்),
- அவலாஞ்சி (காலிஃபிளவர் ஷோலா)- கோலாரிபெட்டா (மிதமானது),
- ஜீன் பூல் (எளிது), நீடில் ராக் (கடினம்).

கோயம்புத்தூர் மாவட்டம்

- மாணம்போலி (எளிது),
- டாப் ஸ்லிப் – பண்டாரவரை (கடினம்),
- ஆலியார் கனால் பேங்க் (மிதமானது),
- சாடிவயல் – சிறுவாணி (மிதமானது),
- செம்புக்கரை – பெருமாள்முடி (கடினம்),
- வெள்ளியங்கிரி மலை (கடினம்),
- பரலியார் (எளிது).

திருப்பூர் மாவட்டம்

- சின்னார் சோதனைச்சாவடி கோட்டாறு (எளிது),
- காலிகேசம் பாலமோர் (மிதமானது).

கன்னியாகுமரி மாவட்டம்

- இஞ்ஜிக்கடவு (மிதமானது).

திருநெல்வேலி மாவட்டம்

- காரையார் மூலக்கசம் (மிதமானது),
- கல்லாறு கொரக்கநாதர் கோவில் (கடினம்).

தென்காசி மாவட்டம்

- குற்றாலம் செண்பகதேவி நீர் அருவி (எளிது),
- தீர்த்தப்பாறை (எளிது).

தேனி மாவட்டம்

- சின்ன சுருளி – தென்பழனி (மிதமானது),
- காரப்பாறை (எளிது),
- குரங்கனி சாம்பலாறு (மிதமானது).

விருதுநகர் மாவட்டம்

- செண்பகத்தோப்பு – புதுப்பட்டி (மிதமானது).

மதுரை மாவட்டம்

- தாடகை மலையேற்றப்பாதை - குட்லாடம்பட்டி நீர் அருவி (கடினம்).

திண்டுக்கல் மாவட்டம்

- வட்டகானல் – வெள்ளகவி (கடினம்),
- சோலார் ஆப்சர்வேட்டரி – குண்டாறு (0-பாயிண்ட்) (மிதமானது),
- 0-பாயிண்ட் - கருங்களம் நீர் அருவி (எளிது).

கிருஷ்ணகிரி மாவட்டம்

- குத்திராயன் சிகரம் (கடினம்),
- ஐயூர் - சாமி ஏரி (எளிது).

சேலம் மாவட்டம்

- குரும்பப்பட்டி உயிரியல் பூங்கா – குண்டூர் (மிதமானது),
- கொண்டப்ப நாயக்கன்பட்டி குண்டூர் (கடினம்),
- நகலூர் – சன்னியாசிமலை (எளிது).

திருப்பத்தூர் மாவட்டம்

- ஏலகிரி சுவாமிமலை (எளிது),
- ஜலகம்பாறை (மிதமானது).

திருவள்ளூர் மாவட்டம்

- குடியம் குகைகள் (எளிது).

மேனாள் குடியரசுத் தலைவர் டாக்டர் ஏ.பி.ஜே. அப்துல் கலாம் அவர்கள் பிறந்தநாள்

படமும் / செய்தியும்

மேனாள் குடியரசுத் தலைவர் டாக்டர் ஏ.பி.ஜே. அப்துல் கலாம் அவர்களின் 94ஆவது பிறந்தநாளை முன்னிட்டு, தமிழ்நாடு அரசின் சார்பில், 15.10.2024 அன்று சென்னை, கிண்டி, அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் அமைந்துள்ள அன்னாரது திருவுருவச் சிலைக்கு அருகில் அலங்கரித்து வைக்கப்பட்டுள்ள அவரது திருவுருவப் படத்திற்கு மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் திரு. மு.பெ. சாமிநாதன், மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு. மா.சுப்பிரமணியன் மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன், நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி தமிழச்சி தங்கபாண்டியன், துணை மேயர் திரு. மு.மகேஷ் குமார், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் திரு.வே.ராஜாராமன், இ.ஆ.ப, செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு. இரா.வைத்திநாதன், இ.ஆ.ப. உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் மலர்தூவி மரியாதை செலுத்தினார்கள்.

நவம்பர் 14: பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களின் பிறந்த நாள்

“மனிதாபிமானம்”

“ஒரு முறை தமிழ்நாட்டில் பண்டித நேரு அவர்கள் சுற்றுப் பயணம் செய்து கொண்டிருந்தார். கிராமப் புறத்தில் ஒரு சாலை ஓரமாக நின்று ஒரு பலூன் வியாபாரி பார்த்துக் கொண்டிருந்தார். அவரிடம் பண்டித நேரு அவர்கள் சென்று பலூன் விலை என்ன என்று கேட்க, அந்த வயதான வியாபாரி ஒரு பலூன் காலணா என்றான். தனது சட்டைப்பையில் கையை வைத்துத் தேட, அதில் பணம் எதுவும் இல்லையெனக் கண்ட பண்டித நேரு அவர்களின் முகத்தைப் பார்த்து ஒரு தொண்டர் இருபது ரூபாய் நோட்டைக் கொடுத்தார். மகிழ்ச்சியோடு அதற்கு அந்த வியாபாரியிடம் இருந்த எல்லா பலூன்களையும் வாங்கி, குழந்தைகளுக்குக் கொடுத்து மகிழ்ந்தார். அந்த வயதான வியாபாரிக்கும் ஒரே மகிழ்ச்சி.

1936 ஆம் ஆண்டு தமிழகச் சுற்றுப்பயணத்தின் பொழுது, கோவை மாவட்டத்தில் பல ஊர்களுக்குச் சென்று திரும்பினார். பண்டித நேரு அவர்களின் சிவந்த கரங்களில் நகக்கீறல்களும், காயங்களும், ரத்தக் கசிவுகளும் காணப்பட்டன. சுற்றுப் பயணத்தை ஏற்பாடு செய்தவர்கள் வேதனைப்படும் பொழுது, பண்டித நேரு அவர்கள் உரிமையுடன் சொன்ன பதில்: மக்கள் என்மீது வைத்துள்ள அன்பின் அடையாளமல்லவா இவை, அத்தனை பேர்கள் என்னை அன்புடன் தொட்டுத் தடவிப் பார்த்திருக்கின்றனர் என்றல்லவா பொருள். வேதைனைப்பட வேண்டிய அவசியம் இல்லை, என்பதே.

உழைப்பவர்களுக்குத்தான் முதன்மை இடமும், பெருமையும் கொடுக்க வேண்டும் என்று மனிதாபிமான அடிப்படையில் நினைப்பவர். பண்டித நேரு அவர்கள் ஒரு முறை முசாபர்பூர் அணைக்கட்டைப் பார்வையிடச் சென்றார். அவரைச் சுற்றி அனைவரும் இருந்து புகைப்படம் எடுத்தனர். அவர்களைத் தடுத்து நிறுத்தி, அங்கே கடினமாக உழைத்து வேலை செய்து கொண்டிருக்கிறார்களே அவர்களைப் புகைப்படம் எடுங்கள். அவர்களது உழைப்பினால்தான் இந்த அணை எழும்பி வருகிறது? என்று கூறினாராம்.

அவ்வாறே, பக்ரா-நங்கல் அணைக்கட்டு கால்வாய்த் திறப்பு விழாவிலும், அதில் பணியாற்றிய ஒரு தொழிலாளியைக் கொண்டே திறந்துவைத்தார்.

இதைப் போன்ற பல நிகழ்ச்சியினால் பண்டித நேரு அவர்களின் மனிதாபிமானம் தெள்ளத்தெளிய விளங்குகிறதல்லவா?”

நன்றி: ***நேரு எனும் மாமேதை*** *என்னும் நூலிலிருந்து....*

பெண்களின் பாதுகாப்பிற்கான
"இளஞ்சிவப்பு ஆட்டோக்கள் திட்டம்"

தமிழ் நாடு அரசு, பெண்கள் நலன், பாதுகாப்பு, முன்னேற்றத்திற்காகப் பல்வேறு திட்டங்களைத் திறம்படச் செயல்படுத்தி வருகின்றது. அவற்றோடு, பெண்களின் நலனை உறுதி செய்யும் விதமாக விடியல் பயணத்திட்டம், கலைஞர் மகளிர் உரிமைத் தொகை, தோழி விடுதிகள், கைம்பெண்கள், ஆதரவற்ற பெண்களுக்கான ஓய்வூதியத்தை உயர்த்தி வழங்கியது, புதுமைப்பெண் திட்டம் போன்ற பல்வேறு புதிய மகளிர் நலத் திட்டங்களை செயல்படுத்தி, பெண்களின் வாழ்வாதாரம், முன்னேற்றத்திற்கு வழிவகை செய்துள்ளது.

பெண்களின் பாதுகாப்பில் தமிழ் நாடு சிறந்து விளங்குகின்றது, அதனை மேலும் வலுப்படுத்த வேண்டும் என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் பேரில், ஒரு புதிய முன்னெடுப்பாக 'இளஞ்சிவப்பு ஆட்டோக்களை' தமிழ்நாடு அரசு அறிமுகப்படுத்த உள்ளது. இத்திட்டத்தின் மூலம் பெண்கள், குழந்தைகள் பாதுகாப்பாகப் பயணிக்க, பெண் ஓட்டுநர்கள் மூலம் 250 ஆட்டோக்கள் சென்னை மாநகரில் இயக்கப்பட உள்ளன.

அவசர காலங்களில் புகார் பெறப்பட்டவுடன், காவல் துறையின் மூலம் விரைவான நடவடிக்கை எடுப்பதை உறுதி செய்யும் நோக்கத்தோடு ஒவ்வொரு இளஞ்சிவப்பு ஆட்டோவிலும், பெண்களின் பாதுகாப்பிற்காகக் காவல்துறை உதவி எண்களுடன் இணைக்கப்பட்ட GPS பொருத்தப்பட்டிருக்கும்.

பெண்கள் சுய தொழிலில் சிறந்து விளங்க ஊக்கப்படுத்தவும், ஓட்டுநர் உரிமம் பெற்ற பெண்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தவும் இத்திட்டம் வழிவகை செய்யும்.

இத்திட்டத்தின்கீழ் பயன்பெறத் தேவையான தகுதிகள்:

i. பெண்கள் மட்டும் விண்ணப்பிக்கலாம்.

ii. கைம்பெண்கள், ஆதரவற்ற பெண்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

iii. 25 வயது முதல் 45 வயதிற்குள் இருக்க வேண்டும்.

iv. 10ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

v. ஓட்டுநர் உரிமம் வைத்திருக்க வேண்டும்.

vi. சென்னையில் குடியிருக்க வேண்டும்

இதற்கென, சென்னையில் உள்ள 250 பெண்களுக்குத் தலா ஒரு இலட்சம் ரூபாய் தமிழ் நாடு அரசு CNG/Hybrid ஆட்டோ வாங்க மானியமாக வழங்கும். ஆட்டோ வாங்க தேவைப்படும் மீதி பணத்திற்காக வங்கிகளுடன் இணைக்கப்படும்.

சென்னையில் உள்ள தகுதியான பெண் ஓட்டுநர்கள், இத்திட்டத்தின் கீழ் பயனடைய பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தைச் சென்னை மாவட்ட சமூக நல அலுவலருக்கு, 8வது தளம், சிங்காரவேலர் மாளிகை, சென்னை - 600 001 என்ற முகவரிக்கு 23.11.2024ஆம் தேதிக்குள் அனுப்ப வேண்டும்.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்களுக்கான பொருளாதார முன்னேற்றத் திட்டங்கள்

சென்றமாத இதழின் தொடர்ச்சி......

10. இளைஞர்களுக்கான சிறப்பு சுய வேலைவாய்ப்புத் திட்டம் (SEPY–C)

ஆதிதிராவிட மற்றும் பழங்குடியினர் இனத்தைச் சேர்ந்த இளைஞர்கள் பொருளாதார ரீதியாக முன்னேற வேண்டும் என்ற நோக்கத்தில் மருத்துவம் சார்ந்த தொழில்களில் தொடர் வருவாய் ஈட்டக்கூடிய அனைத்து தொழில்களுக்கும் இத்திட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

மருத்துவ மையம், மருந்தியல், கண் கண்ணாடியகம், முடநீக்கு மையம், இரத்த பரிசோதனை நிலையம் அமைத்தல், மேம்படுத்துதல், இதுபோன்ற பிற இனங்கள் (Clinic, Pharmacy, Opticals, Physiotherapy, Formation and Development of Medical Laboratory and related items).

தகுதி

- ✦ மருத்துவ மையம் (Clinic) அமைப்பதற்கு, மேம்படுத்துவதற்கு குறைந்தபட்சம் எம்.பி.பி.எஸ் (M.B.B.S), பி.டி.எஸ் (B.D.S.) சித்தா (B.S.M.S.), ஆயுர்வேத மருத்துவம் (B.A.M.S.), இயற்கை வைத்தியம் (B.N.Y.S.) ஆகியவற்றில் ஏதாவது ஒரு பிரிவில் பட்டம் பெற்றிருக்க வேண்டும்.
- ✦ மருந்தகம் (Pharmacy) அமைப்பதற்கு D.Pharm / B.Pharm பயின்றிருத்தல் வேண்டும்.
- ✦ கண்கண்ணாடியகம் (Opticals), (Diploma in Ophthalmic Assistant) அமைப்பதற்கு சம்மந்தப்பட்ட படிப்பு முடித்த சான்றிதழ் வைத்திருக்க வேண்டும்.
- ✦ முடநீக்கு மையம் (Physiotheraphy Centre) அமைப்பதற்கு உரிய முடநீக்கவியல் பட்டப்படிப்பு (Physiotheraphy) படித்து உரிய கவுன்சிலில் (Council) பதிவு செய்திருக்க வேண்டும்.
- ✦ இரத்தப் பரிசோதனை நிலையம் (Diploma in Medical Laboratory Technology / Certificate Course in Medical Laboratory Technology) அமைப்பதற்கு சம்மந்தப்பட்ட தகுதிச் சான்றிதழ் வைத்திருக்க வேண்டும்.
- ✦ இந்திய மருத்துவக் கழகம் (Medical Council)/ தொடர்புடைய நிறுவனத்தில் (Competent Authority) பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும்.
- ✦ விண்ணப்பதாரர் ஆதிதிராவிட, பழங்குடியினர் இனத்தைச் சேர்ந்தவராக இருக்க வேண்டும்.
- ✦ 18-45 வயதிற்குள் இருக்க வேண்டும்.
- ✦ குடும்ப ஆண்டு வருமான உச்சவரம்பு ரூ.3 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும்.
- ✦ விண்ணப்பதாரர், அவர் குடும்பத்தினர் தாட்கோ திட்டத்தின் கீழ் இதுவரை மானியம் எதுவும் பெற்றிருக்கக் கூடாது.

நிபந்தனைகள்

- ✦ ஆதிதிராவிட, பழங்குடியினர் இனத்தைச் சேர்ந்தவராக இருத்தல் வேண்டும்.

- துவங்க உத்தேசித்துள்ள தொழிலை விண்ணப்பதாரரே தெரிவு செய்துகொள்ள வேண்டும்.
- இத்திட்டத்தின்கீழ் உருவாக்கப்படும் சொத்து விண்ணப்பதாரரின் பெயரில் மட்டுமே பதிவு செய்யப்பட வேண்டும்.
- விண்ணப்பதாரர் தொழில் புரிவதற்காக கடன், மானியம் பெறப்பட்ட மாவட்டத்தில் தொழில் புரிய வேண்டும்.

மானிய விபரம்

- ஆதிதிராவிடர் தொழில் முனைவோர்களுக்குத் திட்டத் தொகையில் 30 விழுக்காடு அல்லது அதிகபட்சமாக ரூ.2.25 இலட்சம் மானியம் விடுவிக்கப்படும்.
- ஆதிதிராவிட சுய உதவிக் குழுக்களுக்கு பொருளாதார நிதியுதவி திட்டத்தின் கீழ்த் திட்டத் தொகையில் 50 விழுக்காடு அல்லது அதிகபட்சமாக ரூ.2.50 இலட்சம் மானியமாக விடுவிக்கப்படும்.
- பழங்குடியினர்களில் தனி நபர்களுக்கு இலகு ரக வாகனங்களுக்கு அதிகபட்சம் மானியமாக 50 விழுக்காடு அதிகபட்சமாக ரூ. 4 இலட்சமும், கனரக வாகனங்களுக்கு 50 விழுக்காடு அதிகபட்சமாக ரூ.5.50 இலட்சமும் இதர தொழில்களுக்கு 50 விழுக்காடு அதிகபட்சமாக ரூ.3.75 இலட்சமும் மானியமாக வழங்கப்படும். மேலும் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு 50 விழுக்காடு அதிகபட்சமாக ரூ.3.75 இலட்சமும் மானியமாக வழங்கப்படும்.

11. சுய உதவிக் குழுக்களுக்கான பொருளாதாரக் கடனுதவித் திட்டம்

ஆதிதிராவிட, பழங்குடியினர் இனத்தைச் சேர்ந்த உறுப்பினர்களைக் கொண்ட மகளிர் சுய உதவிக் குழுக்கள் பொருளாதார ரீதியாக முன்னேற வேண்டும் என்ற நோக்கத்தில் தொடர் வருவாய் ஈட்டக்கூடிய அனைத்துத் தொழில்களுக்கும் இத்திட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

தகுதி

- ஆதிதிராவிட மற்றும் பழங்குடியினர் இனத்தைச் சார்ந்த மகளிர் குழுவாக இருத்தல் வேண்டும்.
- குழு உறுப்பினர்கள் எண்ணிக்கை குறைந்தபட்சம் 12 முதல் 20 வரை இருக்கலாம்.
- குழு உறுப்பினர்கள் 18-65 வயது வரை உடையவராக இருக்கலாம்.
- குழு உறுப்பினர்களின் குடும்ப ஆண்டு வருமானமும் ரூ.3 இலட்சம் வரை இருக்கலாம்.
- இதுவரை எந்த ஒரு அரசு மானியமும் பெறாத குழுவாக இருத்தல் வேண்டும்.
- சுழல்நிதி பெற்றவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
- தாட்கோ, மாவட்ட மேலாளர் மற்றும் உதவி மேலாளர் கூட்டாக கள ஆய்வு செய்து சொத்து உருவாக்கிட உறுப்பினர்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்திய பின்னர் மானியம் விடுவிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
- இத்திட்டத்தின் சிறப்பினமாக உணவகம் அமைக்கவும், வேளாண் உற்பத்தி குழுக்களின் கீழ் வேளாண் இடு பொருட்கள் முகவர்களாக செயல்படவும், சந்தை மதிப்பின் அடிப்படையில் மிகப் பிரபலமடைந்த நிறுவனங்களின் முகவர்களாக அங்கீகாரம் பெற்றிருப்பின் அதற்கான அலுவலகங்கள் மற்றும் முதலீட்டிற்கும் கடனுதவி வழங்கப்படும். குழு திறன்பெற்றுள்ள தொழில்கள் அனைத்திலும் முதலீடு செய்வதற்கு மானியம் வழங்கப்படும்.
- கூட்டுத் திட்டமாக ஆழ்துளை கிணறு அமைக்க நபார்டு விதிமுறைகளுக்கு உட்பட்டு மானியம் வழங்கப்படும்.
- குழுவானது மகளிர் திட்ட அலுவலகத்தில் அங்கீகரிக்கப்பட்டதாகவும் (SHG ID Assigned). செயல்பாட்டில் இருந்து வரும் குழுவாகவும், மகளிர் திட்ட அலுவலகத்தில்

தர மதிப்பீடு செய்யப்பட்ட குழுவாகவும் இருத்தல் வேண்டும்.

பொதுவான குறிப்புகள்

- ஒவ்வொரு பயனாளியையும் தேர்வு செய்யும்போது திட்ட அறிக்கையினைப் பகுப்பாய்வு செய்து நல்ல திட்டத்திற்கு முன்னுரிமை அளிக்கப்படும்.
- தமிழக அரசு தோட்டக்கலை, உணவு பதப்படுத்துதல், நுண்ணீர் பாசனம், கால்நடை வளர்ப்பு, கோழிப்பண்ணை, ஆழ்கடல் மீன் பிடித்தல், உள்நாட்டு மீன் வளர்ப்பு, நன்னீர் இறால் வளர்ப்பு, உணவுப் பாதுகாப்பினை உறுதிப்படுத்தும் விவசாயம் சார் தொழில்கள், தகவல் தொழில்நுட்பம் சார்ந்த தொழில்களுக்கு முக்கியத்துவம் அளித்து வருவதால் மேற்காண் தொழில்களுக்கு மானியத்துடன் கூடிய கடன் வழங்குவதற்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது.
- அதிக மேய்ச்சல் நிலங்களும், நீர்வளமும் உள்ள மாவட்டங்களில் பால் பண்ணை தொழில் அனுமதிக்கப்படும். அதற்கு ஆவின் அல்லது தனியார் பால் கூட்டுறவுச் சங்கங்களோடு ஒப்பந்தம் செய்யும் நிலையினைக் கட்டாயமாக்கி பின் நிதியுதவி வழங்கப்படும். கால்நடை வளர்ப்புத் தொழிலுக்கு விண்ணப்பிப்பவர்கள் வாங்கப்படும் கால்நடைகளின் எண்ணிக்கை, விலைப்புள்ளி, திட்ட அறிக்கை, மருத்துவ உடல் தகுதிச் சான்றிதழ் ஆகியவற்றை அந்தந்த மாவட்டங்களிலுள்ள கால்நடைப் பராமரிப்பு துறை அலுவலர் / அரசு கால்நடை மருத்துவரிடம் பெற்று விண்ணப்பிக்க வேண்டும்.
- விவசாயம், மண்வளம், தோட்டக்கலை, விவசாயம் சார்ந்த சிறு பாசன முறைகள், கால்நடை வளர்ப்பு சார்ந்த தொழில்கள், மீன்வளம், உணவு உற்பத்தி சார்ந்த தொழில்கள், வேளாண் காடுகள் மற்றும் நர்சரி உற்பத்தி சார்ந்த தொழில்கள், கைவினைபொருட்கள், நூல்தறி சார்ந்த தொழில்கள், உற்பத்தி, வியாபாரம், சேவைகள் சார்ந்த தொழில்கள், ஆதிதிராவிட மக்கள் ஒருங்கிணைத்துத் கூட்டுறவு சங்கம் தொடங்கப்பட்டு அதன் மூலம் தொழிலை விரிவுபடுத்துதல் போன்ற பிரிவுகளின்கீழ்த் திட்டங்களை தேர்வு செய்ய வேண்டும்.

இணையதளத்தில் விண்ணப்பங்கள் பதிவு செய்யும் முறை

- தாட்கோவின் அனைத்துப் பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களில் பயன்பெற ஆதிதிராவிடர்களுக்கான http://application.tahdco.com மூலமாக விண்ணப்பிக்க வேண்டும்.
- பழங்குடியினர்களுக்கான இணையதள முகவரி http://fast.tahdco.com மூலமாக விண்ணப்பிக்க வேண்டும்.
- திறன் மேம்பாட்டுப் பயிற்சிக்கான இணையதள முகவரி http://training.tahdco.com மூலமாக விண்ணப்பிக்க வேண்டும்.
- விண்ணப்பத்தினைப் பதிவிறக்கம் செய்தோ அல்லது நகலினையோ, கைப்பிரதி விண்ணப்பங்களையோ சமர்ப்பிக்க வேண்டியதில்லை. இணையதளம் வாயிலாக விண்ணப்பிக்க இயலாதவர்கள் மாவட்ட மேலாளரை அணுகி இலவசமாகப் பதிவு செய்து கொள்ளலாம்.

i. விண்ணப்பதாரர் பற்றிய விவரங்கள்.

ii. புகைப்படம்.

iii. இருப்பிடச் சான்றிதழ் எண்.

iv. சாதிச் சான்றிதழ் (சான்றிதழ் எண், வழங்கப்பட்ட நாள். வழங்கியவர் மற்றும் வழங்கப்பட்ட அலுவலகம்).

v. குடும்ப ஆண்டு வருமானச் சான்றிதழ் எண். (சான்றிதழ் எண். வழங்கப்பட்ட நாள், வழங்கப்படுவதற்கான காரணம்).

vi. பட்டா / சிட்டா – (நிலம் வாங்குதல், நிலம் மேம்பாடு திட்டங்களுக்கு மட்டும்)

vii. குடும்ப அட்டை எண்.

viii. ஆதார் எண்.

ix. விண்ணப்பதாரரின் கைப்பேசி எண்.

x. விண்ணப்பதாரரின் மின்னஞ்சல் முகவரி (e-mail address)

xi. திட்டங்களின் விவரங்கள் முதலியவற்றை இணைய தளத்தில் கண்டிப்பாகப் பதிவு செய்ய வேண்டும். ஒன்று முதல் பத்து வரை உள்ள விவரங்கள் இன்றியமையாதவை. கைப்பேசி எண், மின்னஞ்சல் முகவரி இல்லாதவர்களுக்கு விதிவிலக்கு அளிக்கப்படும். மேற்குறிப்பிட்ட ஆவணங்கள் தவிர, திட்டங்களுக்கு ஏற்றாற்போல் தேவைப்படும் ஆவணங்களையும் சமர்ப்பிக்க வேண்டும்.

தூய்மைப் பணியாளர்கள் நல வாரியம்

தூய்மைப் பணிபுரிவோர், அவர்களை சார்ந்தோரின் நலன் கருதி அவர்களுக்கு தனியாகத் தூய்மைப் பணியாளர்கள் நல வாரியம் என்ற அமைப்பினை மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் அவர்களைத் தலைவராக கொண்டு செயல்பட்டு வருகிறது.

வாரியத்தின் திட்ட உதவிகள்

வ.எண்	நலத்திட்டத்தின் பெயர்	வழங்கப்படும் தொகை
1.	**விபத்துக் காப்பீட்டுத்திட்டம்**	
	விபத்து இறப்பு	ரூ.1,00,000/-
	பணியிடத்தில் விபத்து/ மரணம் உறுப்புகள் சரி செய்ய இயலாத அளவு இழப்பு	ரூ.5,00,000/-
	ஒரு கை இழப்பு	ரூ.1,00,000/-
	ஒரு கால் இழப்பு	ரூ.1,00,000/-
	ஒரு கண் முழுவதும் சரி செய்ய முடியாத அளவு பார்வை இழப்பு	ரூ.1,00,000/-
	ஏனைய காயங்கள் ஏற்பட்டு முழு இயலாமை	ரூ.1,00,000/-
2.	இயற்கை மரண உதவி	ரூ. 20,000/-
3.	ஈமச்சடங்கு உதவித் தொகை	ரூ. 5,000/-
4.	**கல்வி உதவித்தொகை**	
	10ஆம் வகுப்பு படிப்பதற்கு (பெண்களுக்கு மட்டும்)	ரூ.1,500/-
	10ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்	ரூ.1,500/-
	11ஆம் வகுப்பு படிப்பதற்கு (பெண்களுக்கு மட்டும்)	ரூ.1,500/-
	12ஆம் வகுப்பு படிப்பதற்கு (பெண்களுக்கு மட்டும்)	ரூ.1,500/-
	12ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்	ரூ.1,500/-
	முறையான பட்டப் படிப்பு	ரூ.1,500/-
	விடுதியில் தங்கிப் படித்தால்	ரூ.1,750/-
	முறையான பட்ட மேற்படிப்பு	ரூ. 4,000/-
	விடுதியில் தங்கிப் படித்தால்	ரூ. 5,000/-

வ.எண்	நலத்திட்டத்தின் பெயர்	வழங்கப்படும் தொகை
	தொழில்நுட்பப் பட்டப் படிப்பு	ரூ.4,000/-
	விடுதியில் தங்கிப் படித்தல்	ரூ.6,000/-
	தொழில்நுட்பப் பட்ட மேற்படிப்பு	ரூ.6,000/-
	விடுதியில் தங்கிப் படித்தல்	ரூ.8,000/-
	ஐ.டி.ஐ. அல்லது பாலிடெக்னிக் படிப்பு	ரூ.1,000/-
	விடுதியில் தங்கிப் படித்தல்	ரூ.1,200/-
5	**திருமண உதவித்தொகை தொழிலாளர் (அ) மகன் (அ) மகள் குடும்பத்திற்கு இருமுறை மட்டும்**	
	ஆண்	ரூ. 3,000/-
	பெண்	ரூ.5,000/-
6	மகப்பேறு உதவி	ரூ.3,000/-
	கருச்சிதைவு கருக்கலைப்பு	ரூ. 6000/-
7	கண்கண்ணாடி உதவி	ரூ.500/-
8	முதியோர் ஓய்வூதியம்	ரூ.1,000/-

தகுதி

1. தூய்மைப் பணியாளர்கள் நல வாரியத்தில் உறுப்பினராகப் பதிவு பெற்றிருக்க வேண்டும்.
2. வாரிய உறுப்பினர்கள் மேற்கண்ட திட்டத்தில் உதவிகள் பெற உரிய படிவத்தில் பூர்த்தி செய்து மாவட்ட மேலாளர் அலுவலகத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

மனுதாரர்கள் தாட்கோ திட்டத்தில் பயன்பெற அணுகவேண்டிய முகவரி மற்றும் தொலைபேசி எண்கள்

வ. எண்	மாவட்டங்கள்	முகவரி	எஸ்.டி.டி எண்.	தொலைபேசி எண்.
1.	அரியலூர்	2ஆவது தளம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், அரியலூர் – 621 704.	04329	228315
2	சென்னை	சிங்காரவேலன் மாளிகை #33 ராஜாஜி சாலை, சென்னை – 600 001.	044	25246344
3	கோயம்புத்தூர்	அரசு மாணவர் விடுதி வளாகம், டாக்டர் இளசுந்தரம் சாலை, கோயம்புத்தூர் – 641 018.	0422	2240111
4	கடலூர்	313/316, 2ஆவது தளம், புதிய மாவட்ட ஆட்சியர் அலுவலகம், திடீர் குப்பம், ஆல்பேட் அஞ்சல், கடலூர் – 607 001.	04142	221087
5	தருமபுரி	சாலை விநாயகர் கோயில் தெரு, விருப்பாச்சிபுரம், தருமபுரி – 636 701	04342	260 007

வ. எண்	மாவட்டங்கள்	முகவரி	எஸ்.டி.டி எண்.	தொலைபேசி எண்.
6	திண்டுக்கல்	மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், திண்டுக்கல் – 624 008.	0451	2460096
7	ஈரோடு	மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், 6ஆவது தளம், ஈரோடு – 638 011.	0424	2259453
8	காஞ்சிபுரம்	எண். 55A, 3ஆவது தெரு, எல்லப்பா நகர், காஞ்சிபுரம் – 631 501.	044	27237842
9	கரூர்	மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், கரூர் – 639 005.	04324	256703
10	கிருஷ்ணகிரி	மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், கிருஷ்ணகிரி – 635 001.	04343	238881
11	மதுரை	டி.ஆர்.டி.ஏ காம்ப்ளக்ஸ், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், மதுரை – 625 020.	0452	2529848
12	நாகப்பட்டினம்	மாவட்ட ஆட்சியர் அலுவலகம், நாகப்பட்டினம் – 611 003.	04365	250305
13	நாமக்கல்	அர்த்தநாரி பிள்ளை தெரு, மோஹனூர் ரோடு, நாமக்கல் – 637 001.	04286	280776
14	நாகர்கோவில்	#36/1, பிரசிடெண்ட் சிவதானு தெரு, எஸ்.எல்.பி. (தெற்கு), நாகர்கோவில் – 629 001.	04652	227532
15	நீலகிரி	3ஆவது ப்ளாக், மாவட்ட ஆட்சியர் அலுவலக கூடுதல் கட்டடம், பிங்கர் அஞ்சல், உதகமண்டலம், நீலகிரி – 643 006.	0423	2443064
16	பெரம்பலூர்	# 29, போஸ்ட் ஆபிஸ் ரோடு, 1ஆவது குறுக்குத் தெரு, பெரம்பலூர் – 621 212.	04328	276317
17	புதுக்கோட்டை	பஞ்சாயத் யூனியன் ஆபிஸ் ரோடு, காட்டுப்புதுக்குளம், புதுக்கோட்டை – 622 001.	04322	221487

வ. எண்	மாவட்டங்கள்	முகவரி	எஸ்.டி.டி எண்.	தொலைபேசி எண்.
18	இராமநாதபுரம்	மாவட்ட ஆட்சியர் அலுவலகம், இராமநாதபுரம் – 623 501.	04567	231039
19	சேலம்	எருமைபாளையம் ரோடு, சீலநாயக்கன்பட்டி, தசநாயக்கன்பட்டி அஞ்சல், சேலம் – 636 201.	0427	2280348
20	சிவகங்கை	மாவட்ட ஆட்சியர் அலுவலகம், சிவகங்கை – 623 560.	04575	240501
21	திருவள்ளூர்	எண். 19, 2ஆவது தெரு, நீதிபதிகள் காலனி, பெரியகுப்பம், திருவள்ளூர் – 602 001.	044	27655539
22	திருவண்ணாமலை	#183, முத்து விநாயகர் கோயில் தெரு, திருவண்ணாமலை – 606 602.	04175	232366
23	தஞ்சாவூர்	நங்கிக்கோட்டை ரோடு, காதி காம்ப்ளக்ஸ் அருகில், தஞ்சாவூர் – 613 006.	04362	256679
24	திருப்பூர்	மாவட்ட ஆட்சியர் அலுவலகம், திருப்பூர் – 641 604.	0421	2971112
25	திருவாரூர்	#26, அரசு ஆண்கள் விடுதிப் பள்ளி அருகில், நாகை பைபாஸ் ரோடு, திருவாரூர் – 610 001.	04366	250017
26	திருச்சி	மாவட்ட ஆட்சியர் அலுவலகம், மாவட்ட ஆட்சியர் அலுவலகச் சாலை, திருச்சி – 620 001.	0431	2463969
27	தேனி	மாவட்ட ஆட்சியர் அலுவலகம், தேனி – 626 531.	04546	260995
28	திருநெல்வேலி	எலந்தகுளம் ரிசர்வ் லேன், பாளையங்கோட்டை, திருநெல்வேலி – 627 002.	0461	2561012
29	தூத்துக்குடி	மாவட்ட ஆட்சியர் அலுவலகம், 4ஆவது தளம், தூத்துக்குடி – 628 101.	0462	2341281
30	வேலூர்	ஆபிஸர்ஸ் லைன், ஓல்டு டிஸ்ட்ரிக் போர்டு, ஆபிஸ் பில்டிங், வேலூர் – 632 001.	0416	2210546

வ. எண்	மாவட்டங்கள்	முகவரி	எஸ்.டி.டி எண்.	தொலைபேசி எண்.
31	விருதுநகர்	மாவட்ட ஆட்சியர் அலுவலகம், விருதுநகர் – 626 003.	04562	252324
32	விழுப்புரம்	மாவட்ட ஆட்சியர் அலுவலகம், விழுப்புரம் – 605 602.	04146	222863

மேலும் விவரங்களுக்கு,

தாட்கோ தலைமை அலுவலகம்,
எண். 31-2ஆவது சந்து,
செனடாப் ரோடு,
தேனாம்பேட்டை,
சென்னை – 600 018.

நன்றி: தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம்

படமும் / செய்தியும்

செய்தித் துறை அலுவலர்கள் பணி ஆய்வுக் கூட்டம்

மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் திரு. மு.பெ.சாமிநாதன் அவர்கள் தலைமையில் 24.10.2024 அன்று சென்னை கலைவாணர் அரங்கக் கூட்டரங்கில் கோயம்புத்தூர், மதுரை, திருநெல்வேலி ஆகிய மண்டல இணை இயக்குநர்கள், இம்மண்டலங்களுக்குட்பட்ட மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்களின் பணி ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறைச் செயலாளர் திரு. வே.ராஜாராமன், இ.ஆ.ப., செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு. இரா.வைத்திநாதன், இ.ஆ.ப., செய்தி மக்கள் தொடர்புத் துறைக் கூடுதல் இயக்குநர்கள் திரு. மு.பெ.அன்புசோழன், (மக்கள் தொடர்பு) திரு. ச.செல்வராஜ், (செய்தி) மற்றும் செய்தித் துறை அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

நவம்பர் 8: தமிழறிஞர் வீரமாமுனிவர் அவர்களின் பிறந்த நாள்

"அகராதியின் தந்தையார்"

"பலவகை பெருமைகளோடு மலைவளமும், வயல்வளமும், காட்டு வளமும், நீர் வளமும் ஆகிய நானில வளமும் ஒருங்கமையப் பெற்ற இத்தாலி நாடே வீரமாமுனிவர் என்னும் பெரியார்க்குத் தாய் நாடாகும்.

இத்தாலி நாட்டில், வெனிசுல மாநிலத்திலுள்ள, மாந்துவா மாவட்டம், காஸ்திரி கிளியோனே என்னும் சிற்றூரில், கொன்ஸ் டான்ஸ் எனும் இயர்ப் பெயருடைய வீரமாமுனிவர் அவர்கள் பிறந்தார். கொன்ஸ் டான்ஸ் என்பது இத்தாலி மொழிச் சொல். இச்சொல் தைரியம் என்றும் வீரம் என்றும் பொருள்படும்.

வீரமா முனிவர் அவர்கள் 08.11.1680 அன்று பிறந்தார். கண்டோல் போபெஷி என்பது அவர் தம் தந்தையார் பெயராகும். தாயார் பெயர் எலிசபெத்பெஷி என்பதாகும்.

இளமைப் பருவத்திலே தம் தாய் மொழியாகிய இத்தாலிய மொழியைப் பிழையறப் பேசவும், எழுதவும் கற்றுக் கொண்டார்; பிற மொழிகளையும் அறிந்துகொள்ள வேண்டும் என்னும் ஆர்வம் இளமையிலேயே அவர் மனத்தில் கிளர்ந்தெழுந்தது.

தமது தாய் மொழியிலுள்ள பழைமையான இலக்கியங்களையும், இலக்கணங்களையும் கற்றுத்தேர்ந்தார். புதுவனவாக எழுந்துள்ள இலக்கியங்களையும் கற்றுத் தம் தாய்மொழியில் வல்லவரானார்.

அகராதிக்கு ஒப்பான நிகண்டுகள் பலவற்றைத் தமிழ்மக்கள் பெற்றிருந்தனர். ஆயினும், 'அகராதியின் தந்தையார்' என்னும் பட்டப் பெயர் தமிழ்நாட்டில் பிறந்தாருள் ஒருவர்க்கும் கிடைக்கவில்லை. நாட்டாலும், மொழியாலும், சமயத்தாலும் வேறுபட்ட ஒருவர்க்குத் தமிழ் மக்களே அப் பெயரைச் சூட்டி மகிழ்ந்தார்களென்றால் அவர்தம் பெருமையை என்னென்பது? கிடைத்தற்கரிய அப்பேறு பெற்றவரைத் தமிழ் மக்கள் வீரமாமுனிவர் என்று அன்புப் பெயரிட்டழைத்தனர்."

*நன்றி: புலவர் **ஆ. மாரிமுத்து** அவர்கள் எழுதிய நூலிலிருந்து.....*

“தமிழ்ப் புதல்வன்” என்ற பெருமைக்குரிய திட்டத்தைக் கொண்டுவந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் ஐயா அவர்களுக்கு மனமார்ந்த நன்றி...

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் கோயம்புத்தூரில் நடைபெற்ற அரசு விழாவில், 6-ஆம் வகுப்பு முதல் 12-ஆம் வகுப்பு வரை அரசுப் பள்ளிகளிலும், 6-ஆம் வகுப்பு முதல் 12-ஆம் வகுப்பு அரசு உதவி பெறும் பள்ளிகளில் தமிழ் வழியிலும் பயின்று உயர்கல்வி பயிலும் மாணவர்களுக்கு மாதந்தோறும் ரூ.1,000/- உதவித் தொகை வழங்கும் தமிழ்ப் புதல்வன் திட்டத்தைத் தொடங்கி வைக்கும் விதமாக மாணவர்களுக்குப் பற்று அட்டைகளை (Debit Card) வழங்கினார்கள்.

தமிழ்நாட்டில் பெண்களின் உயர்கல்வியை உறுதி செய்வதற்கென தொடங்கப்பட்ட புதுமைப் பெண் திட்டமானது மாபெரும் வெற்றியைப் பெற்றுள்ளதையடுத்து, அதேபோல், அரசு பள்ளிகளில் பயின்ற, ஏழை எளிய மாணவர்களைச் சாதனையாளர்களாக உருவாக்கிடவும், அரசுப் பள்ளி மாணவர்களின் உயர்கல்வி சேர்க்கையை உயர்த்திடவும், ‘தமிழ்ப் புதல்வன்’ எனும் ஒரு மாபெரும் திட்டம் வரும் நிதியாண்டில் இருந்து அறிமுகப்படுத்தப்படும். இத்திட்டத்தின் கீழ் 6 முதல் 12-ஆம் வகுப்பு வரை அரசு பள்ளிகளில் பயின்று உயர்கல்வி சேரும் மாணவர்கள், பாடப் புத்தகங்கள், பொது அறிவு நூல்கள், இதழ்களை வாங்கி அவர்களது கல்வியை மெருகேற்றிட உதவும் வகையில், மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் அவர்களின் வங்கிக் கணக்கில் நேரடியாகச் செலுத்தப்படும்.

இத்தகைய முன்னோடித் திட்டங்களின் மூலம் நமது இளைஞர்களின் ஆற்றலை ஆக்கப்பூர்வமாக பயன்படுத்தி அவர்கள் நமது மாநிலம் மற்றும் நாட்டின் எதிர்காலத் தூண்களாகத் திகழ்வார்கள். இப்புதிய திட்டத்தின் மூலம் சுமார் மூன்று இலட்சம் கல்லூரி மாணவர்கள் பயனடைவர் என்று அறிவிக்கப்பட்டது.

உயர்கல்வி, மாணவர்களின் கனவுகளை நனவாக்க உதவும் என்பதை உணர்ந்த தமிழ்நாடு அரசு, புதுமைப் பெண்களுக்கு மட்டும் அல்லாமல் தமிழ்ப் புதல்வர்களாகிய மாணவர்களுக்கும் தாயுமானவனாக என்றும் உடனிருப்பேன் என்னும் விதமாக அரசுப் பள்ளி மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் தமிழ் வழியில் 6ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை பயின்ற அனைத்து மாணவர்களும் கலை, அறிவியல், பண்பாடு, தொழில்நுட்பம், விவசாயம், செவிலியர், மருத்துவம் சார்ந்த படிப்புகள், சட்டம், பொறியியல், தொழிற்கல்வி சார்ந்த பட்டம், பட்டயப் படிப்புகளில் இந்திய அரசு, தமிழ்நாடு அரசு, பல்கலைக்கழக மானியக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட உயர் கல்வி நிறுவனங்களில் சேர்ந்து உயர்கல்வி பயிலும் மாணவர்களுக்கும் மாதந்தோறும் ரூபாய் ஆயிரம் (ரூ.1,000/-) ஊக்கத் தொகையை அவர்கள் முழுமையாக அப்படிப்பினை படிக்கும் பாடநெறிக் காலத்திற்கு வழங்கப்படும். இத்திட்டத்தின் மூலம் மாணவர்கள் உயர்கல்வி இலக்கினை அடையவும், எதிர்காலத்தில் மேலும் பல வெற்றிகளைப் பெற்றிடவும் இயலும்.

தமிழ்ப் புதல்வன் திட்டத்தில் 6-ஆம் வகுப்பு முதல் 12-ஆம் வகுப்பு வரை அரசுப் பள்ளிகள், அரசு உதவி பெறும் பள்ளிகளில் தமிழ் வழியில் பயின்று இந்திய அரசு / தமிழ்நாடு அரசு / பல்கலைக்கழக மானியக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட உயர்கல்வி நிறுவனங்களில் சேர்ந்து உயர்கல்வி பயிலும் மாணவர்களுக்கு உதவித் தொகை வழங்கப்படும். இத்திட்டத்தில் சுமார் 3.28 இலட்சம் மாணவர்கள் பயன்பெறும் வகையில் தமிழ்நாடு அரசால் 2024-2025-ஆம் நிதியாண்டிற்கு 360 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டத்தில் கலை மற்றும் அறிவியல், தொழிற்சார் படிப்புகள், இணை மருத்துவம் சார்ந்த படிப்புகள், பட்டயப் படிப்பு, தொழிற்கல்வி, ஒருங்கிணைந்த பட்ட மேற்படிப்பு (முதல் 3 ஆண்டுகளுக்கு மட்டும்) போன்ற உயர்கல்வி படிப்புகள் படிக்கும் மாணவர்கள் பயன்பெறலாம். மேலும், எட்டாம் வகுப்பு, பத்தாம் வகுப்பு முடித்து, தொழிற்பயிற்சி பயில்வோரும் இத்திட்டத்தின் மூலம் பயன்பெறலாம். அதேபோன்று பிற மாநிலங்களில் ஒன்றிய அரசின் கீழ் செயல்படும் IIT, NIT, IISER போன்ற தகைசால் கல்வி நிறுவனங்களில் பயிலும் அரசுப் பள்ளிகளில் பயின்ற, அரசு உதவி பெறும் பள்ளிகளில் தமிழ்வழிக் கல்வியில்

பயின்ற மாணவர்களும் இத்திட்டத்தில் பயன்பெறலாம். அரசு, அரசு உதவிபெறும் பள்ளிகளில் பயின்று உயர்கல்வி பயிலும் மாணவர்களுக்கு மாதம் ரூ.1,000 வழங்கும் தமிழ்ப் புதல்வன் திட்டத்தின்கீழ் கோயம்புத்தூர் மாவட்டத்தில் 242 கல்லூரிகளில் பயிலும் 15,754 மாணவர்கள் பயன்பெறுகின்றனர்.

இத்திட்டத்தின் கீழ். பயனடைந்த, கோயம்புத்தூர் மாவட்டம் அரசு கலைக்கல்லூரியில் இளங்கலை இரண்டாம் ஆண்டு அரசியல் அறிவியல் படிக்கும் மாணவர் திரு. சரவணகுமார் அவர்கள் நம்மிடம் தெரிவித்ததாவது:

திரு. சரவணகுமார்

என்னுடைய பெயர் சரவணகுமார், கோயம்புத்தூர் மாவட்டம் அரசு கலைக் கல்லூரியில் இளங்கலை இரண்டாம் ஆண்டு அரசியல் அறிவியல் படிக்கிறேன். என்னுடைய குடும்பம் ஏழ்மையானது. என்னுடைய அப்பா கூலி வேலைதான் செய்கிறார்கள். அம்மா வீட்டில்தான் இருக்கிறார்கள். கஷ்டப்பட்டுதான் என்னை படிக்க வைக்கின்றார்கள். இந்த சூழ்நிலையில் என்னுடைய படிப்புச் செலவுகள், புத்தகம் வாங்குவது, தேர்வுக் கட்டணம் உள்ளிட்டவைகளுக்காக அவர்களிடம் பணம் கேட்பது மிகவும் சங்கடமாக இருந்தது. எனவே, நான் மாலை நேரத்தில் கல்லூரி முடிந்தபிறகு பகுதிநேர வேலை (Part time Job) பார்த்துக்கொண்டு, அதில் கிடைக்கும் வருமானத்தை வைத்து என்னுடைய கல்லூரிக்கான செலவுகளை நானே கவனித்துகொண்டு, படித்துவந்தேன். வேலை முடிந்து இரவு வெகுநேரம் கழித்து வருவதால் என்னுடைய படிப்பில் என்னால் முழுமையாகக் கவனம் செலுத்த முடியவில்லை. இந்தச் சூழ்நிலையில்தான் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் ஐயா அவர்கள் தமிழ்ப் புதல்வன் திட்டத்தைக் கொண்டு வந்துள்ளார்கள். இத்திட்டத்தின் மூலம் மாதம் ரூ.1,000 கிடைக்கின்றது. இந்தத் தொகையைக் கொண்டு என்னுடைய படிப்புச் செலவினை நானே பார்த்துக்கொள்வேன். வீட்டிலிருந்து பணம் வாங்கவேண்டிய அவசியமில்லை. பகுதிநேர வேலையினை விட்டுவிட்டு இனிமேல் என்னுடைய படிப்பில் முழுக் கவனம்செலுத்தி படிக்கபோகிறேன். என்னுடைய வறுமை நிலையிலிருந்து மீண்டு, படிப்பில் என்னுடைய முழு கவனத்தை செலுத்த காரணமாக இருந்தது இந்தத் தமிழ்ப் புதல்வன் திட்டமாகும் என்பதை பெருமையுடன் கூறிக்கொள்கிறேன். இந்த பெருமைக்குரிய திட்டத்தைக் கொண்டுவந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் ஐயா அவர்களுக்கு மாணவர்கள் சார்பாக நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இத்திட்டத்தின்கீழ், பயனடைந்த சுங்கம் சாலையில் உள்ள பிஷப் அம்ப்ரோஸ் கல்லூரியில் இளங்கலை இரண்டாம் ஆண்டு தகவல் தொழில்நுட்பம் படிக்கும் மாணவர் திரு. ஜேக் பெர்னான்டஸ் அவர்கள் நம்மிடம் தெரிவித்ததாவது:

என் பெயர் ஜேக் பெர்னான்டஸ். சுங்கம் பைபாஸில் உள்ள பிஷப் அம்ப்ரோஸ் கல்லூரியில் இரண்டாம் ஆண்டு தகவல் தொழில்நுட்பம் படிக்கிறேன். எங்க அப்பா கூலி வேலைதான் செய்கிறார். ஊர், ஊராகப் போய் அவர் வேலை செய்தால்தான் அவருக்கு சம்பளம் கிடைக்கும். இந்தச் சூழ்நிலையில் எங்க அப்பா அம்மா என்னைப் படிக்க வைக்கிறதே மிகப்பெரிய கஷ்டம்தான்.

இருந்தாலும் அவங்க என்னை ஒரு தனியார் கல்லூரியில் சேர்த்துப் படிக்க வைக்கிறாங்க. என்னைப் படிக்க வைக்கிறதே மிகப்பெரிய கஷ்டத்தில் நான் அவர்களிடம் போய், புத்தகம் வாங்கவும், தேர்வுக் கட்டணம் கட்டவும் பணம் கேட்க எனக்கு மிகவும் மனசுக்கு கஷ்டமாக இருக்கும். இந்தச் சூழ்நிலையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் ஐயா அவர்கள், தமிழ்ப் புதல்வன் திட்டத்தைக் கொண்டுவந்துள்ளார்கள். இந்தத் திட்டத்தின் மூலம் கிடைக்கும் உதவித்தொகையினைத் கொண்டு, என்னுடைய படிப்புக்கு தேவையான நோட்டு, புத்தகம், ஸ்டேஷ்னரி பொருட்கள், பேருந்துப் பயணக் கட்டணம் உள்ளிட்ட படிப்புக்கு தேவையான செலவுகளை என்னால் பார்த்துக்கொள்ளமுடியும். சிறுதுளி பெருவெள்ளம் போல் இத்திட்டத்தின் கீழ் கிடைக்கும் உதவித்தொகை எனக்குப் பேருதவியாக இருக்கிறது. தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாணவர்களும் 100 சதவிகிதம் உயர்கல்வி பயிலவேண்டும் என இத்திட்டத்தைக் கொண்டுவந்துள்ள மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு என்னைப் போன்ற மாணவர்கள் அனைவரின் சார்பாகவும் எனது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தொகுப்பு;
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
கோயம்புத்தூர் மாவட்டம்.

நவம்பர்23: கவிஞர் சுரதா அவர்களின் பிறந்த நாள்

“தாய்மொழி”

“எம்மொழியைத் தாய்மொழியென் றழைக்கின் றோமோ
எம்மொழியில் நாம்கனவு காண்கின் றோமோ
அம்மொழியே வழிபாட்டுக் குரிய தாகும்
ஆண்டவனுக் கதுவேதான் ஏற்ற தாகும்
சம்பந்தர், அபிராமி பட்ட ரெல்லாம்
தாய்மொழியாம் தமிழில்தான் வழிபட்டார்கள்
எம்பெருமான் தமிழில்வழி படாதீர் என்றே
எவரிடத்தும் இதுவரையில் சொன்ன துண்டோ?”

— கவிஞர் **சுரதா** அவர்கள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களின் அமெரிக்க பயணம் குறித்து, தமிழரசு இதழுக்கு மாணவன் சி.ம. கௌதம் சுராஜ் அவர்கள் அளித்த சிறப்பு கட்டுரை...

கடந்த செப்டம்பர் மாத இதழில் கேட்கப்பட்ட, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மேற்கொண்ட அமெரிக்கப் பயணம் ஏற்படுத்திய தாக்கம் என்ன என்ற தலைப்பிற்கான பதிலினைச் சென்னை, நந்தனம், அரசுக் கலைக் கல்லூரியில் பொது நிருவாகப் பிரிவில் பயின்றுவரும் மாணவன் சி.ம.கௌதம் சுராஜ் அவர்கள் நமக்கு அனுப்பியக் கட்டுரையில் தெரிவித்ததாவது,

சி.ம. கௌதம் சுராஜ்

2030ஆம் ஆண்டுக்குள் தமிழ்நாடு 1 டிரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதார வளர்ச்சியை அடைந்து இந்தியப் பொருளாதாரத்தில் முக்கிய பங்களிப்பாளராக உருவாகும் இலட்சிய நோக்கில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் மேற்கொண்டுள்ள அமெரிக்க பயணம் ஒரு முக்கிய தடத்தை வகிக்கிறது. இந்தப் பயணம் தமிழ்நாட்டின் பொருளாதார முன்னேற்றத்தை துரிதமாக்க மற்றும் உலகளாவிய தொழில்நுட்பம், முதலீடு, வர்த்தக இணைப்புகளை அதிகரிக்கவும் செய்யப்படுகிறது. இதன் மூலம் தமிழ்நாடு உலகளாவிய பொருளாதார சந்தைகளில் மேலோங்கும்படி, இந்தியாவின் பொருளாதார வளர்ச்சியில் அதன் பங்கு அதிகரிக்கப்படுவதைப் பார்க்க முடியும் என்பதை இக்கட்டுரையில் காணலாம்.

அமெரிக்கப் பயணத்தின் தாக்கம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களின் அமெரிக்க பயணம், இந்த இலக்கை அடைய முக்கியமான பங்களிப்புச் செய்யும். இந்தப் பயணத்தின் மூலம் அமெரிக்காவின் முன்னணி தொழில்நுட்ப நிறுவனங்கள், தொழில் முனைவோர், முதலீட்டாளர்களுடன் நேரடியாக தொடர்புகொண்டு தமிழ்நாட்டில் முதலீடு செய்ய ஊக்குவிக்க முடியும்.

தொழில்நுட்பம், தொழில் முனைவோர் துறைகளில் வளர்ச்சி

அமெரிக்க பயணத்தின் மூலம் தமிழ்நாட்டில் தொழில்நுட்ப, தொழில் முனைவோர் துறைகளில் வளர்ச்சி ஏற்படும். அமெரிக்காவின் முன்னணித் தொழில்நுட்ப நிறுவனங்கள் மற்றும் தொழில் முனைவோர்கள் தமிழ்நாட்டில் தொழில்நுட்ப மையங்கள், ஆராய்ச்சி, மேம்பாட்டு மையங்கள், தொழில் முனைவோர் நிறுவனங்களை நிறுவ ஊக்குவிக்கப்படுவார்கள்.

தொழில்நுட்பக் கல்வி, திறன் மேம்பாடு

அமெரிக்க பயணம், தமிழ்நாட்டில் தொழில்நுட்ப, திறன் மேம்பாட்டிற்கு உதவியாக இருக்கும். அமெரிக்காவின் முன்னணிப் பல்கலைக்கழகங்கள், தொழில்நுட்ப நிறுவனங்களுடன் கூட்டாளித்துவங்கள் ஏற்படுத்தப்பட்டுத் தமிழ்நாட்டு மாணவர்கள், உலகத் தரத்தில் தொழில்நுட்பக் கல்வி பெறவும், தொழில்நுட்ப திறன்களை மேம்படுத்தவும் வாய்ப்புக் கிடைக்கும்.

வெளிநாட்டு முதலீட்டை ஈர்ப்பது

அமெரிக்கப் பயணம் தமிழ்நாட்டில் வெளிநாட்டு முதலீட்டை ஈர்ப்பதற்கும் உதவியாக இருக்கும். அமெரிக்காவின் முன்னணி தொழில்நுட்ப நிறுவனங்கள், முதலீட்டாளர்கள், தமிழ்நாட்டின்

தொழில் சூழல், தொழிலாளர் திறன் மற்றும் உள்கட்டமைப்பு வசதிகள் குறித்து நேரடியாக அறிந்துகொண்டு முதலீடு செய்ய ஊக்குவிக்கப்படுவார்கள்.

தமிழ்நாட்டின் உலகளாவிய அங்கீகாரம்:

அமெரிக்கப் பயணம் தமிழ்நாட்டின் உலகளாவிய அங்கீகாரத்தை மேம்படுத்தும். அமெரிக்காவின் முன்னணி ஊடகங்கள், தொழில் நிபுணர்கள் தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சி, தொழில்நுட்ப முன்னேற்றம், தொழில் சூழல் குறித்துச் செய்தி வெளியிடுவார்கள். இது, தமிழ்நாட்டை உலகளாவிய அளவில் முதலீட்டாளர்களை ஈர்க்கும் மாநிலமாக மாற்றும்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களின் அமெரிக்கப் பயணம் தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு ஒரு திருப்புமுனையாக அமையும் என்பதை இக்கட்டுரையில் கண்டோம்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களின் சேவை.... 'தமிழ்நாட்டிற்குத் தேவை.....

நன்றி! வணக்கம்!

"மக்களைத்தேடி மருத்துவம்" திட்டத்திற்கு விருது

United Nation Interagency Task Force Award

இந்தியத் துணைக் கண்டத்துக்கே முன்னோடித் திட்டமாக நமது திராவிட மாடல் அரசில் செயல்படுத்தப்பட்டுள்ள "மக்களைத் தேடி மருத்துவம்" திட்டத்திற்கு உலக அங்கீகாரம் தேடி வந்திருக்கிறது!

ஒரு கோடியே 80 இலட்சத்துக்கும் அதிகமான மக்கள் இதுவரையில், இந்தத் திட்டத்தால் பயன்பெற்றுள்ளனர்.

ஒவ்வொருவரது இல்லத்துக்கும் சென்று மருத்துவச் சேவைகளை வழங்கும் நமது திட்டம், சமூகத்தில் ஏற்படுத்தியிருக்கும் தாக்கத்தின் அடையாளம்தான் ஐக்கிய நாடுகள் அமைப்பின் 2024-ஆம் ஆண்டிற்கான United Nation Interagency Task Force Award விருது!

சிறப்பான முறையில் இந்தத் திட்டத்தைச் செயல்படுத்தி – கண்காணித்து – மேம்படுத்தி வரும் மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு. மா.சுப்பிரமணியன் அவர்களுக்கும், அவருக்குத் துணை நிற்கும் துறைச் செயலாளர் மற்றும் மருத்துவர்கள், செவிலியர்கள், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறைப் பணியாளர்கள் அனைவருக்கும் என்னுடைய வாழ்த்துகள்!

இந்தத் திட்டம் இன்னும் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு மக்களுக்குப் பயனளிப்பதைத் தொடர்ந்து உறுதிசெய்வோம்!

– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்களின்
சமூக வலைத்தளப் பதிவு–07.10.2024.

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் - குரூப் 5

உதவிப்பிரிவு அலுவலர்களுக்குரிய காலிப்பணியிடங்களுக்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன

2024இல் TNPSC குரூப் 5 வேலைவாய்ப்பில் உதவிப் பிரிவு அலுவலர்களுக்கான காலிப் பணியிடங்கள் நிரப்பப்படவுள்ளன.

அதற்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது. காலிப்பணியிடங்களின் மொத்த எண்ணிக்கை 35. இதற்கு விண்ணப்பிக்க விரும்புவோர் இணையதளம் மூலமாக விண்ணப்பிக்க வேண்டும். TNPSC குரூப் 5 வேலைவாய்ப்பிற்கு விண்ணப்பிக்க வேண்டிய கடைசி நாள் 15.11.2024 வரை.

இதற்கு விண்ணப்பிப்பதற்கு முன் தங்களின் கல்வி, வயது வரம்பு சரிபார்த்து, அதிகாரப்பூர்வ அறிவிப்பை முழுமையாகப் படித்த பின் விண்ணப்பிக்கவும். Degree தேர்ச்சி பெற்ற தகுதியான விண்ணப்பதாரர்கள் விண்ணப்பிக்கலாம்.

காலிப்பணியிடங்கள் விவரம்:

பதவியின் பெயர்: உதவிப் பிரிவு அலுவலர் (Assistant Section Officer)

காலிபணியிடங்களின் மொத்த எண்ணிக்கை: 35

தகுதி:

இப்பணிக்கு விண்ணப்பிக்கும் ஆர்வலர்கள் அரசு அங்கீகாரத்திற்கு உட்பட்ட கல்வி வாரியத்தில் Degree தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

ஊதியம்:

இப்பணிக்கு தேர்வு செய்யப்படும் நபர்களுக்கு Pay Scale Level 16 அளவில் மாத ஊதியம் வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

வயது வரம்பு:

இப்பணிக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்களின் வயது வரம்பானது 35க்குள் இருத்தல் அவசியம்.

தேர்வு செயல்முறை:

இப்பணிக்கு விண்ணப்பிக்கும் நபர்கள் எழுத்து தேர்வு மற்றும் சான்றிதழ் சரிபார்ப்பின் மூலம் தேர்ந்தெடுக்கப்படுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

விண்ணப்பிக்கும் முறை:

இப்பணிக்குத் தகுதியான விண்ணப்பதாரர்கள் அதற்கான அதிகாரப்பூர்வமான தளத்தில் விண்ணப்பப் படிவம் பதிவிறக்கம் செய்து குறிப்பிடப்பட்டுள்ள கடைசி நாளுக்குள் (15.11.2024) பூர்த்திச்செய்து விண்ணப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் தொகுதி-IV பணிகளுக்கான தேர்வு முடிவுகள்

ஒருங்கிணைந்த குடிமைப் பணிகள்-IV (தொகுதி-IV பணிகள்) தேர்வு முடிவுகள் வெளியீடு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், ஒருங்கிணைந்த குடிமைப் பணிகள்-IV (தொகுதி-IV)-ற்கான நேரடி நியமனத்திற்காக 30.01.2024 அன்று அறிவிக்கை வெளியிட்டது. இத்தெரிவிற்கான எழுத்துத் தேர்வு 09.06.2024 முற்பகல் நடைபெற்றது. இத்தேர்விற்கு 20,36,774 விண்ணப்பதாரர்கள் தேர்வு எழுத அனுமதிக்கப்பட்டனர்.

இத்தெரிவிற்கான தேர்வு முடிவுகளைத் தேர்வாணையம் 28.10.2024 அன்று வெளியிட்டுள்ளது. தேர்வர்கள் தங்களது தரவரிசை, மதிப்பெண்களை தேர்வாணையத்தின் இணையதளங்களான www.tnpscresults.In.gov.in, www.tnpscexams.in-ல் அவர்களது பதிவெண், பிறந்த தேதி ஆகியவற்றை உள்ளீடு செய்து தெரிந்து கொள்ளலாம்.

தேர்வாணையத்தின் செயல்பாடுகளில் வெளிப்படைத் தன்மையினை உறுதி செய்யும் பொருட்டு தேர்வர்கள் இத்தேர்வில் பெற்ற மதிப்பெண்கள், அவர்களின் ஒட்டுமொத்த தரவரிசை, இனச்சுழற்சிக்கான தரவரிசை, சிறப்பு ஒதுக்கீட்டிற்கான தரவரிசை ஆகியன வெளியிடப்பட்டுள்ளன. தற்போது வெளியிடப்பட்டுள்ள தரவரிசை. இணையவழி விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள விவரங்கள். உரிமைக்கோரல்கள், நியமன ஒதுக்கீட்டு விதிகளின் அடிப்படையில், தேர்வாணையத்தால் நிருணயிக்கப்படும் விகிதத்தில், தேர்வர்கள் சான்றிதழ் சரிபார்க்கும் நிலைக்குத் தெரிவு செய்யப்படுவர். சான்றிதழ் சரிபார்ப்பிற்கு தெரிவு செய்யப்படுபவர்களின் பட்டியல் விரைவில் தேர்வாணைய இணையதளத்தில் வெளியிடப்படும்.

அத்தகைய தேர்வர்களுக்கு குறுஞ்செய்தி, மின்னஞ்சல் வழியாக மட்டுமே விவரங்கள் தெரிவிக்கப்படும். அஞ்சல் / கடிதம் வழியாகத் தகவல்கள் ஏதும் அனுப்பப்படமாட்டாது. எனவே தேர்வர்கள் தேர்வாணைய இணையதளத்தினை (www.tnpsc.gov.in) தொடர்ந்து பார்வையிடுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.

டி.என்.பி.எஸ்.சி. குரூப்-4 தேர்வு முடிவுகள் வெளியீடு தொடர்பான தேர்வாணையத்தின் கூட்டம் நடைபெற்ற நிலையில் தேர்வு முடிவுகள் உடனடியாக அறிவிப்பு கடந்த ஜூன் மாதம் 7ஆம் தேதி தேர்வு நடைபெற்றது. 20 இலட்சம் பேர் தேர்வில் பங்கேற்ற நிலையில் முடிவு வெளியானது. தேர்வர்கள் தங்களது தேர்வு முடிவுகளை www.tnpsc.gov.in என்ற இணையதளத்தில் தெரிந்துக்கொள்ளலாம். ■

தமிழ்நாடு அரசின்

போட்டித் தேர்வுகள் பயிற்சி மையங்கள்

(சென்னை, கோவை, சேலம், மதுரை)

தமிழ்நாடு அரசின் சார்பில், சர் தியாகராய கல்லூரி வளாகம், சென்னை-21, மாநிலக் கல்லூரி வளாகம், சென்னை-5, அரசு கலைக் கல்லூரி வளாகம், கோயம்புத்தூர்-18, பெரியார் பல்கலைக்கழக வளாகம், சேலம்-11, மற்றும் மதுரை காமராஜர் பல்கலைக்கழக மாலைக் கல்லூரி வளாகம், மதுரை-2, ஆகிய இடங்களில் உள்ள போட்டித் தேர்வுகள் பயிற்சி மையங்கள், சென்னை-28 பயிற்சி இயக்குநர் அலுவலகத்தின் கீழ் இயங்கி வருகின்றன.

மத்திய, மாநில அரசு நிறுவனங்களால் நடத்தப்படும் TNPSC, SSC, IBPS, RRB போன்ற பல்வேறு அரசுத் தேர்வுகளில் ஆர்வலர்களின் வெற்றி வாய்ப்புகளை மேம்படுத்துவதன் மூலம் அவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. தமிழக அரசின் சார்பில் பொருளாதாரத்தில் நலிவுற்ற ஆர்வலர்கள் பயன்பெறும் வகையில் தமிழ்நாடு அரசு இட ஒதுக்கீடு, பத்தாம் வகுப்பில் பெற்ற மதிப்பெண்கள் அடிப்படையில் ஆர்வலர்கள் பயிற்சி வகுப்பில் சேர்க்கப்பட்டு கட்டணமில்லாப் பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது.

சென்னை-21 இல் உள்ள CECC மையம், அக்டோபர் 2017 இல் தொடங்கப்பட்டதிலிருந்து, வெற்றிகரமாக ஒன்பது தொகுதிகளை நடத்தியது. இதில் செப்டம்பர் 2024 வரை மொத்தம் 3,927 ஆர்வலர்கள் பயனடைந்துள்ளனர். இதற்கிடையில், அக்டோபர் 2019 இல் செயல்படத் தொடங்கிய சென்னை-5 இல் உள்ள CECC மையம், மூன்று தொகுதிகளை நடத்தியது. இதில் செப்டம்பர் 2024 வரை 813 ஆர்வலர்கள் பயனடைந்துள்ளனர்.

கோயம்புத்தூர், சேலத்தில் CECC மையங்கள் முறையே மார்ச் 7, 2023, ஜூன் 21, 2023இல் திறக்கப்பட்டன. இருப்பினும், மதுரையில் உள்ள CECC மையம் இன்னும் அதன் திறப்பு விழாவிற்காகக் காத்திருக்கிறது. பயிற்சி வகுப்புகளை வழங்குவதற்கு மூன்று மையங்களும் முழுமையாகத் தயாராகிவிட்ட போதிலும், தற்போது அவை தம் பயிற்சி வகுப்புகளைத் தொடங்க அரசாங்கத்தின் நிதி உதவிக்காகக் காத்திருக்கின்றன.

2022-2023-இல், சென்னையின் இரண்டு CECC மையங்களும் TNUSRB (165 ஆர்வலர்கள்), TNPSC குரூப் V-A (294 ஆர்வலர்கள்) போன்ற குறிப்பிட்ட தேர்வுகளில் கவனம் செலுத்தி, இந்தத் தேர்வுகளுக்குத் தயாராகும் ஆர்வலர்களின் தேவைகளுக்கு ஏற்பப் பயிற்சித் திட்டங்களைத் தயாரித்தது. அனுபவம் வாய்ந்த ஓய்வுபெற்ற மற்றும் தலைமைச் செயலக மூத்த அதிகாரிகள், பேராசிரியர்கள், கவுரவ ஆசிரியர்களுடன் இணைந்து வழங்கப்படும் இப்பயிற்சிகள், நமது பயிற்சித் தரத்தை உறுதி செய்கிறது. மேலும் இந்தப் பயிற்சிகள் பல்வேறு அரசு துறைகளில் பணிபுரிய ஆர்வமுள்ளவர்களுக்கு உதவுவதற்கான மையத்தின் உறுதிப்பாட்டை பிரதிபலிக்கிறது.

சாதனைகள்

- ✓ 2023-2024: சர் தியாகராய கல்லூரி வளாகத்தில் உள்ள CECC 8-வது அணியைச் சேர்ந்த திரு. P. கோகுல விக்னேஷ் TNPSC குரூப் 2A தேர்வில் தேர்ச்சி பெற்றுத் தமிழ்நாடு ஸ்டேஷனரி மற்றும் பிரிண்டிங் துறையில் உதவியாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.
- ✓ 2023-2024: சர் தியாகராய கல்லூரி வளாகத்தில் உள்ள CECC 8-வது அணியைச் சேர்ந்த திரு. ஜே. சுனில், TNPSC குரூப் 2 தேர்வில் தேர்ச்சி பெற்று கூட்டுறவுச் சங்கங்களின் மூத்த ஆய்வாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.
- ✓ 2023-2024: சர் தியாகராய கல்லூரி வளாகத்தில் உள்ள CECC 8-வது அணியைச் சேர்ந்த திரு. N. சத்யா, இந்திய விமான நிலைய ஆணையத் தேர்வில் தேர்ச்சிப் பெற்று, சென்னை விமான நிலையத்தில்

வாடிக்கையாளர் சேவை நிருவாகியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

- ✓ 2023-2024: சர் தியாகராய கல்லூரி வளாகத்தில் உள்ள CECC 8-வது அணியைச் சேர்ந்த திரு. கபிலன், IBPS PO தேர்வில் தேர்ச்சிப் பெற்று, SBI வங்கியில் ப்ரோபேஷனரி அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார்.
- ✓ 2023-2024: மாநிலக் கல்லூரி வளாகத்தில் உள்ள CECC 3-வது அணியைச் சேர்ந்த திரு. நவின் கிஷோர் TNPSC குரூப் 2A தேர்வில் தேர்ச்சிப் பெற்று ஜூனியர் கூட்டுறவு ஆடிட்டராக நியமிக்கப்பட்டுள்ளார்.

எனவே, போட்டித் தேர்வுகள் பயிற்சி மையம் பொருளாதார ரீதியாக நலிவடைந்த ஆர்வலர்களுக்கு ஒரு மதிப்புமிக்க ஆதாரமாகச் செயல்படுகிறது. இது போட்டித் தேர்வுகள் மூலம் அரசாங்க வேலைவாய்ப்பைப் பெறுவதற்கான அவர்களின் கனவுகளைத் தொடர உதவுகிறது.

நன்றி: போட்டித் தேர்வுகள் பயிற்சி மையம்
சென்னை.

சுதந்திரப் போராட்ட வீரர் வீரபாண்டிய கட்டபொம்மன் அவர்களின் நினைவு நாள்

படமும் / செய்தியும்

சுதந்திரப் போராட்ட வீரர் வீரபாண்டிய கட்டபொம்மன் அவர்களின் 225ஆவது நினைவு நாளை முன்னிட்டுத் தமிழ்நாடு அரசின் சார்பில் 16.10.2024 அன்று சென்னை, கிண்டி, காந்தி மண்டப வளாகத்தில் அமைந்துள்ள வீரபாண்டிய கட்டபொம்மன் அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து, திருவுருவப் படத்திற்கு மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் திரு. கே.கே.எஸ்.எஸ்ஆர்.ராமச்சந்திரன், மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு. மா.சுப்பிரமணியன், மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் திரு. பி.கே.சேகர்பாபு, நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி தமிழச்சி தங்கபாண்டியன், பெருநகரச் சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறைச் செயலாளர் திரு. வே.ராஜாராமன், இ.ஆ.ப., செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு. இரா.வைத்திநாதன், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்
(TNPSC) குரூப் – I, II, IV
பயிற்சி வினா விடைத்தாள்

1. ஆங்கிலேயர்கள் தமிழ் கற்பதற்காக ஏற்படுத்தப்பட்ட சென்னைக் கல்விச் சங்கம் தோற்றுவிக்கப்பட்ட ஆண்டு.

A) 1802 B) 1812 C) 1872 D) 1902

2. தமிழில் உள்ள எழுத்துக்களில் நெடில் உரசொலி என்று தெ.பொ.மீனாட்சி சுந்தரனாரால் கூறப்பட்ட எழுத்து.

A) வல்லினம் B) மெல்லினம் C) ஆய்தம் D) அளபெடை

3. அகநானூற்றுப் பாடல் வைப்புமுறையைப் பொருத்துக.

1. குறிஞ்சி – a) 1, 3, 5, 7, 9
2. முல்லை – b) 2, 8, 12, 18
3. மருதம் – c) 4, 14, 24, 34
4. நெய்தல் – d) 6, 16, 26
5. பாலை – e) 10, 20, 30

	1	2	3	4	5
A)	b	d	a	c	e
B)	a	b	c	d	e
C)	b	d	c	a	e
D)	b	c	d	e	a

4. புனல் நாடு என்பது ----------- நாட்டைக் குறிப்பது.

A) சேர நாடு B) சோழ நாடு
C) பல்லவ நாடு D) பாண்டிய நாடு

5. முற்று மடக்கு என்பது.

A) அடிகள் தோறும் மடக்கு வருவது
B) முதல் மூன்று அடிகளில் மடக்கு வருவது
C) முதல் இரண்டடியில் மடக்கு வருவது
D) மூன்றாம் மற்றும் நான்காம் அடிகள் மடக்கு வருவது

6. 'ஒரு நான்கு வேதத்து இருநான்கு மன்றலுள்
யாழோர் கூட்டத்து இயல்பினது என்ப'

A) களவின் இலக்கணம் B) கற்பின் இலக்கணம்
C) காமக்கிழத்தியின் இலக்கணம் D) அகப்பொருள் இலக்கணம்

7. சொல் வேறுபாட்டிற்குக் காரணமாய் அமைந்த மிகக் குறைந்த ஒலி வேறுபாட்டை ---------------- என்கிறோம்.

A) வேர்ச்சொற்கள் B) ஒலியன்கள் C) உருபன்கள் D) சொற்கள்

8. நிலையாமையை உணர்த்தி அதன் வாயிலாக வீடுபேற்றை நாடச் செய்யும் தன்மை கொண்டது.

A) முதுமொழி B) கையறுநிலை C) பொதுவியல் D) காஞ்சி

9. பாடாண் திணையுள் ஓம்படை என்னும் துறையுடன் பொருந்துவது

A) அரசனுக்குச் சான்றோர் அறிவுரை கூறுதல்

B) அரசனுக்கு மக்கள் அறிவுரை கூறுதல்

C) ஓர் அரசனுக்கு அறிவுரை கூறுவது

D) பின்னர்ப் பலித்துப் பயன்தரும் தன் சொல்வழி நடக்குமாறு பாடுவது

10. பாலை நிலத்தில் தன்னுடன் வந்த தலைவன் இறந்ததால் தலைவி வருந்துவது.

A) சுர நடை B) தலைப்பெயல் நிலை

C) முது பாலை D) ஆனந்தம்

11. ஊழினது (விதி) மிகுதியைச் சிறப்பித்துக் கூறுவது ---------- என்னும் துறையாகும்.

A) பகட்டு முல்லை B) பால் முல்லை

C) இல்லாள் முல்லை D) தேர் முல்லை

12. பொருந்தாதவற்றைக் காண்க.

A) தொல்காப்பியம் B) புறப்பொருள் வெண்பாமாலை

C) தண்டியலங்காரம் D) பன்னிரு படலம்

13. உள்ளத்தில் கிளர்ச்சியைத் தரும் எழிலுடைய தலைமகள் பால் தலைவன் தன்னுடைய உள்ளக் குறிப்பினை அறிவித்தல் செய்யாது, தனக்குத் தானே நெஞ்சினுள் கூறிக்கொள்ளுதல்

A) களவிற்குரிய இலக்கணம்

B) கைக்கிளைக்குரிய இலக்கணம்

C) பெருந்திணைக்குரிய இலக்கணம்

D) கற்பிற்குரிய இலக்கணம்

14. ------- தலைமலைந்து கூடார்மன் கொளல் குறித்தன்று' பயின்றுவந்துள்ள புறத்திணை.

A) வெட்சி B) கரந்தை C) வஞ்சி D) காஞ்சி

15. வஞ்சி வேந்தன் பகைவர் நாட்டுப் பொருள்களைக் கொள்ளையடித்தல் -------- என்னும் துறையாகும்.

A) உழுபுல வஞ்சி B) மழபுல வஞ்சி C) பேராண் வஞ்சி D) மாராய வஞ்சி

16. திராவிட மொழிகளிலேயே அதிக ஒலிகளைக் கொண்ட மொழி.

A) தோடா B) கூவி C) கூயி D) பர்ஜி

17. “சிற்றில் நற்றூண் பெற்றி நின்மகன்
யாண்டுள னோவென வினவுதி என்மகன்
யாண்டுள னாயினும் அறியே னோரும்
புலிசேர்ந்து போகிய கல்லளை போல
ஈன்ற வயிறா இதுவே” என்ற பாடல் இயற்றிய பெண்பால் புலவர்.

A) காக்கைப்பாடினியார் B) பூங்கணுத்திரையார்
C) காவற்பெண்டு D) நன்னாகையார்

18. ஒன்றை அளவுக்கு அதிகமாக உயர்த்துவதோ அல்லது அளவுக்கு அதிகமாக தாழ்த்துவதோ ---------------- .

A) எழுத்தானந்தம் B) சொல்லானந்தம்
C) பொருளானந்தம் D) ஆனந்தம்

19. ‘தெங்கங்காய் போலத் திரண்டு உருண்ட பைங்கூந்தல்
வெண்கோழி முட்டை உடைத்தன்ன மாமேனி
அஞ்சனத்து அன்ன பசலை தணிவாமே
வங்கத்துச் சென்றார் வரின்’ பயின்றுவந்துள்ள பொருள்கோள்.

A) புனல்யாறு B) அளைமறிபாப்பு C) தாப்பிசை D) கொண்டுகூட்டு

20. கூன் என்பது.

A) செய்யுளின் முதலில் வரும்.
B) பாடலின் பொருளைத் தழுவி நிற்கும்.
C) செய்யுளின் முதலில் வரும், பாடலின் பொருளைத் தழுவி நிற்கும்.
D) சொற்றொடர்களுக்கு இடையே சொல் குறைந்து போதல்.

21. கர்நாடக மாநிலத்தில் உள்ள மங்களூர்ப் பகுதியில் பேசப்படும் திராவிட மொழி

A) தோடா B) கோத்தா C) குடகு D) துளு

22. முன்பின் அசைகள் நிற்கும் இயல்பை அறிந்து பாவின் ஓசை கெடாவண்ணம் சொற்களைச் சிதைத்து ஓசை ஊட்டுவது.

A) வண்ணம் B) மெய்வாழ்த்து C) வகையுளி D) குறிப்பிசை

23. கலித்தொகை பாடிய புலவர்களைத் திணையுடன் பொருத்துக.

1. மருதம் – a) பெருங்கடுங்கோ
2. பாலை – b) இளநாகன்
3. முல்லை – c) சோழன்நல்லுறுத்திரன்
4. நெய்தல் – d) நல்லந்துவன்

	1	2	3	4
A)	b	a	c	d
B)	a	b	c	d
C)	b	d	c	a
D)	a	d	b	c

24. செய்யுளில் வரும் நுண்ணிய ஓசை---------- எனப்படும்.

A) ஆனந்தம் B) பா C) வனப்பு D) வண்ணம்

25. அம்போதரங்கத்தின் வேறு பெயர்களுள் ஒன்று.

A) எருத்ததம் B) விட்டிசை

C) பிரிந்திசைக் குறள் D) இடைநிலைப்பாடு

26. ஏழாம் நூற்றாண்டைச் சார்ந்த கூரம் செப்பேட்டில் ஐந்தே என்பது --------- எனக் காணக் கிடக்கின்றது.

A) ஐயிந்தே B) அயிந்தே C) அஇந்தே D) மாற்றமில்லை

27. நாற்சீர் அடிகளில் ஒரூஉ என்பது.

A) 1-4 B) 1-2-3 C) 1-2 D) 1-3-4

28. செந்தொடை என்பது.

A) மோனை முதலா எத்தொடையும் அமையாமல் வருவது.

B) முதல் அடி முழுவது ஒரே சொல் வருவது.

C) அளபெடைகள் வருவது.

D) எதுகை, மோனை தவிர பிற தொடைகள் வருவது.

29. உயர்திணைப் பன்மை காட்டும் பகர விகுதி ---------- காலத் தமிழில் வழக்கிழந்து விட்டது.

A) தொல்காப்பியர் காலம் B) சங்ககாலம்

C) இடைக்காலம் D) சங்கம் மருவிய காலம்

30. ஒரு சொல் ஓரிடத்தில் நின்று, செய்யுளின்கண் பல இடங்களில் நின்ற சொற்களோடு பொருந்திப் பொருள் விளைவிப்பது---------எனும் அலங்காரம்.

A) உவமை அணி B) முன்னவிலக்கு அணி

C) ஒட்டு அணி D) தீவக அணி

31. முன்னர்த் தன்னால் முயலப்பட்ட தொழிலின் பயன் அத்தொழிலால் அல்லாது பிறிதொன்றால் நிகழ்ந்ததாகக் கூறுவது--------- அணி.

A) பரியாயம் B) சமாயிதம் C) அவநுதி அணி D) இலேசம்

32. 'சிறப்பினும் பொருளினும் குணத்தினும் உண்மை
மறுத்துப் பிறிதுரைப்பது -------- ஆகும்'.

A) உதாத்த அணி B) சிலேடை அணி C) அவநுதி அணி D) தீவக அணி

33. --------- இல் தான் 'தமிழன்' என்ற சொல்லாட்சியை முதன்முதலில் காண்கிறோம்.

A) அப்பர் தேவாரம் B) சம்பந்தர் தேவாரம்

C) சுந்தரர் தேவாரம் D) மாணிக்கவாசகர் பாடல்கள்

34. 'மற்ற நாட்டுடன் தொடர்பு கொள்ளும்போது மொழித்தொடர்புக்கும் வழிகோலுகிறது' என மொழியியல் பேரறிஞர் --------- கூறுகிறார்.

A) சசூர் B) யெஸ்பர்ஸன் C) பர்ரோ D) எமினோ

35. பொருத்துக.

1. பாலை	–	a) ஓரம்போகி
2. முல்லை	–	b) அம்மூவன்
3. மருதம்	–	c) ஓதலந்தை
4. நெய்தல்	–	d) பேயன்

	1	2	3	4
A)	b	d	a	c
B)	a	b	c	d
C)	b	d	c	a
D)	c	d	a	b

36. திராவிடர்களின் தொடக்ககால அண்டைய மொழி.

A) ஹீப்ரு
B) சமஸ்கிருதம்
C) முண்டா
D) கிரேக்கம்

37. அறுபடை வீடுகளைப் பொருத்துக :

1. திருச்செந்தூர்	–	a) திருச்சீரலைவாய்
2. பழநி	–	b) திருவாவினன் குடி
3. சுவாமிமலை	–	c) குன்றுதோராடல்
4. திருத்தணிகை	–	d) திருஏரகம்

	1	2	3	4
A)	b	d	a	c
B)	a	b	c	d
C)	b	d	c	a
D)	a	b	d	c

38. 'தென்னிந்தியாவில் பிறந்த அமெரிக்கர் ஒருவர்– கல்வியும் திறனும் மிக்க எழுத்தாளர் ஒருவர், எண்ணுதற்கும் பேசுதற்கும் எந்த ஐரோப்பிய மொழியையும் விடத் தமிழ் மொழிச் சிறந்தது' என்று தம்மிடம் எடுத்துரைத்ததாகக் குறிப்பிட்டுள்ள மொழியியல் ஆராய்ச்சியாளர்.

A) விட்னே
B) மாக்ஸ் முல்லர்
C) பெர்சிவல்
D) கால்டுவெல்

39. பொருத்துக :

1. ஒலியியல், ஒலியனியல்	–	a) பைக்
2. மார்ஃபாலஜி	–	b) நைடா
3. அமைப்பு மொழியியல்	–	c) ஹேரிஸ்
4. மாற்றிலக்கணம்	–	d) சோம்ஸ்கி

	1	2	3	4
A)	b	d	a	c
B)	a	b	c	d
C)	b	d	c	a
D)	a	d	b	c

40. "யாப்பு அடிபலவினும் கோப்புடை மொழிகளை ஏற்புழி இசைப்பது ------" பொருள்கோள்.

A) கொண்டு கூட்டு
B) மொழிமாற்று
C) அளைமறிபாப்பு
D) அடிமறி மாற்று

41. அன்று 'அவர் அங்கே ஒழிந்தார்' என்று கூறின் அவர் எங்கும் செல்லாமல் ஓரிடத்தில் தங்கினார் என்று பொருளாகும். ஆனால், இன்று அவர் – அங்கே அழிந்துவிட்டார் என்ற பொருளைத் தருவது.

A) பருப்பொருட் பேறு
B) நுண்பொருட் பேறு
C) மென்பொருட் பேறு
D) வன்பொருட் பேறு

42. சில விதிகளைக் கொண்டு மிகப்பல வாக்கியங்களைப் படைத்துக் கொள்வதுதான்------ இன் சிறப்பாகும்.

A) தொடரியல்
B) ஒலியியல்
C) மாற்றிலக்கணம்
D) சொற்பொருளியல்

43. தமிழில் எழுத்துக்களை---------- என்ற பெயரால் குறித்தல் மரபு.

A) கணக்கு
B) நெடுங்கணக்கு
C) கண்
D) ஓவியம்

44. மேலிருந்து கீழ் நோக்கி எழுதும் வழக்கம் கொண்ட மொழி.

A) சீனா
B) அரபி
C) செமிட்டிக்
D) பழைய பிராமி

45. அண்மைக் காலத்தில் 'உருவாக்கப் பொருண்மையியல் கோட்பாடு' -------------------, ------------------- ஆகியவர்களால் உருவாக்கப்பட்டது.

A) ராஸ், லேக்காப்
B) மாலினோவ்ஸ்கி, பிர்த்
C) மாலினோவ்ஸ்கி, ராஸ்
D) விட்ஜென்ஸ்டின், மார்க்ஸ்

46. 'கொல்லன் சேரியில் ஊசி விற்பதுபோல்' என்னும் பழமொழி இடம்பெற்றுள்ள நூல்.

A) ஐந்திணை எழுபது
B) பழமொழி
C) ஐந்திணை ஐம்பது
D) நான்மணிக்கடிகை

47. பொருத்துக :

1. 1 – 4 சீர்களில் அமைவது	–	a) கூழை
2. 1 – 2 – 3 சீர்களில் அமைவது	–	b) ஒரூஉ
3. 1 – 2 – 4 சீர்களில் அமைவது	–	c) மேற்கதுவாய்
4. 1 – 3 – 4 சீர்களில் அமைவது	–	d) கீழ்க்கதுவாய்

	1	2	3	4
A)	b	a	d	c
B)	a	b	c	d
C)	b	d	c	a
D)	c	d	a	b

48. நேரிசை வெண்பா என்பது.

A) ஒரு விகற்பத்தாலும் பல விகற்பத்தாலும் நான்கு அடி வந்து, தனிச்சொல் இல்லாதது.

B) பல விகற்பத்தான் வந்து தனிச் சொல் பெற்று வரும்.

C) ஒரு விகற்பத்தான் வந்து தனிச்சொல் பெற்று வரும்.

D) பல விகற்பம் வந்து தனிச்சொல் இன்றி வரும்.

விடைகள்

1. – B)	2. – C)	3. – D)	4. – D)	5. – A)	6. – A)	7. – B)
8. – D)	9. – A)	10. – C)	11. – B)	12. – C)	13. – B)	14. – C)
15. – B)	16. – A)	17. – C)	18. – C)	19. – D)	20. – C)	21. – D)
22. – C)	23. – A)	24. – D)	25. – C)	26. – B)	27. – A)	28. – A)
29. – C)	30. – D)	31. – B)	32. – C)	33. – A)	34. – B)	35. – D)
36. – C)	37. – D)	38. – A)	39. – B)	40. – A)	41. – D)	42. – C)
43. – B)	44. – A)	45. – A)	46. – C)	47. – A)	48. – A).	

கீழ்க்கண்ட தலைப்புக்கான சரியான பதிலை இவ்வலுவலக இணையதள மின்னஞ்சலுக்கு அனுப்பும் கட்டுரைக்கு சிறப்புப் பரிசு மற்றும் புகைப்படத்துடன் கூடிய கட்டுரை அடுத்தமாத இதழில் இடம்பெறும்.

தலைப்பு:

மதுரையில் நடைபெற்ற டிஎன் ஸ்டார்ட்அப் (TN Startup) திருவிழாவின் மூலம் மாவட்ட மக்களிடையே ஏற்பட்ட வளர்ச்சி மற்றும் தொழில் முனைவோருக்கான வாய்ப்புகள் மற்றும் தாக்கத்தை விவரிக்கவும்?

கட்டுரை அனுப்ப வேண்டிய இணையதள முகவரி: tamilarasujournal@gmail.com

இரண்டாம் இடம்

சென்னை நேரு விளையாட்டரங்கத்தில் "முதலமைச்சர் கோப்பை – 2024" போட்டிகள் நிறைவு விழாவில்,
வெற்றி பெற்ற விளையாட்டு வீரர்களுக்கு கோப்பையை
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.**மு.க.ஸ்டாலின்** அவர்கள் வழங்கினார்.
உடன், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு.**உதயநிதி ஸ்டாலின்** அவர்கள் உள்ளார்.(24.10.2024)

மூன்றாம் இடம்

தமிழரசு

Tamilarasu

R.N.I. No. 21446/70 Regn. No. TN/CCN/643/2024-2026
& WPP No. TN/PMG (CCR) 518/2024-2026

Date of Publication : 2nd week of every month
Date of Posting : 27th - 30th of every month

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.**மு.க.ஸ்டாலின்** அவர்கள்,
திருப்பூர் மாவட்டத்தில் தளி பாளையக்காரர் மலையாண்டி வெங்கிடுபதி எத்தலப்பர் நாயக்கர் அவர்களுக்கும்,
சிவகங்கை மாவட்டத்தில் சுதந்திரப்போராட்ட வீராங்கனை குயிலித்தாய் அவர்களுக்கும், தென்காசி மாவட்டத்தில்
வெண்ணி காலாடி அவர்களுக்கும் நிறுவப்பட்ட திருவுருவச் சிலைகள் மற்றும் அரங்கத்தினை திறந்து வைத்தார்.
(09.10.2024)

Published by : Dr. R. Vaithinathan, I.A.S., on behalf of Information and Public Relations Department Government of Tamil Nadu, Secretariat, Fort St. George, Chennai - 600 009 and Printed by: R.Pugazh Vendhan at TAMILARASU PRESS, Rajiv Gandhi Salai, Taramani, Chennai - 600 113. Editor : Dr. R. Vaithinathan, I.A.S.,